Registered as a News Paper in Sri Lanka


பக்கம் 24 ரூபா 16/50

දිනමුරසු වාරමලර්

ஜன. 06-12, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 596





சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## 60 சுற்றுவட்டத்துள் மாறி மாறி வரும் வருடப் பெயர்கள்

இலங்கைத் திருநாட்டைப் பொறுத்தளவில் இந்துக்களால் பார்க்கப்படும் பஞ்சாங்கங்கள் திருக்கணிதப் பஞ்சாங்கம், வாக்கிய பஞ்சாங்கம் என்பனவேயாகும். இந்த இரு பஞ்சாங்கங்களும் குறிப்பிடும் வருடாங்கள் அறுபது. அவைகளை முறையே பிரபவ, சித்ரபானு, ஹேவிளம்பி, பரிதாபி, விபவ, சுபானு, விளம்பி, பிரமாதிச, சுக்கில, தாரண, விகாரி, ஆனந்த, பிரமோதூத, பார்த்திப, சார்வரி ராட்சச, பிரஜோற்பத்தி, வீய, பிலவ, நள, ஆங்கீரஸ, சர்வஜித்து, சுபகிருது, பிங்கள, ஸ்ரீமுக. சர்வதாரி சோபகிருது, காளாயுக்தி, பவ, விரோதி, குரோதி, சித்தார்த்தரி, யுவ, விக்ருதி, விசுவாவசு, ரௌத்திரி, தாது கர, பராபவ, துன்முகி, ஈஸ்வர, நந்தன, பிலவங்க, துந்துபி, வெகுதான்ச, விஜய, கீலக, ருத்ரோத்காரி, பிரமாதி, ஜய, சௌமிய, ரத்தாட்சி, விக்ரமமன்மத, சாதாரண, குரோதன, விஷ்வ, துன்முகி, விரோதிகிருது, அட்சய இப்படிப்பட்ட பெயர்களில் அமைகிறது வருடப் பெயர்கள். இவைகள் 60 சுற்றுவட்டத்துள் அப்படியே தொடர்ந்து மாறி வரும். இப் பஞ்சாங்க பாவனைகளிலுள்ள பலாபலன்களைக் கணக்கிடாமல் ஜோதிடம் கணிக்க முடியாது. இந்துக்களது வாழ்க்கைக்கு பஞ்சாங்கம் மிக மிக அவசியம். அந்த வகையில் பஞ்சாங்கப் பெயர்களை அறிந்திருக்க வேண்டியது அவசியமே.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்- 06.

# ஆன்மீகம்



## இரட்சிப்பின் சந்தோஷம்

நாம் இரட்சிப்பின் நிச்சயமுடையவர்களாக இருக்கும்போதே நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியானவரின் சந்தோஷம் உடையவர்களாக மாறுகிறோம். இது உண்மையானாலும் ஒவ்வொரு விசுவாசியும் தனக்குள்ளே பழைய சுபாவத்தை உடையவனாக இருக்கின்றான். பரிசுத்த ஆவியானவர் இந்தப் பழைய சுபாவத்தை (மாம்சத்தை) எதிர்த்துப் போராடுகிறார். விசுவாசியானவன் மாம்சத்துக்கு இடங்கொடுத்து நினைவினாலோ, வார்த்தையினாலோ, கிரியையினாலோ தவறும்போது பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுத்தப்படுகிறார். அதற்கு மாறாக விசுவாசியானவன் அழைக்கப்பட்ட அழைப்புக்குத் தகுதியுள்ளவனாக நடந்துகொள்ளும்போது பரிசுத்த ஆவியானவர் ஆவியின் கனியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், முதலான ஆசீர்வாதங்களை அருளுகிறவராக இருக்கிறார். "சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள். (அப் 13)

இரட்சிக்கப்பட்டபின் எந்த அளவுக்கு ஆவிக்குரியவர்களாக நடந்துகொள்கிறோமோ அந்த அளவுக்கு ஆவிக்குரிய சந்தோஷம் உடையவராக இருப்போம்.

-ஆர்.பாலச்சந்திரன், அல்மா குரூப், கந்தபொல.

## சீரிய வாழ்வுக்கு நேரிய வழியில் பொருள் தேடுங்கள்

ஒவ்வொரு மனிதனும் உழைத்தே வாழ வேண்டும். தொழில் செய்யும் அடியான் மீது அல்லாஹ் பிரியமாக இருக்கின்றான். தொழில் செய்யாது சுகமாக வாழ்க்கை நடத்த விரும்புபவன் மீது அல்லாஹ் கோபமடைகின்றான் என்று கோமான் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.


ஆண்கள் உழைத்துச் சம்பாதிப்பவை ஆண்களுக்குரியவை. பெண்கள் உழைத்துச் சம்பாதிப்பவை பெண்களுக்குரியவையாகும். எனவே ஆண், பெண் ஒவ்வொருவரும் உழைப்பின் மூலம் அல்லாஹ்வின் அருள் கொடைகளைக் கோருங்கள்.

அல்குர்ஆன் - 4:32

பாடுபடுங்கள் - பயணுண்டு கஷ்டப்பட்டு உழையுங்கள் - சுகமுண்டு என்று இஸ்லாம் தன் திரு வேதத்தின் மூலம் உழைத்து வாழ்வதன் உயர்வை உறுதிப்படுத்துகிறது. உழைத்து பாடுபடாது பிறரை ஏய்த்து, வஞ்சித்து, மோசம் செய்து வாழும் வாழ்வு பாவகரமானது. சீரிய வாழ்வு வாழ்வதற்கு நேரிய வழியில் பொருள் தேடுங்கள்.

-எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.593



பரிசுக்குரிய கவிதை

### யுத்தம் தொடுப்போம்

போராடுவோம்
என்னுடன் நீயும்
உன்னுடன் நானும் அல்ல;
என்னுடன் நானும்
உன்னுடன் நீயும்,
எம் சிந்தனையை நோக்கி
நமது உள்ளங்களுடன்
நாமே போராடுவோம்.
(ஒரு சுமுகத் தீர்வுக்காக)

-முகம்மட் அன்ஸார்,
முள்ளிப்பொத்தானை.

# கவிதைப் போட்டி இல.596



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 12.01.2005

கவிதைப் போட்டி இல.596
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# உங்கள் பக்கம்

## இப் பிரச்சினை தீருமோ?

எமது கிராமம் பெவரலி தெனியாய நகரத்திலிருந்து எமது கிராமத்துக்குச் செல்லும் பாதை மிகவும் மோசமாக உள்ளது. இப் பாதை ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்டது. இங்கு பல பள்ளகுண்டு, மேடும் குழிகளால் வாகனப் போக்குவரத்துக்கு மிகவும் கஷ்டம். பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் தொழிலாளர்களுக்கும் மழை காலத்தில் பாதையில் செல்வது மிகச் சிரமம்.

மேலும் இங்கு வசிக்கும் அரசியல்வாதிகளோ தேர்தல் காலத்தில் மட்டும் வந்து பாதையைத் திருத்தித் தருகின்றோம் என்று வொல்லி விட்டுப் போய்விடுகிறார்கள். இது மட்டுமல்லாமல் மின்சாரமும் தருகின்றோம் என்று காலங்காலமாகக் கூறுகிறார்கள். பிறகு இப் பகுதியின் பக்கம் தலை வைத்துப் படுக்கிறார்கள் இல்லை.

எனவே, எம் மக்களுக்கு இந்தப் பிரச்சினையைத் தீர்த்து பாடசாலை மாணவர்களுக்குப் பாடசாலை சென்று வரவும் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் அக்கறை எடுத்து பாதையைப் புனரமைக்கும்படி கோருகிறோம்.

-மு.சிவகுமார்,
தெனியாய, பெவரலி.

## முடிவும் தொடக்கமும்

ஓய்ந்தது
ஈழப் போர்
ஆயினும்
தொடங்கிவிட்டதே
தமிழ் இனப் போர்
என்பதை
ஜாடையாகக் காட்டும்
தைரியம்
ஜாம்பவான்
தினமுரசுக்கன்றி - வேறு
யாருக்குண்டு?

-யூ.றினாஸ், ஏறாவூர் - 03.

## வித்தை(கள்)!...

ஐந்தறிவுகள்
மட்டுமா
ஆறறிவுள்ள -
சில
அரசியல்வாதிகளும்..
காட்டிக்
கொண்டிருக்கின்றார்கள்
வித்தை(கள்)!...

-அப்துல் வாஹிட்
ஏ.குத்தூஸ்,
பதுளை.

## கூத்தணியின் பெருங் கூத்து

இது என்ன
கூத்து?
எங்கள் - தமிழ்
கூத்தணியாரின்
கூத்தே பெருங்
கூத்து!!

-எம்.ராமமூர்த்தி,
வெலிமடை.

## அறியாமல் இரையாகும்....!

தமிழர் உரிமையை
காப்பதாய் எண்ணி
தம்மைத் தாமே
அடித்துக் கொல்லும்
தமிழினமே!
வேலிக்கு வெளியே
வேடிக்கை பார்க்கும்
வேட்டை நரிகளுக்கு
இரையாதல் முறையோ?

-மீராமுகைதீன் ஹாலித்,
ஏறாவூர் - 03.

இடம் உள்ள வரை இடம்
பிடித்துள்ள
வியக்க வைத்த கவிதைகள்

## அழிவு....

ஒன்றை இழந்துதான்
இன்னொன்றை ஏற்க வேண்டும்
என்பதற்காக இப்படியா?
நம் இனத்தை நாமே அழித்து
எதனை ஏற்கப் போகின்றோம்.

-தர்மலிங்கம் காந்தரூபன், கல்லடி
உப்போடை.

## தமிழனின் ஒற்றுமை

தமிழனின் ஒற்றுமை
இங்கு எந்தளவுக்கு
இருக்கிறதென்று
கிண்டலடிக்கும்
இந்த லொள்ளுதானே
வேண்டாமென்கிறது.

-எஸ்.பி.பி.கணேஷ், கொழும்பு - 02.

## சகஜம்

சாதுவாக
இருக்க வேண்டியவர்கள்
எல்லாம்
சண்டியர்களாய்
மாறிக்கொண்டிருக்கையில்
உங்கள்
சண்டைகள் ஒன்றும்
சாதனையல்ல.

-சங்கம ஹிஷாம்,
திருகோணமலை.




## எரிவதேன்?

இனம் இனத்தோடு
தலைமை தலைமையோடு
கட்சி கட்சியோடு
இம் முயல்களைப் போல்
பிய்த்துப் பிடுங்கிக்
கொண்டிருப்பதாற்தான்
இன்றும் நம் தேசம்
தீப்பற்றி எரிகிறது.

-அ.சந்தியாகோ, கண்டி.

## நடைமுறை

இனங்களுக்குள்
விரோதங்களும்
குரோதங்களும்
வளர்ந்தால்
தன் இனத்தைத் தானே
அழிக்கும் அவலமும்
வளரும்.

-வ.சந்திரபிரசாத், மாமாங்கம்.

## பகை

பாம்புக்குக் கீரி பகை
எலிகளுக்குப் பூனைப் பகை
ஆன போதும் ஏன்தான் இந்த
மனிதனே மனிதனுக்குப் பகையாய்
இருக்கிறான்? ஆதலால்
முயல்களுக்குள் பகை இருப்பதில்
ஆச்சரியமில்லைத் தா(னே)ன்.

-எம்.நதார், திருகோணமலை.

# வாசக[ர்] சாலை

## நடுநிலை முரசு!

சர்க்கரைப் பந்தலில் தேன் மழை
சொர்க்கத்தின் வாசலில் முரசறை
பக்கத்துக்குப் பக்கம் பல் சுவை
திக்கெட்டுத் திசையும் இன்னிசை!

புத்தாண்டு பிறந்தது புதுப்பொலிவுடன்
முத்தங்கள் தருகின்றாய் தித்திக்கும் இதம்
வாசகர்கள் நாங்கள் வாசமலர் நீ
பூசையிலே பூசிப்போம் வாசிப்போம் வா!

தினம் மலர்ந்து எம் வாசலில் வாசம் வீச
மனம் தான் என்ன செய்வது இடம் இல்லை
குறிஞ்சி மலர் போல் வியாழன் தோறும்
பிறந்து மணம் பரப்பு எம் மனம் சுவாசிக்கும்!

புதுப் புது ஆக்கங்களை தாங்கி வா மிக நல்லது
புதுக் கவிதையுடன் மரபுக் கவிதைக்கும் இடம் தா
பிறர் மனம் நோகாமல் பார்த்துக் கொள்
மறக்காமல் இது ஏற்று நடுநிலை கொள்!!!

-கயல்வண்ணன், வவுனியா.

## அன்பான தினமுரசே!!

காலத்தின்
தேவையறிந்து
சேவை புரியும்
உன்
பணி தொடர
என்
வாழ்த்துக்கள்

பிரிய வாசகன்,
எம். மதுராங்கன்.

## இனிய முரசே!

புத்தாண்டில் புதுப் பொலிவுடன் எமக்கு பல செய்திகளை மேலும் தரவும், உன்னைப் படிக்கும் நாம் மிகுந்த மகிழ்ச்சியில் திளைக்கவும் தொடந்து உன் வருகையை எதிர்பார்க்கிறேன். வாழ்க உன் பணி. தொடர்க உன் சேவை.

அன்பு வாசகி,
எல். கோகிலா, முல்லைத் தீவு.

## வாழ்க உன் பணி!!

உன் பணிதனை சொல்லிக்கொள்ள வார்த்தை என்னிடம் இல்லை. இருந்தும் எழுதுகிறேன். நலம்மிக்க உன் சேவை என் போன்ற உள்ளங்களை வாழ வைக்கிறது. காலத்தின் தேவை எதுவோ அதை அறிந்து பணியாற்றும் உன் இனிய சேவையை நான் மனதார வாழ்த்துகிறேன்.

வாசகன்,
மணிவண்ணன், காத்தான் குடி.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


கொடூரமான கடற் கொந்தளிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் உடைமைகளை/உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். முரசு:- ஆசிரியர் குழு + ஊழியர்கள்

# ‘சுனாமி’ அகதிகளுக்கு ஐரோப்பிய நாடுகளில் புகலிடம்!

இலங்கையில் கடந்த மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட ‘சுனாமி’ கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வர்களின் நெருங்கிய உறவினர் களுக்கு ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் பெற்றுத் தரும் முயற்சிகளில் பிரிட்டன் தொழிற்கட்சி எம்.பி.யான தேவ ஆதித்திய ஈடுபட்டுள்ளாரென்று லண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன. வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் வடமேல், மேல் மாகாணங்களைச் சேர்ந்த இலங்கையர்களுக்குப் புகலிட வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்ற யோசனையை ஐரோப்பிய யூனியன் நாடுகளின் சோஷலிச மற்றும் தொழிற்கட்சி எம்.பி.க்களின் குழுக் கூட்டத்தில் கொண்டுவரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியன் நாடுகளின் சோஷலிச எம்.பி.க்களின் அமைப்பில் அங்கம் வகிக்கும் இவர், முதலில் அந்த அமைப்பில் இரு வாரங் களுக்குள் தமது யோசனையை முன்வைக்கவுள்ளதாகவும், பின்னர் ஐரோப்பிய நாடுகளின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கொண்டுவந்து நிறைவேற்றவுள்ளதாகவும் லண்டனில் தேவ ஆதித்திய எம்.பி.க்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கை யில் கடல்கொந்தளிப்பால் பாதிக்கப் பட்ட பாணந்துறைக்கு அண்மையி லுள்ள மொரட்டுவையைப் பூர்வீகமாகக் கொண்ட இவர், பிரிட்டனில் குடியேறி தொழிற்கட்சியில் இணைந்து, தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று கிட்டத்தட்ட பத்து வருடங்களாகப் பிரிட் டன் பாராளுமன்ற உறுப்பினராகப் பணிபுரிந்து வருவது குறிப்பிடத் தக்கது.

அண்மைய அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நெருங்கிய உறவினர்கள் பிரிட்டனிலோ, ஏனைய வளர்ச்சி பெற்ற ஐரோப்பிய நாடு களிலோ இருந்தால் அவர்களின் அனுசரணையூடாக இலங்கையர்களை அழைக்கும் முயற்சியில் இவர் ஈடுபட் டுள்ளார். அரசியல் தஞ்சம் பெற்றவர் களோ அல்லது அரசியல் புகலிடத் துக்காக விண்ணப்பித்துவிட்டுக் காத் திருப்பவர்களோ தமது நெருங்கிய உறவினர்களை அழைக்கும் வாய்ப் பினை இவர் பெற்றுத் தரவுள்ளார். ஆனால் ஐரோப்பிய நாடுகளில் இருப்பவர்களும், இலங்கையில் பாதிக்கப்பட்டு அகதி முகாம்களிலோ, உறவினர், நண்பர்களின் வீடுகளிலோ இருப்பவர்களும் இதற்காக அங்கீ கரிக்கப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியிருக்குமென்றும் லண்டன் வட்டாரங்கள் தெரிவிக் கின்றன. பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஸ்பெயின், டென்மார்க் உள்ளிட்ட பல நாடுகளுக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் இதன் மூலம் ஏற்படு மென்பது குறிப்பிடத் தக்கது.



கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சி உதவும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பத்து மில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்களை வடக்கு, கிழக்கில் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கெனக் கடந்த 29ஆம் திகதி அனுப்பி வைத்தார். நூறு மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை அனுப்பிவைக்கும் அமைச்சின் திட்டத்தின் கீழான இந்த முதற்கட்ட விநியோகத்தில் சாரங்கள், பெண்களுக்கான ஆடை வகைகள், குழந்தைகளுக்கான பால் மா வகைகள் ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டன. அமைச்சில் நடைபெற்ற இந்தக் கையளிப்பு வைபவத்தின்போது நிவாரணப் பொருட்களை அமைச்சர் கையளிப்பதையும் அவருக்கருகே அமைச்சின் செயலாளர் க.மகாநந்தன், முன்னாள் எம்.பி.யும் தற்போதைய பனை அபிவிருத்திச் சபைத் தலைவருமான எஸ்.சிவதாசன் முன்னாள் எம்.பி.யும் அமைச்சின் ஆலோசகருமான கலாநிதி கா.விக்னேஸ்வரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## கொபி அனான் வன்னி செல்வாரா?

இலங்கைக்கு வருகை தரும் ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனானையும் அவரது பாரியாரையும் வன்னிக்கு அழைத்துக் கலந்துரையாடு வதற்கான முயற்சிகளில் வன்னி யிலுள்ள புலி இயக்கத் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளோடும் கொழும் பிலுள்ள ஐ.நா.வின் உப நிறுவனங் களான யுனிசெப், யுனெஸ்கோ, ஐ.நா.அபிவிருத்தித் திட்டம், அகதிகளுக் கான ஐ.நா. உயர் ஸ்தானி கராலயம் உட்பட ஆறு ஐ.நா நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளனர். ஆனால் கொபி அனான் வன்னி செல்வதற்கான சாத்தியமெதுவும் இல்லையென கொழும்பிலுள்ள ஐ.நா. வட்டாரங்கள் கூறின.

## முல்லைத்தீவில்....

முல்லைத்தீவு, மணல்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த விஜயா :- காலை எட்டு மணியிருக்கும். கணவர் தொழிலுக்கென்று வெளியே சென்றுவிட்டார். நானும் எனது பிள்ளைகள் ஐவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். திடீரென்று பேரிரைச்சல் சத்தம் கேட்டது. நான் வெளியே வந்து பார்த்தேன். கடல் அலை பாய்ந்து வரு வதைக் கண்டேன். கையிலிருந்த கைக் குழந்தையுடன் ஓடத் தொடங்கினேன். திடீ ரெனப் பாய்ந்த அலைக்குள் சிக்கி நான் சிறிது தூரம் இழுத்துச் செல்லப்பட்டேன்.ஒரு மரத்துக்குள் நான் சிக்கிக்கொண்டேன். எனது கையிலிருந்த குழந்தை தவறிவிட்டது. இதற்கிடையில் அலை மீண்டும் கடலுக்குள் சென்றுவிட்டது. எனது வீட்டைக் காணவில்லை. நான் மீண்டும் எழுந்து முன்னோக்கி ஓடினேன். மீண்டும் ஒரு பெரிய அலை எழுந்து வந்தது. ஓடிக்கொண்டிருந்த என்னை இழுத்துச் சென்றது. நானொரு பெரிய மரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். அந்த அலையும் திரும்பிப் போய்விட்டது. சுமார் ஒரு மணித்தியால யத்துக்குப் பின்னர் சிலர் வந்து என்னைக் காப்பாற்றினார்கள். என் முழுக் குடும்பமுமே அழிந்துவிட்டது. நான் இனி வாழ்வதில் என்ன பயன்? என வாழ்வில் நம்பிக்கையிழந்து தெரிவித்தார்.

## கனடாவும் உதவுகிறது

வட சுமாத்ரா பூமியதிர்ச்சியாலும் கடற்கொந்தளிப்புகளாலும் பாதிக்கப்பட்டு அகதியான பன்னிரண்டு நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு குடியுரிமை வழங்கி உதவ கனடா முன்வந்திருப்பதாகக் கனடிய குடிவரவு அமைச்சர் ஜூடி சிக்ரோவின் பேச்சாளரான மார்க் டுன் தெரிவித்தார். இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பலர் கனடாவில் வாழ்வதால் இவர்களால் இலங்கையில் பாதிக்கப்பட்ட தமது கணவன், மனைவியரை, மாமா - மாமிகளை மற்றும் பிள்ளைகளை அழைக்க முடியுமென்றும் அவர் கூறினார். ரொறன்ரோ ஸ்காபரோவில் பெருந்தொகையில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு இதுவொரு வரப்பிரசாதமாக அமையுமென்று அப் பகுதி எம்.பி.யான ஜிம் கார்கியன்ஸ் கூறினார்.

## சென்னையிலிருந்து

சென்னையிலிருந்து வெங்கடேசன் :- காலை ஆறரை மணியளவில் எனது அம்மா தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தபோது கதிரை அசைவதை உணர்ந்தார். அவர் உடனே வீட்டை விட்டு வெளியே ஓடிப்போய்ப் பார்த்தபோது மக்கள் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண் டிருப்பதைக் கண்டார். காலை ஏழரை மணியளவில் மெரினா கடற்கரைக்கு தேகப் பயிற்சிக்காகச் சென்ற எனது தந்தை கடல் கொந்தளிப்பதைப் பார்த்து எட்டு மணியளவில் வீட்டுக்குத் திரும்பி விட்டார். கடல் அலைகள் தாக்கு வதற்கு முன்ன தாகவே அவர் வீடு திரும்பியதால் தப்பி விட்டார். முழு மெரீனா கடற்கரையுமே சுடுகாடு போல் காட்சியளிக்கிறது. கிழக்குப் புறக் கடலோரம் ஒரு சவச்சாலை போல் காட்சியளிக்கிறது.

## புலம்பெயர்ந்த தமிழர்கள் பெருமளவு நிதியுதவி

தமிழ் மக்கள் புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து வன்னி மற்றும் வடக்கு கிழக்கு மக்களின் துயர்துடைக்கும் பணிக்குப் பெருமளவு நிவாரணப் பொருட்கள், மருந்து வகைகள் உட்பட கணிசமான நிதியுதவிகளும் வந்து சேர்ந்திருப்பதாக புலிகளின் பேச்சாளர் தயா மாஸ்டர் தெரிவித்தார். மேலும் உதவிகள் வந்து சேரவிருப்பதாகவும் அவர் கூறினார். இது பற்றி முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் கேட்டபோது, “புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு நிவாரணப் பொருட்களும் நிதியுதவிகளும் தங்குதடையின்றி வந்து சேருவதற்கு அரசாங்கம் அனுமதியளித் துள்ளது” என்று தெரிவித்தார்.

## கடல் கக்கித் துப்பிய எச்சங்கள்

இந்து சமுத்திரக் கடற்பரப்பில் கடந்த 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 6.58 மணியளவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியையடுத்து கடலலைகள் கொந்தளித்ததால் இதுவரை தெற்காசிய நாடுகளில் சுமார் ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்டோர் பலியாகியிருப்பதாக அஞ்சப்படுகிறது. இந்த அனர்த்தத்தில் இந்தோனேஷியாவில் ஒரு இலட்சம் பேர் இறந்திருக்கலாமென நம்பப் படுகிறது.

## புனர்வாழ்வுப் பணியில் புரிந்துணர்வு

கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதான செயலகத்துக்கு ஏற்கனவே ஒரு தொகை நிவாரணப் பொருட்களை சேகரித்து அனுப்பிவைத்த கொழும்பி லுள்ள அரசாங்க சமாதான செயலகம், மேலும் பெருந்தொகைப் பொருட்களை அனுப்பி வைக்க வுள்ளதாக அதன் தகவல் தொடர்புப் பணிப்பாளர் ஷிராணிசேரசிங்க தெரிவித்தார். சமாதான முயற்சிகளை முன்னெடுப் பதற்கான முன்னோடி நடவடிக்கையாக இது அமையுமென்றும் ஷிராணி குறிப்பிட்டார்.

இதற்கிடையில் கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபி மான மற்றும் நிவாரணப் பணிகளைத் தங்குதடையின்றி மேற்கொள்வதற் காகப் புலிகள் இயக்கமும் விசேட அதிரடிப் படையினருக் கூட்டாக முயற்சிகளில் இறங்கியுள்ளனர். அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை போன்ற மாவட்டங்களில் நடைபெற்ற கூட்டங்களில் கிழக்கு மாகாண அதிரடிப் படை உயரதிகாரிகள் தலைமையிலான குழுவினரும், புலிகளின் சிரேஷ்ட தலைவர்களும் கலந்துகொண்டனர். தனியார் இலத்திரனியல் ஊடகமொன்றின் அனுசரணையுடன் திருமலைக்கு லொறிகளில் எடுத்துச் செல்லப்பட்ட நிவாரணப் பொருட்களை இடைவழியில் மறித்துப் புலி உறுப்பினர்கள் கடத்திச் சென்றதாக வெளிவந்த செய்திகள் விஷமத்தனமானவையென்று புலிகளின் திருமலை அரசியல் துறைப் பொறுப் பாளர் இ.கௌசல்யன் தெரிவித்தார். இதுகுறித்துச் சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனத்திடம் விசாரித்து உண்மையை அறிந்துகொள்ள முடியுமென்றும் அவர் கூறினார். இதேவேளை, புலிகளோ, அரசாங்க அதிகாரிகளோ ஐ.நா.சிறுவர் அவசர நிதியம் (யுனிசெப்) வடக்கு, கிழக்குக்கு அனுப்பிவைத்த பொருட்களை எவராவது கையாடினார் களென்று புகார் தெரிவிக்க வில்லையென்று ‘யுனிசெப்’பின் நிர்வாகப் பணிப்பாளர் திருமதி கரோல் பெல்லாமி தெரிவித்தார்.

## சவூதியிலிருந்து....

சவூதி அரேபியா, ரியாத்திலிருந்து லொரி :- இலங்கையைச் சேர்ந்த அந்தத் தொழிலாளி 27ஆம் திகதி காலையில் வேலைக்கு வந்தபோது மிகச் சோர்ந்த முகத்துடன் காணப்பட்டார். இலங்கையிலுள்ள அவரது குடும்பத்தவர்கள் பாதுகாப் பாக இருக்கிறார்களாவென்று கேட்டபோது அவரது கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிந்தது. ஒன்பது வயதுச் சிறுவனொருவன் உட்பட தனது குடும்பத்தைச் சேர்ந்த இருவரைக் காணவில்லையென்றும் தனது வீட்டைக் கடல் நீர் அடித்துச் சென்றுவிட்டதாகவும் அவர் அழுதபடியே சொன்னார். தனது தாயாரும் சகோதரியும் பள்ளி வாசலொன்றில் தஞ்சமடைந்திருப் பதாகவும் அவர் சொன்னார். நாமும் அவரோடு சேர்ந்து ஆண்டவனிடம் பிரார்த்திப்போம்.

## தாய்லாந்திலிருந்து

சீனாவில் சன்யா என்ற இடத்தைச் சேர்ந்த பீட்டர் ஸில்விக் :- எனது மனைவி தாய்லாந்திலுள்ள புஜெட் எனப்படும் உல்லாசப் பயண துறைமுக நகரிலுள்ள கஃபீனா கடலோர ஹோட்டலில் தங்கியிருந்தார். முதலில் கடல் அலை தாக்கியபோது அவர் தனது அறையில் இருந்தார். அவரது ஹோட்டல் அறை முழுவதுமே நீர் புகுந்துவிட்டதால் அவர் வெளியே ஓடிவந்துவிட்டார். இரண்டாவது பாரிய அலை தாக்குவதற்கு முன்னர் இருபது மீற்றர் தூரத்திலுள்ள மரமொன்றில் ஹோட்டல் பணியாளரொருவரின் உதவியோடு ஏறிக்கொண்டார். அவரைப் பின்னர் பாதுகாப்பாக அதிகாரிகள் மீட்டனர். இப்போது அவர் ஆஸ்பத்திரியில் உள்ளார்.

## மீன் விற்பனை வீழ்ச்சி

கடல் மீன்களை உணவாகக் கொள் வதற்குப் பயப்படவோ அருவெறுப் படையவோ தேவையில்லையென்று கடற்றொழில் அமைச்சு பல தடவைகள் அறிவித்துவிட்டபோதிலும் நாடெங்கிலும் மீன் வியாபாரம் மோசமாகப் பாதிப்புற்றுள்ளதாக மீன் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் விற்பனை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. மன்னார், புத்தளம், யாழ்ப்பாணம் ஆகிய இங்களிலிருந்து வந்த மீன் லொறிகள் இப்போது வருவதில்லை. கொழும்பில் மீன் விற்பனை ஏன்பது சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதெனப் புறக்கோட்டை சென் ஜோன்ஸ் மீன் சந்தை வர்த்தகரான கருணாகரன் கூறினார்.

## இலங்கைக்குப் ‘பருப்புக் காட்டி’ படை நகர்வைத் தடுத்து தமிழ் மக்களைக் காத்த அரசியல் சாணக்கியர் டிக்ஷிற்

“யுத்தங்களின்போது சமரில் ஈடுபடும் எத்தரப்பினரிதும் முன்னேற்ற நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக விமானங்களிலிருந்து குண்டுகள் வீசுவது வழக்கம். ஆனால் 1987ஆம் ஆண்டு ‘வடமராட்சி ஒப்பரேசன்’ நடவடிக்கையின்போது அரிசி, சீனி, பருப்பு போன்ற உலர் உணவுப் பொட்டலங்களை வீசி, படை நகர்வைத் தடுத்தவர் டிக்ஷிற். அவரது அரசியல் சாணக்கியத்துக்கு இது நல்லதொரு உதாரணம்” என்கிறார் அரசியல் ஆய்வாளரான பெரியதம்பி மணிவண்ணன்.

“மலம் நிரம்பிய பீப்பாய்களைக் கூடப் படையினர் வடபகுதித் தமிழ் மக்களின் தலைகள் மீது போட்ட காலம் அது. வடமராட்சி இராணுவ நகர்வு தொடர்ந்தால் அப் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவரென்பதால் அதனை நிறுத்தும்படி இந்திய உயர்மட்டத் தலைவர்கள் அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த் தனவிடமும் ‘தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அதுலத் முதலியிடமும் கோரிக்கை விடுத்தனர். இலங்கை அரசின் தலைவர்கள் இக் கோரிக்கைக்குச் செவிசாய்க்கத் தவறி படை நகர்வைத் தொடர முனைந்த வேளையில், அப்போது இலங்கையில் இந்திய உயர் ஸ்தானிகராகக் கடமையாற்றிய ஜே.என்.டிக்ஷிற்றின் ஆலோசனையின் பேரில் இந்திய அரசு அந்த நடவடிக்கையை எடுத்தது. அந்தளவுக்கு அரசியல் சாணக்கியம் மிக்கவர் அவர்” என்றும் மணிவண்ணன் மறைந்த டிக்ஷித்தை நினைவு கூர்ந்தார்.

## ஊடகப் பயங்கரவாதம்

ஏற்கெனவே சுனாமி பேரழிவு அலைகளினால் பாதிக்கப்பட்டு நொந்து போயுள்ள மக்களைத் தொடர்ந்தும் அவஸ்தைக்குள்ளாக்கும் விதத்தில் சில தமிழ் இலத்திரனியல் ஊடகங்கள் நடந்துகொண்டன. கடந்த 30ஆம் திகதி இலங்கையின் கரையோரங்கள் மீண்டும் சுனாமி பேரலைகளினால் தாக்கப்படப் போகின்றனவென்று பொறுப்பற்ற விதத்தில் செய்திகளை அடிக்கடி ஒலிபரப்பிக்கொண்டிருந்ததால் மக்கள் திகில் கொண்டு ஓடத் தொடங்கினார்கள்.

# முரசம்

## அரசும் புலிகளும் இணைந்து செயற்பட்டால் சர்வதேச உதவி சகலருக்கும் கிட்டும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

**சுனாமி எனும் கடற்கோள் அனர்த்தத்தில் நாடு பேரழிவுக்கு முகங்கொடுத்துப் பத்து நாட்களா விட்டன. சோகமும் துயரமும் இன்னும் தொடர்கதையாகவே உள்ளது. முப்பதாயிரம் உயிர்களைப் பலி கொடுத்து நாடே வெறிச்சோடிப் போயுள்ளது. உடன்பிறப்புகளையும், உறவுகளையும் கடலலைக்குச் காவு கொடுத்து அநாதரவாக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் அதிகமாகவே தேவைப்படுகிறது. நிவாரண வழங்கல்களினதும் மீட்புப் பணிகளினது வேகம் தணிந்துள்ளதாகவே தெரிகிறது.**

**அரசு மீது அவதூறுப் பிரசாரம் செய்துகொண்டு சுய விளம்பரங்களுக்காக நிவாரணப் பணி செய்தவர்கள், ஒரு சாராரின் விருப்பங்களை நிறைவேற்றி இன்பப் பெருமூச்சை சுவாசிக்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்காலத்தில் கிரமமாக நிவாரணங்கள் வழங்க வேண்டிய கடமைப் பொறுப்பை அரசு ஏற்றுள்ளது. அரசுக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைத்துள்ளன. இன்னும் பெருமளவில் கிடைக்கக் கூடிய வாய்ப்புகளும் அதிகமாகவே உள்ளது. சர்வதேச நாடுகள் மிக அர்ப்பணிப்போடு இலங்கை மக்களுக்கு உதவ முன் வந்திருப்பது, இராஜதந்திர ரீதியாக இலங்கை அரசு நேச சக்திகளோடு கொண்டிருக்கும் நெருக்கத்தை உணர்த்துகிறது.**

**அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பொருளாதார ரீதியான உதவிகளோடு ஆளணி உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளமை வரவேற்கத் தக்கது. மீட்புப் பணிகளுக்காக சர்வதேச நாடுகளின் படைகள் வருகை தந்திருப்பதைச் சந்தேகித்து விஷமத்தனமான பிரசாரம் செய்வோர் மக்களின் மீள் வாழ்வுக்கும் அழிந்த நாட்டை மீளக் கட்டியமைப்பதற்கும் எதிரானவர்களாகவே கருதப்படுவார்.**

**மீண்டுமொரு யுத்தத்தின் மீதும் கண்மூடித்தனமான மனிதக் கொலைகளின் மீதும் பிரியம் கொண்டவர்களுக்கு சர்வதேசப் படைகளின் வருகை இடையூறாக அமையலாம்.**

**கொலைகளில் குளிர்காய்ந்தவர்களுக்கும் யுத்த பீதியைத் தக்கவைப்பதே தம் இருப்புகளை உறுதிப்படுத்தும் என மனப்பால் குடிப்பவர்களுக்கும் மக்களுக்கு இயல்பு வாழ்வு திரும்புவதோ சுமுகமான சூழல் உருவாவதோ எப்போதுமே விருப்பத்துக்குரியதல்ல.**

**இலங்கை அரசோடு இணைந்து மக்களுக்கு உதவும் பணியில் ஈடுபட்டால் இடைக்கால நிர்வாக சபையை வலியுறுத்த முடியாமல் போகும். அரசின் வழிகாட்டலில் சர்வதேச படைகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்துவிடுவார்கள். அதனூடாக அரச கட்டுப்பாடற்ற பகுதிகளின் உண்மை நிலை வெளி உலகுக்கு வந்துவிடும் எனப் புலிகள் அஞ்கிறார்கள் எனவும் சில கருத்துக்கள் நிலவுகின்றன.**

**கடந்த காலத்தை சுனாமியோடு கரைந்த காலங்களாக வீட்டுவிட்டு மக்களைக் காப்பற்றவும் நாட்டைக் கட்டியெழுப்பவும் புலிகளும் அரசும் இணங்கிச் செயற்பட இதுவே இறுதிச் சந்தர்ப்பம்.**

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# கடலில் கரைந்த கண்ணீர்த் துளிகள்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

நரன்

இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்குக் கரையோரங்களைப் பாரிய அளவிலும் வடமேல், மேல் மாகாணக் கடலோரங்களை ஓரளவிலும் தாக்கிய சுனாமி கடலலைகள் கிட்டத்தட்ட 45 ஆயிரம் உயிர்களைப் பலியெடுத்திருக்கலாமென ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை அரசாங்கப் புள்ளிவிபரங்களின்படி இக் கட்டுரை எழுதப்படும்போது முப்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் பலியாகியிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றபோதிலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான முல்லைத்தீவிலும் வடமராட்சி கிழக்குப் பகுதியிலும் வாகரை, பனிச்சங்கேணி, தரவை, கரடியனாறு, ஆயித்தியமலை, புல்லுமலை, சம்பூர் உட்பட கிழக்குப் பகுதியிலும் சுமார் பதினாலாயிரம் பேர் பலியாகியிருக்கலாமென சீ.என்.என். தொலைக்காட்சி ஊடகவியலாளரான ஸ்ரான் கிரான்ற் தெரிவித்துள்ளார். சீ.என்.என்.னின் ஹொங்கொங் பணியகத்தைச் சேர்ந்த இவர் குறிப்பிட்டிருக்கும் தொகை அதிகமென்றபோதிலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இறந்தோரின் தொகை சுமார் ஏழாயிரமாக இருக்கலாமென்று நம்பகமான வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. முல்லைத்தீவில் பத்துக்கு மேற்பட்ட கரையோரக் கிராமங்களை சம்பூரணமாகவே சுனாமி கடல் அலைகள் அழித்துவிட்டதாகவும் - வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில், மணற்காடு, குடத்தனை, குடாரப்பு, உடுத்துறை ஆகிய புலிக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாரிய அழிவுகள் ஏற்பட்டிருப்பதாகவும் அத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப் பகுதிகளில் கடற்புலிகளின் பல தளங்கள் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு விட்டனவென்றும் ஆகக் குறைந்தது இரண்டாயிரம் கடற்புலிகளாவது கொல்லப்பட்டிருக்கலாமென்றும் நம்பத் தகுந்த வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுனாமி கடலலைகள் வடக்கு, கிழக்கிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைத் தாக்கிய பின்ன் உயிரிழப்புப் பற்றிய தகவல்களை எந்த ஊடகங்களுக்கோ அல்லது அரசாங்க அதிகாரிகளுக்கோ வழங்க வேண்டாமென்று புலிகளின் தலைமை பீடம் வானொலிச் செய்திகளை அனுப்பியதால் உயிரிழப்புகள் பற்றிய சரியான தகவல்கள் வெளியுலகுக்குக் கிடைக்கவில்லை. அத்துடன் கடற்புலிகளின் தலைவர் சூசை, அரசியல் பொறுப்பாளர் எஸ்.பி.தமிழ்ச்செல்வன், புலிகளின் சமாதானச் செயலகத் தலைவர் புலித்தேவன் உட்படப் பல தலைவர்கள் உடனடியாகவே மீட்புப் பணிகளை முடுக்கிவிட்டனர். இவர்களும் ஆயிரக்கணக்கான புலிகள் இயக்க உறுப்பினர்களும் கடலின் கோரப்பிடியிலிருந்து சடலங்களையும் மக்களையும் மீட்கும் பணிகளை முடுக்கிவிட்டனர். இதனால்தான் கடற்கொந்தளிப்பு ஏற்பட்ட மறுநாள் மருதங்கேணியில் புலிகளின் தலைவர்களான சூசை, தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் 300 சடலங்களைப் ஒரு பாரிய குழிக்குள் போட்டு புலி இயக்கத்தவர் அடக்கம் செய்த பின்னரும் இதேபோல் பல நூற்றுக்கணக்கான இனங்காணப்படாத சடலங்கைள முல்லைத்தீவில் அடக்கம் செய்த பின்னரும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுமார் 300 பேரே இறந்திருக்கலாமென்று அரசாங்க அதிபர்களை மேற்கோள்காட்டி அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. முல்லைத்தீவில் சாலை, நாயாறு ஆகிய கடலோரப் பகுதிகளிலும் திருமலையில் சம்பூர், கூனித்தீவு, கொக்குத்தொடுவாய் மட்டக்களப்பில் வெருகல், கதிரவெளி, வாகரை மற்றும் அண்டிய புலிகளின் பகுதிகளில் 26ஆம், 27ஆம் திகதிகளில் 1500 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டனவென்று முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை இராணுவம் கடற்படை, விசேட அதிரடிப்படை ஆகியவற்றின் முன்னரங்கப் பாதுகாப்பு முகாம்களும் காவலரண்கள் பலவும் சுனாமி அலைகளால் அடித்துச் செல்லப்பட்டபோதிலும் அரசாங்கத் தகவல்கள் இதுவரை கிட்டத்தட்ட இருநூறு பேரே மரணமாகியுள்ளனரென்று தெரிவிக்கின்றன. மட்டக்களப்பிலுள்ள கல்லடி இராணுவ முகாமைக் கடல் அலைகள் அள்ளிக்கொண்டு சென்றுவிட்டன. கல்குடா இராணுவ முகாமிலும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. 232ஆவது படையணியின் கட்டளைத் தளபதி கேர்ணல் டபிள்யூ. எஸ்.எம்.குணரட்னவும் அவருடன் விடுமுறையைக் கழிக்க வந்திருந்த அவரது மகனான டிரான் தனஞ்செயவும் பலியானார்கள். கடல் அலை காவுகொண்ட மிகவும் உயரதிகாரி கேர்ணல் குணரட்ன என்றபோதிலும் ஆயுதப்படைகளைச் சேர்ந்த சுமார் பத்துக்கு மேற்பட்ட அதிகாரிகள் பலியாகியிருக்கலாமென்று நம்பத் தகுந்த படை வட்டாரங்கள் கூறுகின்றன. காலியிலுள்ள தக்சிண இராணுவ முகாம் மற்றும் பருத்தித்துறை, கிரிந்த, மணல்காடு முன்னரங்க இராணுவ முகாம்களும் திருமலைக்கு வடக்கேயுள்ள சில உப இராணுவ முகாம்களும் பாதிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை அறுகம்பே, கோமாரி, பாணம இராணுவ முகாம்களிலும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. புலிகளைப் போல் ஆயுதப் படைகளின் தரப்பிலும் சேத விபரங்கள் சரியாகவும் பூரணமாகவும்

**புலிக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மனிதாபிமான மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டர் நிறுவனங்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் புலிகள் அனுமதி வழங்காதமை பெரும் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளது.**

வெளியிடப்படவில்லையென்பது இங்கு குறிப்பிட்டுக் கூற வேண்டியதாகும். இரு தரப்புமே தமக்கு ஆளனியினரைப் பொறுத்தவரையிலும் ஆயுதங்களைப் பொறுத்தவரையிலும் பெரும் சேதம் ஏற்படவில்லையென்று கூறுவதற்குக் காரணங்கள் இருக்கவே செய்கின்றன. இருதரப்பும் தாம் தாக்குதலுக்கோ தற்காப்புக்கோ தயாராக இருப்பதாகக் காட்டிக்கொள்வதன் மூலம் எதிரணியிரையும் மக்களையும் ஏமாற்ற முனைகின்றனரென்பதே உண்மையாகும்.

பன்னிரண்டு நாடுகளைத் தாக்கிய கடல் அலைகள் எப்படி நாடு, மத, இன, சாதி பேதங்களைக் கடந்து தாக்கியதோ, அதே போன்று கரையோரப் பிரதேசங்களிலுள்ள புலிகளின் காவல் முகாம்களையும் இராணுவ முகாம்களையும் பேதமின்றித் தாக்கியுள்ளது.

புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தயாரில்லையென்றால் புத்தாண்டுப் பிறப்போடு புலிகள் நான்காவது ஈழப் போரை ஆரம்பிக்கலாமென்று பரவலாக நம்பப்பட்ட தருணத்திலேயே இயற்கையன்னை சீறிச் சினந்து இரு தரப்பையும் இரு தரப்புக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த மக்களையும் தாக்கியிருக்கிறது. இந்த நிலையில் இரு தரப்பும் இப்போதைக்கு யுத்தத்தை எதிர்கொள்ள முடியாத நிலையிலுள்ளனதென்பதே உண்மையாகும். பேரழிவு அனர்த்தங்களால் ஏற்பட்ட அழிவுகளை ஈடுசெய்யும் நிவாரணப் பணிகளுக்கு இரு தரப்புகளுமே

**புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தயாரில்லையென்றால் புத்தாண்டுப் பிறப்போடு புலிகள் நான்காவது ஈழப் போரை ஆரம்பிக்கலாமென்று பரவலாக நம்பப்பட்ட தருணத்திலேயே இயற்கையன்னை சீறிச் சினந்து இரு தரப்பையும் இரு தரப்புக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த மக்களையும் தாக்கியிருக்கிறது. இந்த நிலையில் இரு தரப்பும் இப்போதைக்கு யுத்தத்தை எதிர்கொள்ள முடியாத நிலையிலுள்ளனதென்பதே உண்மையாகும். பேரழிவு அனர்த்தங்களால் ஏற்பட்ட அழிவுகளை ஈடுசெய்யும் நிவாரணப் பணிகளுக்கு இரு தரப்புகளுமே முதன்மையளிக்க வேண்டிய கட்டாய நிலையிலுள்ளனரென்து இங்கு குறிப்பிடத் தக்கது.**

முதன்மையளிக்க வேண்டிய கட்டாய நிலையிலுள்ளனரென்து இங்கு குறிப்பிடத் தக்கது. இதேவேளை வெளிநாடுகளிலிருந்தும் சர்வதேச உள்ளூர் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களிடமிருந்தும் நிவாரண உதவிகள் பணமாகவும் பொருட்களாகவும் மருந்து வகைகளாகவும் காட்டாறு போல் கரைபுரண்டு வருகின்ற அதேவேளை ஊடகங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் என்பனவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைத் திரட்டுகின்றன. கரை தாண்டிய கடலோரப் பகுதிகளுக்கு எடுத்தும் செல்கின்றன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரியும் அதேவேளை தத்தமது அமைப்புகள், நிறுவனங்களுக்கான ஒரு விளம்பர உத்தியாகவும் இது கையாளப்படுகிறது.

கரைபுரண்டோடும் நீரில் அண்ணை பிடி, தம்பி பிடி என்பதைப் போல் மக்களின் சோகத்தை முதலீடாக்கித் தத்தமக்குச் சௌந்தர்யம் தேடும் அதிகாரிகளும் நிறுவனங்களும் ஏன் தனிநபர்களும் கூட இல்லாமலில்லை. தனியார் ஊடகமொன்று திருமலைக்கென 19 லொறிகளில் எடுத்துச் சென்ற நிவாரணப் பொருட்களை புலிகள் இடைவழியில் வழிமறித்து எட்டு லொறிகளைக் கடத்திச் சென்றதாகச் சிங்கள ஊடகமொன்று வெளியிட்ட செய்திகளைப் புலிகள் மறுத்துள்ளனர். இதேபோன்று வடமராட்சி கிழக்கிலுள்ள கடலோரக் கிராமத்தைச் சேர்ந்த 67 குடும்பங்கள் தங்கியிருந்த குடத்தனைப் பாடசாலை அகதி முகாமுக்குப் புதுவருட தினத்தன்று நள்ளிரவு புலிகள் தீவைத்தனரென்று சிங்கள ஊடகங்களும் அரச ஊடகங்களும் தெரிவித்தன. ஆனால் இராணுவத்தினரே தீவைத்ததோடு அகதிகளையும் தாக்கினரென்று தமிழ் ஊடகங்களும் தெரிவித்தன.

இதேவேளை திருமலையில் பாதிக்கப்பட்ட தமிழ்க் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நிவாரணம் வழங்கியது தொடர்பாக எழுப்பும் கேள்விகள் நியாயமானவையா இல்லையாவென்று திருமலை அரசாங்க உயரதிகாரிகள் ஆராய்ந்து பார்ப்பார்களாவென்று விடுக்கப்படும் கோரிக்கையை நாம் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. திருமலைச் செயலகத்துக்கு கடந்த 30ஆம் திகதி வரை நிவாரணப் பொருட்களுடன் வந்து சேர்ந்த பல டசின் லொறிகள் மாயமாக மறைந்தது எப்படி? இவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றவர்கள் யார்? எந்த உயர் அதிகாரியின் கையாட்கள்? கந்தளாய், கோமரங்கடவல, சேருவில, பதவிசிறிபுர, தம்பலகாமம் ஆகிய பாதிக்கப்படாத பிரதேசங்களில் அதிக எண்ணிக்கையான குடும்பங்கள் பாதிக்கப்பட்டதாகவும் பல அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கணக்கெடுக்கப்பட்டது ஏன்? எவ்வாறு? அபயபுர ரஞ்சினி, ரௌடி ராணி ஆரியா ஆகியோரின் வீட்டுக்கு நிவாரணப் பொருட்கள் கொண்ட பல லொறிகள் கோட்டைக்குள்ளிருக்கும் களஞ்சியசாலையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் உண்மையா? பொதுமக்களால் அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருட்களடங்கிய 35க்கும் மேற்பட்ட லொறிகள் இனத்துவேச அடிப்படையில் வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுவதும் உண்மையா? இவை குறித்து நாமெழுப்பிய அனைத்துக் கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அளித்த பதில் இல்லையென்பதாகும் இனம் பார்த்து, மதம், பார்த்து, மொழி பார்த்து, பிரதேச எல்லைகள் பார்த்துக் கடலலைகள் உயிர்களைக் காவு கொள்ளவில்லை. கடல் நீரால் உப்பிப் பருத்து, அடையாளம் காண முடியாத சடலங்களை ஆண்டவர்களே இறங்கி வந்தாலும் அடையாளம் காண முடியாதென்பதை இரு தரப்பு இனத் துவேஷிகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுடன் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியபோது, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு அமெரிக்க மக்களின் அனுதாபத்தைத் தெரிவித்ததோடு அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்பட வேண்டுமென்றும் புலிகளும் அரசும் இணைந்து இத் துன்பமான நேரத்தில் செயலாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருப்பதாக இலங்கை இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர். ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியும் சகல மனித சிருஷ்டிகளான பாகுபாடுகளைக் கடந்து இயற்கை மக்களைப் பலியெடுத்ததை நினைவூட்டியிருந்தார். புலிப் பிரதேச மக்களுக்கு அரசின் நிவாரண உதவிகள் வழங்கப்படுமென ஜனாதிபதி அறிவித்தபோதிலும் புலிகளின் தன்னார்வத் தொண்டர் நிறுவனமான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாகவே நிவாரணங்கள் ஏற்கப்பட்டு விநியோகிக்கப்படுமென தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளாரென்று கூறப்படுகிறது. புலிக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மனிதாபிமான மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டர் நிறுவனங்களுக்கும் அரச நிறுவனங்களுக்கும் புலிகள் அனுமதி வழங்காதமை பெரும் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

**கொடூரமான கடற் கொந்தளிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் உடைமைகளை/உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.** முரசு:- ஆசிரியர் குழு + ஊழியர்கள்

# சுனாமியின் அவலங்கள்

**வட** சுமாத்ராவின் மேற்குக் கடலின் அடியில் 9.0 ரிச்டர் அளவிலான பூமி அதிர்ச்சி இலங்கை நேரப்படி காலை 6.59க்கு ஏற்பட்டிருந்தது. அதன் பின்னர் சுனாமி கடல்கோளினால் கிழக்காசிய நாடுகள் பலவற்றில் பாரிய உயிரழிவுகளும் சொத்தழிவுகளும் ஏற்பட்டன இலங்கையைப் பொறுத்தவரை இதுவரை 29,721 பேர் இறந்துள்ளதாகவும் 5,240 பேரைக் காணவில்லை எனவும் 1,62,267 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் கிடைத்த மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இத்துடன் சுமார் 250க்கு மேற்பட்ட பாடசாலைகள் சேதத்துக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இலங்கை நாணயப்படி 40 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிவுற்றிருப்பதாக திறைசேரி அறிவித்துள்ளது. இப்படியாக வரலாற்றில் மிகப் பெரியளவில் பாதிப்புக்களைச் சந்தித்து இலங்கை அழிவின் சின்னமாகிப் போயுள்ளது. இப் பாதிப்புகளில் இருந்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவது இலகுவில் முடியாது என்பதும் வெளிநாடுகள் உதவியினால் கூட, நீண்ட காலம் எடுக்கக்கூடும் என்றும் எண்ணத் தோன்றுகிறது. தற்போதைய இலங்கை நிலைவரப்படி நீண்ட காலத் திட்டங்களை விடவும், அவசரமாகச் செய்ய வேண்டிய நிவாரணப் பணிகள் மற்றும் மக்களுக்கு நம்பிக்கை தரும்படியான செயற்பாடுகளே அவசியமாகியுள்ளன. சுனாமி எனப்படும் கடல் கொந்தளிப்பினால் குடும்பத்தில் அனைவருமாக அல்லது ஒருவர் மீதப்பட ஏனைய அனைவரும் என்றவாறாக மிக நெருக்கமான உறவுகளை இழந்து மக்கள் பரிதவித்து நிற்கின்றனர். அதிலும் சோகம், உறவுகளைக் கண்முன்னே கடல் காவு கொள்ளும்போது காப்பாற்றுவதற்கு முடியாமல் தாமும் செத்துப் பிழைத்த அனுபவங்களால் மக்கள் உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தெற்கின் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, தங்காலை ஆகிய பகுதிகளிலும், வடக்கு - கிழக்கின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், ஆகிய பகுதிகளிலும் பாதிப்புக்கு முகங்கொடுத்து உயிர் தப்பியிருப்பவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பலவிதமானவை. உணவுத் தேவை ஓரளவுக்குப் போதுமான கட்டத்தை அடைந்துள்ளது. தவிரவும், பெண்களுக்குத் தேவையான ஆடைகள், குழந்தைகளுக்குப் பால்மா, பால் புட்டி, மருத்துவப் பொருட்கள், குழந்தைகளுக்கான ஆடைகள் இதே போல் ஆண்களுக்குரிய ஆடைகள் என்பன மிக அவசியத் தேவையாக உள்ளன. சமைத்த உணவுகள் வழங்கவேண்டிய அவசரத் தேவைகள் தற்போது குறைவாயினும், சமைப்பதற்கான பாத்திரங்கள் உட்பட்ட சமையல் உபகரணங்கள் இன்றி மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். மக்கள் பாடசாலைகள், பொதுக் கட்டடங்களில் தஞ்சமடைந்துள்ளதால் போதியளவு மலசலகூட வசதிகள் இல்லாமையும் கூட மக்கள் எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினைகளாகியுள்ளன. இவற்றுக்கிடையே பெண்கள், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்களும் ஆங்காங்கே நடைபெறுவதாகச் செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இவற்றை நிவர்த்திக்கும் கடமையை ஒவ்வொருவரும் கவனத்தில் கொண்டு செலாற்றுவது நல்லது. உளவியல் ரீதியான தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கின்ற மக்கள் தமது இழப்புகளின் விபரங்களையும் தமக்குத் தேவையான விடயங்களையும் கூட விபரிக்க முடியாமல் வாழ்க்கையில் நம்பிக்கையிழந்த நிலையே காணப்படுகின்றது. இந்த இரண்டும் கெட்ட நிலையில் அந்த மக்களைச் சந்திக்கும் ஊடகத்துறையைச் சார்ந்தவர்கள் தமது ஊடக விளம்பரத்தை கருத்தில் கொண்டு அல்லது அதிகபட்சமான அனுதாபத்தை வெளிப்படுத்தி கேள்வி கேட்கின்ற போது, அனுபவித்த துயரங்களை மீண்டும் நினைவு கூர்ந்து கண்ணீர் விடுகின்ற காட்சியே சமகால சுனாமியின் நிகழ்வுகளாகப் போயுள்ளது. அவல நிலைமைகள் இவ்வாறு என்றால் மறுபுறத்தே பாதிக்கப்பட்ட மக்களின் பேரால் நடத்தப்படுகின்ற அரசியல் நிகழ்வுகள்

ஒரு நாட்டின் பிரதமரை வெளியேறச் சொல்கின்ற உரிமையோ, விளக்குமாறுகளைக் கையில் தூக்கியபடி விரட்டுகின்ற உரிமையோ தமிழ் மக்களை பாதுகாப்பதற்கான அங்கீகாரமாக அமைந்துவிடாது. இது நாகரிக உலகில் தமிழ் மக்களின் சுயகௌரவத்தைக் குறைப்பதாகவே அமையும். இதே போல் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள் நிவாரணப் பொருட்களோடு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவச் செல்லும்போது அவர்கள் தடுக்கப்படுவதும் தாக்கப்படுவதும் எந்தளவில் மக்களுக்கு செய்யும் நன்மையாகும் என்று தெரியவில்லை.

வெட்கித் தலைகுனிய வைக்கின்றது.

கிடைக்கின்ற தகவல்களின்படி, ஒவ்வொரு அகதி முகாமிலும் புலிகள் நிர்வாகக் குழுக்களை அமைத்துள்ளனர் என்றும் கூடவே அங்கு கொண்டுவரப்படுகின்ற நிவாரணப் பொருட்களைப் பங்கீடு செய்வதற்காக ரீ.ஆர்.ஓ. என்ற அமைப்பின் ஊடாக அவற்றை பொறுப்பெடுத்துக் கொள்கின்றனரென்றும் அறியக்கூடியதாக உள்ளது. இந்தச் செயற்பாடு, உதவும் உள்ளம் கொண்டவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது. இலங்கை அரசாங்கத்தோடு இணைந்து தற்போது பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு நிவாரணப் பணிகளை முன்னெடுக்க புலிகள் இணக்கம் தெரிவித்திருக்கும் இவ்வேளையில் - ஏனைய தமிழ் அமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்ய முன்வரும்போது அவற்றை மக்களின் பேரால் தடுப்பதும், உதவும் நோக்கத்தோடு வருபவர்கள் மீது தாக்குதல்களைத் தொடுப்பதும் கண்டனத்துக்குரியதாகும். இலங்கை நாடு என்ற வகையில் பாதிக்கப்பட்டிருக்கும் அனைத்து மக்களுக்கும் உதவுகின்ற வல்லமை படைத்தவர்கள் உதவ முன் வருவது வரவேற்புக்குரியதே. அந்த வகையில் முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இயற்கை அனர்த்தத்தால் மக்கள் பாதிக்கப்படுகின்றபோது யுத்த முரண்பாடுகளை மறந்து அரசியல் பேதங்களை மறந்து - இராணுவமும் பொலிஸாரும், புலிகளும், ஏனையத் தொண்டு அமைப்புகளும் மக்களுக்கு உதவியமை பலரின் பாராட்டைப் பெற்றது. அவ்வாறே தொடருகின்ற மக்களுக்கான உதவும் பணியிலும், ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்பதே பெரும் எதிர்பார்ப்பாக உள்ளது. ஆனால் இதற்கு மாறாக யாழ்ப்பாணத்தில் நடுக்குடத்தனை எனும் இடத்தில் அமைந்திருந்த அகதி முகாமொன்றில் 72 குடும்பங்களைச் சேர்ந்த 292 பேர் தங்கியிருந்தனர். அம் முகாமை அருகிலிருந்த இராணுவத்தினரே 26ஆம் திகதியிலிருந்து ஜனவரி 1ஆம் திகதி வரை பராமரித்து வந்தனர். ஜனவரி 2ஆம் திகதி அந்த முகாமுக்குச் சென்ற புலிகள் அங்கிருந்த மக்களிடம் இனிமேல் இராணுவத்திடம் எந்த உதவிகளையும் பெற்றுக்கொள்ளக்கூடாதென எச்சரித்ததாகவும், அதற்கு மறுப்புத் தெரிவித்த மக்கள் தொடர்ந்தும் இராணுவத்தின் உதவியை நாடியதால் அன்று இரவே அந்த முகாம் இனந்தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதற்கு முன்னதாக யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடவும், அம் மக்களுக்கு நிவாரணங்கள் கிடைப்பதை உறுதிப்படுத்தவும் சென்றிருந்த இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களையும் அவருடன் கூடவே சென்றிருந்த ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச அவர்களையும், தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் சிலர் வெளியேறுமாறு கோஷமிட்டு அவமானப்படுத்திய சம்பவங்களும் நடந்துள்ளன.

இப்படியான நாகரீகமற்ற செயற்பாடுகளை சர்வதேச சமூகம் எவ்வாறு கணிப்பிடும் என்பதை வன்முறை விரும்பிகளால் கிரகித்துக்கொள்ள முடியாது.

தவிரவும் ஒரு நாட்டின் பிரதமரை வெளியேறச் சொல்கின்ற உரிமையோ, விளக்குமாறுகளைக் கையில் தூக்கியபடி விரட்டுகின்ற உரிமையோ தமிழ் மக்களை பாதுகாப்பதற்கான அங்கீகாரமாக அமைந்துவிடாது. இது நாகரிக உலகில் தமிழ் மக்களின் சுயகௌரவத்தைக் குறைப்பதாகவே அமையும். இதே போல் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள் நிவாரணப் பொருட்களோடு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவச் செல்லும்போது அவர்கள் தடுக்கப்படுவதும் தாக்கப்படுவதும் எந்தளவில் மக்களுக்கு செய்யும் நன்மையாகும் என்று தெரியவில்லை. உதாரணத்திற்கு பருத்தித்துறை மக்களைப் பார்வையிடச் சென்ற ஈ.பி.டி.பி. தொண்டர்களை புலோலியில் தடுத்து கற்களை வீசித் திருப்பியனுப்பியதும், அதேபோல் திருகோணமலையில் நிவாரணப் பொருட்களைக் கொண்டு சென்ற

அலசுவது
- மதியூகி -

ஈ.பி.டி.பி. தொண்டர்களை அகதிகள் முகாமுக்குள் செல்ல விடாமல் கதிரைகளால் அடித்தும், மோசமான வார்த்தைகளைப் பிரயோகித்தும் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளைத் தடுப்பதானது மனிதப் பண்புகளை மறந்த செயலாகவே எண்ணலாம். வெளியிடப்படுகின்ற அறிக்கைகள், நடத்தப்படுகின்ற பிரசாரங்களின் படிஅரசியல் முரண்பாடுகளையும் இன, பேதங்களையும் மறந்து நாட்டின் சுபீட்சத்துக்காக எல்லோரும் கைகோர்த்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென எல்லாத் தரப்பும் பேசிக்கொண்டபோதும், உண்மையில் செயற்பாடுகளில் மிகப் பிற்போக்கான நிலைமையே காணப்படுகிறது இதில் 90 வீதம் சுயநலமும், 10 வீதம் பொதுநலமும் இருப்பதையே காணக்கூடியதாக இருக்கிறது.

## அதிரடி அய்யாத்துரை



**பார்ளிமெண்ட்** எலெக்ஷன் முடிஞ்ச கையோட பாஸ்போட்ட தூசுதட்டி பறந்துருப்பார் எண்டு நினைச்சா எங்கேயோ பதுங்கி இருந்துபோட்டு இப்ப பாய்ஞ்சு காட்டியிருக்கிறார் சீறுற காந்தர். என்ன பாய்ச்ச லெண்டு யோசிச்சுப் போடாதேங்கோ. சனத்துக்கு உதவிற நோக்கத்தோடு நிவாரணம் கேட்டு எங்கயும் கையேந்தித் திரிஞ்சிருந்தால் பாராட்டி இருக்கலாம். ஆனால், உலகப் பொலிஸ்காரப் படையள் இலங்கைக்கு வரப்போகுதெண்ட செய்தி பரவின உடனேயே தன்ர குள்ளநரிக் குணத்த வெளியால சொல்லியிருக்கிறார். எப்பிடி எண்டு தெரியுமோ? ஆப்கானிஸ்தானிலயும், ஈராக்கிலயும் உலகப் பொலிஸ்காரர் உள்ளதையும் அழிச்சுப் போட்டாங்களாம். இப்ப எங்கட நாட்டுக்கும் மீட்புப் பணி எண்ட பேரில நுழைஞ்சு போட்டாங்களாம். மீட்புப் பணி மட்டுமல்லாம வேறு சில பணியளிலயும் அவையள் ஈடுபடுவினம் எண்டு தான் நினைக்கிறாராம். வேடிக்கை என்னவெண்டால் அவையள வரக் கூடாதெண்டு தென்பகுதியில இருக்கிறவையள் போராட்டம் நடத்த வேணுமாம். பாதிக்கப்பட்டவையளுக்கு யாரெண்டாலும் உதவட்டும் எண்டு அரசாங்கம் நினைக்கேக்க ஆளுக்கு மட்டும் ஏன்தான் புத்தி இப்பிடிப் போகுதோ.

**ஆளுந்** தரப்பார் அனுப்பி வைக்கிற நிவாரணங்கள் எங்கட மக்களுக்குக் கிடைக்குதில்லையெண்டு ஒவ்வொரு நாளும் செய்தி வருகுது. ஆனா முல்லைத்தீவில இருக்கிற அரசாங்க அதிபர் பி.பி.சி.க்குப் பேட்டி கொடுக்கேக்க, ஆளுந் தரப்பு அனுப்பி வைக்கிற பொருட்கள் எல்லாம் தங்களுக்குக் கிடைக்குதெண்டும் இன்னொரு மாசத்துக்குத் தேவையான பொருட்கள் தங்களிட்ட இருக்கெண்டும் சொன்னவர். அப்ப... கிடைக்கயில்லை எண்டு வதந்தியைக் கிளப்பி விடுறவையள் என்ன நோக்கத்தோட சொல்லினம் எண்டு மக்களுக்குத் தெரியுதோ? எல்லாப் பேதங்களையும் மறப்பம் எண்டு சொல்லிறவையளே மனச்சாட்சியை மண்ணுக்குள்ள புதைச்சுப் போட்டுத்தான் இப்பிடி அறிக்கைகளை விடுகினம். சுனாமி வந்ததில பாதிப்பு மக்களுக்கெண்டால், லாபம் இந்த மாதிரி விஷமத்தனமாப் பேசிறவையளுக்குத்தானாக்கும்.

**கடல்** கொந்தளிச்சுப் பாதிச்ச சனங்கள் பிரமை பிடிச்சுப்போய் இருக்கினம். அவையளிட்டப் போய் நாங்கதான் எல்லாம் செய்யிறம் எண்டும், மற்றவையளிட்ட எதையும் வாங்காதயுங்கோ எண்டும் ரெண்டெழுத்தார் பிரசங்கம் செய்யினமாம். ரெண்டெழுத்தாற்ர பிரசங்கத்த இந்தக் காதால வேண்டி அந்தக் காதால விடுகுதாம் சனம். யார் குத்தினா என்ன அரிசியானாச் சரிதான் எண்ட கதையாம். 20 வருஷத்துக்கு மேல யுத்தம் நடத்தி 60 ஆயிரம் பேரைச் சாகக் குடுத்திட்டம். இப்ப என்னெண்டால் 5 நிமிசத்தில 30 ஆயிரம் பேரைக் கடலழிச் சுட்டுது. மனிசன்ர வாழ்க்கை இப்பிடியிருக் கேக்க, அவனிட்ட வேண்டாத, இவனிட்ட வேண்டாத எண்டு இன்னும் தங்கட ஏகபோக நினைப்புகளைத் திணிக்கிறது சரியில்லை யெண்டு சனம் சொல்லுது.

**யாழ்ப்பாணத்தில** கடலலையால பாதிக்கப்பட்டு தஞ்சம் புகுந்திருக்கிற மக்களப் பார்க்க நாட்டின்ர பிரதமர் போனவரல்லோ, அவர் போறதுக்கு முன்னமே குதிரைக் கஜேந்திரன் எம்.பி. பெடியளக் கூப்பிட்டு பிரதமர் வாறார் எண்டதையும், அவருக்கு விளக்குமாத்தக் காட்ட வேணும் எண்டதையும் விளங்கப்படுத்துறதுக்கு பெரும் லெக்ஷர் அடிச்சவராம். காட்டின விளக்குமாறுகளப் பாத்தியளெண்டால் கூட்டினதா இல்லாம புத்தம் புதிசா இருந்திச்சுதாம். கடயில இருந்ததுகள கடனுக்கு வாங்கிக் குடுத்தவராம். அதுமட்டுமே! பிரதமர் முகாமுக்கு போன இடத்தில மொழிபிரச்சினை வந்ததால பாதிரியார் ஒருவர் பிரதமருக்கு உதவினவராம். உதவினது குற்றமெண்டு ஓரமாக் கூட்டிக்கொண்டு போய் பெடியள் அவருக்கு உதைஞ்சவையளாம். பாத்தியளோ குதிரையோடி வந்தவரின்ர குறுக்கு விசாரணையை.

**கடற்** கொந்தளிப்பு வருமெண்டதையும் இலங்கையும் பாதிக்கப்படும் எண்டதையும், முன்கூட்டியே அறிவிச்சிட்டினம் எண்டு பசுபிக் சுனாமி முன்னெச்சரிக்கை மையம் சொல்லியிருக்கு. 7.40க்குச் சொன்ன பிறகு 12 நிமிசத்தால திரும்பவும் சொன்னவையளாம். எங்கட நாட்டுக்காரர்தான் கவனத்தில எடுக்காம கைவார் அடிச்சுக்கொண்டு திரிஞ்சிருக்கினம். கவனமில்லாத அதிகாரிகளின்ற செயற்பாட்டால நாடு அழிஞ்சு போட்டுது. இனியெண்டாலும் கவர்மெண்ட் உந்த மாதிரி லாயக்கில்லாத வையளுக்கு சம்பளம் கொடுத்து வைச்சிருக்காமல் உருப்படியானவையளை நியமிக்க வேணுமெண்டு பாதிக்கப்பட்ட வையள் கோரிக்கைகள விடுத்திருக்கினம்.

**நாட்டுப்** பிரச்சினையும் ஒரு விதத்தில சுனாமிதான். அதுக்கும் மக்கள் சாகினம், அகதிகளாகப் போகினம், உதவிகள் தேவைப்படுகுது. என்ன ஒரு வித்தியாசமெண்டால் ஒரிஜினல் சுனாமியில மொத்தமாய்ச் சாவினம். போர்ச் சுனாமியில அப்ப அப்பச் சாவினம். எப்பிடி ஒரிஜினல் சுனாமி இனி வரக் கூடாதெண்டு நினைக்கிறமோ, அதுபோல போர்ச் சுனாமியும் இனி வரக் கூடாதெண்டுதான் சனம் நினைக்குது. உலகப் பொலிஸ்காரர் நாட்டிலயிருந்தும், எங்கட அயல் நாட்டிலயிருந்தும், அதுக்குப் பக்கத்து நாட்டில இருந்தும் படையள் மீட்புப் பணிக்காக வந்து இறங்கினம் எண்டு அன்றாடம் செய்திகள் வெளிவருகுது. வந்தவையள் எங்கட நாட்டுப் போர்ச் சுனாமிக்கும் தீர்வைக் கண்டிச்சினம் எண்டால் நல்லாயிருக்குமெல்லோ!

கொடூரமான கடற் கொந்தளிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் உடைமைகளை/உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். முரசு:- ஆசிரியர் குழு + ஊழியர்கள்

# ஆண்களே! பெண்மையைப் போற்றுங்கள்!

ஆண்களுடன் சரிநிகர் சமானமாகப் பெண்கள் வாழ வேண்டும் என்று கனவு கண்டான் பாரதி. இன்னும் சொல்லப்போனால் ஆணும் - பெண்ணும் சமூகத்தின் இரு கண்கள். கண்கள் இரண்டானாலும் பார்வை ஒன்றே. இதுபோலத்தான் பெண்களையும் ஆண்கள் சமத்துவமாகப் பேணவேண்டும் என்று பாரதியார் சொன்னார்.

அந்தப் பெண்ணினம் இன்று கேலிக் கூத்தாக மாறிவிட்டது கண்டு மன வேதனைப்படாமல் இருக்க முடியாது. ஒரு பெண் என்பவள் - தாயாக - தங்கையாக - மனைவியாக - மகளாக - பேர்த்தியாகக்கூட ஒரு ஆணின் வாழ்நாளில் வலம் வருகிறாள். வயதானபின் பாட்டியாகப் போற்றுகிறோம். தாயாக மதிக்கிறோம் பெற்றவளை. தங்கையாகப் பார்க்கிறோம் உடன் பிறந்தவளை, பாசத்தோடு பார்க்கிறோம் பெற்ற மகளை. இவர்கள் எல்லோரும் பெண் இனத்தைச் சேர்ந்தவர்கள். அது குடும்ப உறவு. இரத்த உறவு.

ஆனால், வேற்றுப் பெண்கள் விடயத்தில் எல்லாம் தலை கீழ். புகைவண்டியில் பயணம் செய்தாலும் சரி, பஸ்ஸில் பயணம் செய்தாலும் சரி, பெண்கள் தமது பயணத்தை நிம்மதியாகத் தொடர முடிவதில்லை. அந்தளவுக்கு ஆண்களின் சேஷ்டைகள் அதிகரித்துவிட்டன. பெண்கள் கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

புகைவண்டிப் பயணத்தில் இவர்களின் தொல்லைகள் அதிகம். போதைப் பொருளைப் பாவித்துவிட்டு அந்தப் போதையில் தாங்கள் எப்படி, எவ்வாறு கீழ்த்தரமாக நடந்துகொள்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளக்கூடிய அறிவே அவர்களுக்கு இருப்பதில்லை.

பாடசாலை மாணவிகளையும் இவர்கள் விட்டுவைப்பதில்லை. தங்களது தரக்குறைவான செயல்களால் மகளாக - தங்கையாக - தாயாக மதிக்க வேண்டிய பெண் பிறப்புகளை இழிவுபடுத்தும் நிலையே இன்று மலிந்து காணப்படுகின்றது. சமூகச் சீரழிவுக்கு இதைவிட வேறு ஒன்று தேவையில்லை.

எனவே, இத்தகைய ஆண்கள் சிந்திக்க வேண்டும். கேளிக்கை நோக்கோடும், பொழுதுபோக்கு நோக்கோடும் பெண்களை நையாண்டி செய்வது, வம்பு தும்பு செய்து, அவமானத்துக்கு உள்ளாக்கும் இழிவான செயல்களைப் புரிவதிலிருந்து விடுபட வேண்டும். பெண்மைக்கு மதிப்பளிக்க வேண்டும். பெண்கள் தாய்க்குலம் என்பதால் அதைப் போற்ற வேண்டியது ஆண்களின் கடமை. ஒரு மனிதன் வாழ்வில் தாயாக - தங்கையாக - மகளாக ஏன் மனைவியாகப் பல்வேறு வடிவங்களில் வலம் வரும் பெண் இனத்தைப் பேண வேண்டியது ஆண் குலத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

ஆகவே, ஆண்களே! பெண்மையைப் போற்றுங்கள்!

*—ஏ.தேவி.*

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத் தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி
- **ஆசிரியர்**

# சுய சிந்தனையும் உலக சாமாதானமும்

மனிதன் எதையும் அறி வதற்கு அறிபவர், அறிவு, அறியப் படுவது என்ற மூன்றும் அவசியம். நான் என்பது ஒரு 'நான்' தானே. ஆகவே என்னை நான் (தன்னைத் தான்) அறிய முடியாது.

நான் யார் எனத் தனக்குத் தானே கேள்வி எழுப்பினால் மௌனமே பதிலாகும். (மோன மென்பது ஞான வரம்பு) தன்னைத் தான் அறிய முடியாது என்பதையே நாம் அறியமுடியும்.

எவரும் தானே தெரிவு செய்யாத (சூழல் - சூழ உள்ளோரால் தீர்மானிக்கப்பட்ட) தன் பிறப்பு நிகழ்ந்த கற்பனை எல்லையிடப்பட்ட (உலகம் உண்மையில் எல்லைகளற்றது) பிரதேசம் (ஊர், தேசம் என்பன), அத்துடன் பிறப்பின் பின்னர் ஏற்பட்ட பழக்கங்களான மொழி, மதம், கலாசாரம் என்பன தனக்குப் பரிச்சயமாகிவிட்ட காரணத்தால் அதுவே சிறந்தது, சரியானது, பாதுகாப்பானது அல்லது அதுவே நான் என முடிவு செய்வதும், அதனால் மனிதரிடையே பிரிவினை, வெறுப்பு, வெறி இவற்றால் கொலைகளும், அழிவுகளும் உலகில் தொடர்வதும் பகுத்தறி விற்கும் நீதிக்கும் பொருந்துமா?

சூழலிலிருந்து மரபாகப் பழகிக்கொள்ளும் மேற்படி ஈடுபாடுகளை சந்தர்ப்ப சூழலுக் கேற்ப மாற்றுதல் அல்லது கைவிட லைச் செய்யாது அவற்றிலே வெறிகொண்டு அடிமையாகும் போது அல்லது மரபடிமை களுக்கான எசமானர்களால் (அவர்கள் தலைவர்களல்ல) மரபடிமையாக்கப் படும்போது (மனமுதிர்வு - விழிப்புணர்வு - சுயசிந்தனை என்பவற்றின் குறைபாடுகளால்) பல கொலைகளுக்கும், அழிவு களுக்கும் காரணமாகிவிடுகின்றனர். இது மரபடிமைத்துவப் பிரச்சினை ஆகும்.

மொழிகள், மதங்கள், கலாசாரங்கள் என்பன ஆரம்பம் முதல் தொடர்ந்து மாற்றங்களுக் குட்படுகின்றன (இன்றுவரை). உதாரணமாக வள்ளுவர் கால தமிழ் எழுத்துக்கள் இன்று இல்லை. பனங்கருக்குமட்டை ஆயுதத்திற்குப் பதில் நவீன ஐரோப்பிய - அமெரிக்க ஆயுதங்கள், வேட்டி, சால்வை முறை அருகி காற்சட்டை சேர்ட் அணிதல், மிதியடிக்கட்டை, இப்போது கிடையாது. பல மதங்கள் - மொழிகள் கொள்கைகள் திரிபடைந்தும், அற்றும் போய் விட்டன. இவ்வாறு மாறுபவற்றை எக் காலகட்டத்தில் நிறுத்தி எமது கலாசாரம் என்பது தன்னையே அறியாமல் இவற்றை தனித்துவம் என்று (மனிதத்துவத் தையும் தவிர்த்து) பற்றிக்கொண்டு (மாறிக்கொண்டிருப்பதை பற்றமுடியுமா?) போரிட்டு அழிய வேண்டுமா?

எமது பிரதேசம் என்பது கற்பனை எல்லையிடப்பட்ட ஊரா? மாவட்டமா? மாகாணமா? தேசமா? அல்லது உண்மையில் எல்லை களற்ற உலகமா? அல்லது பிரபஞ் சமா? எல்லையற்ற பிரதேசத்தை கற்பனை எல்லையிட்டு குறுகிய மனப்பான்மையால் குறுகலாக்கி, பெற்ற தாய் - தற்தையரைக் கேவலப்படுத்தும் விதமாக அதனையோ (பிரதேசத்தையோ) அல்லது தொடர்பை இலகுவாக்க மனிதரின் கற்பனையில் தோன்றிய மொழிகளையோ அல்லது மனிதருக் காக ஏற்பட்ட மதங்களையோ தாயென்றும், தந்தையென்றும் குறிப்பிடுவதும், தன்னைச் சிறுமைப்படுத்தி, இவற்றை 'உயிர்' எனக் கூறுவதும் நிச்சயமாக அழிவுக்கான முயற்சிகளே.

உலகம் ஒரு தேசமானால் - உகந்த ஒரு மொழியை உபயோ கித்தால் - மதத்துவ கொள்கைகளை அலசி ஆராய்ந்து தத்தமது அறிவு - மனப்பாங்கிற்கேற்ப பல மதங்களிலிருந்தும், சுயசிந்தனை யிலும் ஏற்பட்ட கொள்கைகளின்படி (18 வயதின்பின்பே மத - தத்துவ விடயங்களில் ஈடுபட வேண்டும்) வாழ்ந்தால் ஆரோக்கியமானதே என தக்கோரால் நிரூபிக்கப்பட்ட அம்சங்கள் கலாசாரமாகிவிட்டால் உலகில் யுத்த ஆபத்து நிலவுமா?

இத்தகைய எல்லைகளற்ற இயல்பான உலகை மீண்டும் ஏற்றுக்கொள்வதைத்தான் எமது வரலாற்றுக் கடமை எனக் கூற வேண்டும். எமது முன்னோர்கள் காடுகளைவிட்டு நகராமல் சிந்து, யூப்பிரதீஸ் - தைக்றிஸ், நைல் நதிக்கரைகளுக்குச் சென்று குடியேறாமல் குறுகிய சொந்த மண் கொள்கையில் தமக்குத் தாமே எல்லையிட்டிருப்பின் மனித நாகரிகங்கள் தோன்றியிருக்க முடியுமா?

வேறு கிரகங்களில் கூடக் குடியேற முயற்சிக்கும் இக் காலத் தில் இவ்வாறு எல்லையிடுவது 'வரலாற்றுத் துரோகம்' எனக் கூறப்படலாம்.

அடிமைகளாயிருப்போர் விழித்துக்கொள்ளாவிடில் அல்லது விழிப்பு ஏற்பட்டாலும் எழுவதற்கு திராணியின்றி எசமானர்களின் முன்னால் பயந்து நடித்துக் கொண்டிருப்போர் செயலில் இறங்காவிடில் உலக மக்களுக்கு இந்தத் தீய எசமானர்கள் வெறி யூட்டி, மேலும் அடிமைகளாக்கி, உலகை அழிவுப் பாதையில் இட்டுச் செல்வதைத் தடுக்க முடியாது.

விடுதலை அல்லது சுதந்திரம் என்பது மனிதருக்காகவும், மனிதராலும் புனையப்பட்ட தேசம், மதம், மொழி, கலாசாரம் என்ப வற்றிற்கு அல்ல. இவற்றின் மீதுள்ள அளவு மீறிய பற்றிலிருந்து மனிதரே விடுதலையடைய வேண்டும். இதுவே மனித சுதந்திரம்.


இதைவிடுத்து உரிமைகளி லெல்லாம் மிக உயர்ந்த உரிமை யான உயிர்வாழும் உரிமையைக் கூட கற்பனைகள் பறிக்குமளவிற்கு மனிதர் வெறியராவதா?

கற்பனையான தேச எல்லை களுக்கான உலகின் மொத்த இராணுவச் செலவும், அழிவுப் பெறுமதியும் அத்துடன் உல கெங்கும் நடைபெறும் உள்நாட்டு யுத்தங்களின் அழிவுப் பெறுமதியும் செலவீடும் என்பவற்றின் மொத்தப் பணப் பெறுமதியை உலகின் மொத்த அபிவிருத்திக்கான முதலீட்டுப் பெறுமதியுடன் ஒப்பிட்டு அளந்து அறியலாம்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் சுயசிந்தனைச் செயற்பாட்டால் உலகில் சமாதானம் ஏற்படட்டும்.

## பணப்பரிசுப் போட்டி

**பணப்பரிசு போட்டிக்கான முடிவுகள் இவ்வாரம் அறிவிக்கப்பட இருந்தன. ஆனால் சுனாமி அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட நெருக்கடியால் பிரசுரிக்கப்படவில்லை அடுத்தவாரம் போட்டியின் வெற்றியாளர்கள் பற்றிய விபரம் பிரசுரிக்கப்படும்.**



நல்லதே ! நினைப்போம் நல்லதே செய்வோம்
46 வருடம் நிரூபிக்கும் மலையாள மாந்திரீகம்

1. எனது 46 வருட அனுபவத்தைக் கொண்டு அனுதினமும் வரும் வாடிக்கையாளர்கள் என்னை நேரில் கலந்து ஆலோசனை பெற இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
2. வெளிநாட்டவர்களுக்கும் என்னிடம் தொலைபேசியில் கலந்து பேச வாய்ப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அனைத்து தொலைபேசிகளுக்கும் C.L.I. வசதியுள்ளது.
3. ஜாதக ஜாதகிகள் எதிர்கால வாழ்வு, ஆய்வு கண்ணோட்டம், நேரில் வியக்கத்தக்க முறையில் என்னால் அருள் ஞானத்தால் கூறமுடியும். நடந்தது நடக்க போவது, நடக்க இருப்பது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, நினைப்பது எப்போது நடக்கும், என்பதற்கெல்லாம் நேரில் வந்தால் என் அருள் ஞான சித்தத்தால் தெட்டத் தெளிவான பதில் கிடைத்தல்.
4. உங்கள் தேவைகளுக்கு நேரில் மட்டும் எந்த நாட்களும் முன் அறிவித்தல் இன்றி வருகை தரலாம்.
5. ஆணித்தரமாக கைரேகை பார்த்து பலன் தரும் சேவையும் உண்டு.

உலக மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர். டாக்டர். தெய்வீக ஞான குரு P.K. சாமி ஐயாவின் பிரதான அனுசரணையுடன் ஞாயிறுதோறும் சக்தி தொலைக்காட்சியில் இரவு 7.00மணிக்கு வேலன் தொடரை தொடர்ந்து பாருங்கள்

எனது P.K. Saamy Associate (Pvt) Ltd. ஒருங்கமைப்புடன் செயல்படும் நிறுவனத்தின் ஒரு அங்கமே எனது மலையாள மாந்திரீக உச்சாடன பீட பிரிவு.

பேராசிரியர். டாக்டர். P.K. சாமி (J.D.G.A.N.) J.P

(CLI) Nos. 2342463,2342464, 2344832, 4613124,4613133. Fax : 2344831

# விளம்பரப் பகுதி

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் **D.D. Enterprises** எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை களை முகாமையாளர் தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் **'Manager Thinamurasu'** என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் **Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: **(E-mail):- murasu@sltnet.lk**

## எழுத்தாளர்களின் கவனத்திற்கு

**மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பி.கு.**

துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்போம்.

நன்றி.

- ஆ - ர்

## இன்னொருவர் பார்வையில்

**தமிழர் அரசியல் வரலாற்றில் கட்சிகள் - இயக்கங்களுக் கிடையிலே ஒற்றுமை முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டன. இயக்கங்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த எடுத்த அனைத்து முயற்சிகளிலும் புலிகள் முரண்பட்டே நின்றனர். சி.புஸ்பராஜாவின் 'ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்' என்ற நூலிலிருந்து ஒரு பகுதி.**

# இயக்கங்களுக்கிடையே ஐக்கியம்

அரசியல் போராட்டம் என்னும் கணிப்பில் காலத்துக்குக் காலம் ஒற்றுமை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவைகள் நிரந்தரமானதாக உருவாகவில்லை. இலங்கைத் தமிழர்கள் மத்தியில் அரசியல் ரீதியாக ஏற்பட்ட முதலாவது ஒற்றுமை முயற்சி 'தமிழர் கூட்டணியின் உதயம்' எனக் கணித்துக்கொள்ளலாம்.

இந்த ஒற்றுமை முயற்சி வல்வெட்டித் துறையைச் சேர்ந்த ஞானமூர்த்தி, வேற்பிள்ளை, சபாரட்ணம் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது. இந்த மூவரதும் கடும் முயற்சியில் பயனாக இலங்கைத் தமிழசுரக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி, தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகிய கட்சிகளின் முக்கிய தலைவர்கள் 1971ஆம் ஆண்டு பெப்ரவரி 7ஆம் திகதி வல்வெட்டித்துறையில் தங்கவடிவேல் அவர்களின் வீட்டில் யாழ்ப்பாண மேயர் சி.நாகராசா தலைமையில் ஒன்றுகூடினர். கூடிய தலைவர்களில் அ.அமிர்தலிங்கம், வி.நவரட்ணம், சி.சுந்தரலிங்கம், மு.சிவசிதம்பரம், க.நடராசா, க.துரைரட்ணம், ராமகிருஷ்ணாஸ் வேலாயுதம் ஆகியவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். ஒன்றுகூடிய அனைத்துக் கட்சித் தலைவர்களும் புதிதாக அறிமுகம் செய்யப்படவுள்ள குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று குறைந்த பட்சம் ஒன்பது கோரிக்கைகளை தமிழ் மக்கள் சார்பில் வைப்பதென ஏகமனதாக முடிவு செய்தனர். எல்லோருடைய ஆலோசனையுடனும் அமிர்தலிங்கத்தால் ஒன்பது அம்சக் கோரிக்கை தயார் செய்யப்பட்டது. அன்றைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு இந்த ஒன்பது கோரிக்கைகளையும் அனுப்பிய மேயர் சி. நாகராசா இந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடாத்த நேரமும் கேட்டு எழுதினார். 'வல்வைத் தீர்மானம்' என வர்ணிக்கப்படும் ஒன்பது கோரிக்கைகளும் பின்வருமாறு :

1. சிங்களமும் தமிழும் இந் நாட்டின் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும். அவற்றின் திட்டவட்டமான உபயோகம் பற்றிய விபரங்கள் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்.

2. சிங்களமும் தமிழும் இந் நாட்டின் நீதி நிர்வாக மொழிகளாக இருக்க வேண்டும். பதிவேடுகள் முதலியவற்றில் அவ்விரு மொழிகளின் உபயோகம் பற்றிய விதிகள் அரசியலமைப்பில் சேர்க்கப்பட வேண்டும்.

3. இலங்கையின் எப் பாகத்திலும் சிங்களவரோ தமிழரோ தங்கள் தாய்மொழியில் அரசாங்கத்துடன் கருமமாற்றும் உரிமை இருத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு பிள்ளைக்கும் சிங்களவரோ தமிழரோ தங்கள் தாய் மொழியே போதனா மொழியாக இருத்தல் வேண்டும். திறமையின் அடிப்படையில் இலவசமாக அக் கல்வி வசதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

5. உயர் தரக் கல்வி நிலையங்களில் சேர்வதற்கோ அரசாங்க சேவையில் சேர்வதற்கோ தன் தாய்மொழியில் பரீட்சை எடுத்துத் தன் தகுதிக்கேற்ப சேரும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

6. அடிப்படை உரிமைகளுக்கு முரணான சட்டங்களை ஒட்டியோ நிர்வாக ஒழுங்கீனங்களைப் பற்றியோ நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கும் உரிமை அரசியலமைப்பில் அமைய வேண்டும். நீதி நிர்வாகத்தில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது.

7. இந் நாட்டு மக்களிடையே நிலவும் சாதி பற்றியும் சமயம் பற்றியும் இந்திய அரசியல் அமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகள் இங்கும் ஏற்கப்பட வேண்டும்.

8. இலங்கைக் குடியரசு சமய சார்பற்ற அரசாக இருத்தல் வேண்டும். ஆனால் பௌத்தம், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைப் பாதுகாத்துப் பேண வேண்டும்.

9. அ. இலங்கையில் பிறந்த ஒவ்வொருவரும் அவரது தந்தை அல்லது தாய் இலங்கையில் பிறந்தவராய் இருப்பின்,

ஆ. இலங்கைக்கு வெளியில் பிறந்தவராயின் அவரது பெற்றோர் இலங்கைக் குடியுரிமைக்குத் தகுதியுடையவராயின்,

இ. 15.11.1948க்கு முன்னிருந்து தொடர்ந்து இலங்கையில் வசிப்பவராகவும், இலங்கைக் குடியுரிமை உடையவராக இருப்பதற்கு விரும்புபவராகவும் இருப்பின் அவர்கள் எல்லோரையும் இலங்கைக் குடியுரிமை உடையவர்களாக ஏற்றுக் கொள்ளும் தீர்மானம் அரசியலமைப்பில் ஏற்கப்பட வேண்டும். வம்சாவழிக் குடியுரிமை உடையவர்க்கும் பதிவுக் குடியுரிமை உடையவர்க்கும் எந்த விதப் பாகுபாடும் இருத்தல் ஆகாது. எக் காரணம் கொண்டும் எவருடைய குடியுரிமையும் பறிக்கப்படலாகாது.

சந்திக்கவும், பேசவும் தனக்கு நேரமில்லை எனத் தெரிவித்து 1971 ஏப்ரல் 1ஆம் திகதி மேயர் சி.நாகராசாவுக்குப் பிரதமர் கடிதம் எழுதினார். மீண்டும் தலைவர்கள் 1972ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி திருகோணமலை நகர மண்டபத்தில் ஒன்றுகூடினர். இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி தமிழர் கூட்டணி உருவாகியது. ஒன்றுகூடிய மூன்று முக்கிய கட்சிகளின் தலைவர்களான எஸ்.ஜே.வி. செல்வநாயகம், எஸ்.தொண்டமான், ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகியவர்கள் தமிழர் கூட்டணியின் தலைவர்கள் ஆயினர். சுமார் 25 வருட கால முரண்பாடுகளின் பின்னர் தமிழ்த் தலைமைத்துவம் ஒன்று சேர்ந்தது எனச் சச்சி பொன்னம்பலம் எழுதினார். ஆனாலும் நீண்ட காலமாக ஜீ.ஜீ.பொன்னம்பலம் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைகளில் ஈடுபடாது ஒதுங்கி இருந்தார். இந்த நடவடிக்கை ஒற்றுமையைக் கேள்விக்குள்ளாக்கியது.

ஆனாலும், அவர் இறுதியில் ட்ரயல் அட் பார் நீதிமன்றத்தில் தோன்றி எஸ்.ஜே.வி. செல்வநாயகம், மு.திருச்செல்வம், வி.எஸ்.ஏ.புள்ளைநாயகம் ஆகிய மூத்த சட்டத்தரணிகளுடன் சேர்ந்து, அரச துரோகக் குற்றம் செய்தனர் எனக் குற்றம் சாட்டப்பட்டு ட்ரயல் அட் பாரில் நிறுத்தப்பட்டிருந்த அ.அமிர்தலிங்கம், வி.என்.நவரட்ணம், கா.பொ.இரத்தினம், க.துரைரத்தினம் ஆகியவர்களுக்காக வாதாட முன்வந்ததன் மூலம் தனது ஒற்றுமை விருப்பத்தைத் தெரிவித்தார். குற்றம் சாட்டப்பட்டவர்கள் நிரபராதிகளா இல்லையா என்ற வாதத்திற்கே அவர் போகவில்லை. அந்த நீதிமன்றம் அமைக்கப்பட்டதே தவறு என வாதிட்டார். தவறான முறையில் அமைக்கப்பட்ட நீதிமன்றம் குற்றம் சுமத்தப்பட்டவர்களை விசாரிக்க உரிமையற்றது என வாதிட்டார். "மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய குழு முறையில் நீதிமன்றம் அமைக்கப்பட ஏதுவான நெருக்கடி நிலை விதிகள் செல்லுபடி அற்றது என்ற தீர்ப்பைக் கூற வைத்தார். 1976ஆம் ஆண்டு செப்டெம்பர் 10ஆம் திகதி இத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதையடுத்து, 1976 டிசம்பர் 10ஆம் திகதி மேற்சொல்லப்பட்ட நால்வர் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை சட்டமா அதிபர் மீளப்பெற்றார்.

1981ஆம் ஆண்டு காலப்பகுதியில் புலிகளின் இயக்கம் கலைக்கப்பட்டு அதன் போராளிகள் 'புதிய பாதை' குழுவாகவும், பிரபாகரன் உட்படச் சிலர் ரெலோ, இயக்கத்திலும் வேலை செய்த நேரத்தில் பிரபாகரன், சிறீசபாரட்ணம் போன்றவர்களும், மறுபக்கத்தில் பத்மநாபா குழுவினரும் ஒரு ஒற்றுமை முயற்சியை மேற்கொண்டனர். இயக்கங்களாகவும், குழுக்களாகவும் பிரிந்திருக்காது ஒற்றுமையாக வேலை செய்ய வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இம் முயற்சி பற்றிப் பத்மநாபாவும் ராகவனும் என்னுடன் கதைத்தனர். எமது இளைஞர்களிடையே மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஒற்றுமை முயற்சி இதுவாகும். ஆனாலும், 'On Looker' என்னும் பத்திரிகையில் புலிகளின் சிதைவு பற்றி பத்மநாபா பேட்டி கொடுத்ததால் இந்த ஒற்றுமை முயற்சியில் பிரபாகரன் மேற்கொண்டு ஆர்வம் காட்டவில்லை.

1982ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமளவில் அருட்பிரகாசம் எனப்படும் அருளரால் ஒரு ஒற்றுமை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒற்றுமை முயற்சியைப் பலரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். புலிகள், ரெலோ, புளொட், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஆகிய ஐந்து அமைப்புகளையும் ஐக்கியப்படுத்தி 'ஈழ விடுதலைக்கான குழு' என ஓர் அமைப்பை ஏற்படுத்தித் தமிழர் விடுதலைக் கூட்டணியை அரசியல் ரீதியாக எதிர்கொள்வது எனவும் அருளர் திட்டமிட்டு வேலை செய்தார். தொடர்ச்சியாக எல்லா இயக்கங்களுடனும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. அனைத்து இயக்கங்களின் பிரதிநிதிகளும் ஒன்றுகூடிக் கதைத்தனர். ஆனால் இந்த ஒற்றுமையானது ஒரு வருடம் கூட நிலைக்கவில்லை. 'ஈழ விடுதலைக்கான குழு' எங்கே என்று தெரியாது மறைந்து போனது.

இவைகளின் பின்பு இயக்கங்களை ஒற்றுமைப்படுத்த பத்மநாபா பல முயற்சிகளை மேற்கொண்டார். அவரது அயராத முயற்சியில் தோன்றியதே 'ஈழ தேசிய முன்னணி' ஆகும். இதில் ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ ஆகிய மூன்று இக்கங்கள் இணைந்துகொண்டன. இணைந்தவர்கள் தி.மு.க. தலைவர் கருணாநிதி முன்னிலையில் தமது இணைவை உறுதிப்படுத்திக்கொண்டு போட்டோக்களும் எடுத்துக்கொண்டனர். இந்த ஒற்றுமை வலுவடைந்து இதில் 1985ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதியில் புலிகளும் இணைந்துகொண்டனர். 'ஈழம் தேசிய முன்னணி'யாக இருந்த இந்த அமைப்புப் புலிகள் இணைவுக்குச் சில காலம் முன்பு 'ஈழத் தேசிய விடுதலை முன்னணி' எனப் பெயர் மாற்றம் அடைந்தது. அடுத்து ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் புளொட் இணைந்தால் அதன் மூலம் புலிகள் இயக்கத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் எனப் பிரபாகரன் எதிர்பார்த்தார். இந்த இரண்டு விடயங்களையும் சரிப்படுத்திக் கொள்ளவே புலிகள் ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் சேர்ந்து சவாரி செய்தனர். புலிகள் மிகவும் மோசமான வீழ்ச்சி நிலையை அடைந்திருந்த நேரத்தில் அவர்கள் ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் இணைந்துகொண்டனர். இதன் மூலம் தமது நிலையை மீண்டும் சமப்படுத்திப் பழைய நிலைக்கு மீண்ட பின்பு அவர்கள் ஐக்கியம் என்னும் குதிரையில் இருந்து தாம் செய்த சவாரியை முடித்துக்கொண்டனர். ஆரம்பகாலம் தொடக்கம் புலிகளின் கட்டமைப்பை உற்று நோக்கினால் இந்த ஐக்கியம் சம்பந்தமாக உண்மையாகப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளலாம்.

இந்த ஒற்றுமை முயற்சிகள் இதற்கு முதல் அமிர்தலிங்கத்தாலும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான முயற்சியில் அமிர்தலிங்கம் தோல்வியடைந்தார் என்றே கூற வேண்டும். அமிர்தலிங்கம் மட்டுமல்ல, ராஜீவ்காந்தி கூட அனைத்து இயக்கங்களையும் ஒன்றுபடுத்திக் கூட்டணியினர் தலைமையில் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு உயர்ந்தபட்சத் தீர்வை ஏற்படுத்த முயன்றார் என்றும், அந்த முயற்சி 1985ஆம் ஆண்டு காலகட்டத்தில் எடுக்கப்பட்டது என்றும், சில முக்கிய புள்ளிகள் சொல்லிக்கொண்டனர்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஐக்கிய முன்னணிக்குள் வர வேண்டுமானால் தங்களுடன் ரெலோ இயக்கத்தையும் அழைத்து வருவோம் என அவர்கள் முன்வைத்த நிபந்தனை ஏனைய இயக்கங்களின் முகச் சுழிப்புக்கு இடம் கொடுத்தது. அடுத்துத் தமிழ் ஈழ விடுதலைக் கழகத்தை இந்த ஐக்கிய முன்னணிக்குள் கொண்டு வரும் முயற்சியை ஈரோஸ் இயக்கம் முழு மனதுடன் அங்கீகரிக்காத நிலையும் ஒரு காரணமாகும். ஈரோஸ், தமிழ் ஈழ விடுதலைக் கழகத்தை விட, புலிகளை எப்படி உள்ளே கொண்டு வரலாம் என்பதில் தான் கவனமாக இருந்தது.

இயக்கங்களிடையே ஐக்கியம் இருந்த வேளையில்தான் திம்புப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இதில் சிறீலங்கா அரசாங்கத்தின் சதித் திட்டங்களை எமது இயக்கங்கள் ஐக்கியமாக நின்று எதிர்த்து முறியடித்தன. அனைத்துத் தீர்மானங்களும் ஒற்றுமையாக முன்வைக்கப்பட்டன.

1986ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் கோட்டை மீது ஈ.பி.ஆர்.எல்.எப்.உம் புலிகளும் இணைந்து தாக்கிய பொழுது எமது மக்கள் கொண்ட ஆனந்தத்தை மீண்டும் காண முடியாமல் போய்விட்டது. இத் தாக்குதலில் லெப், கேர்னல் விக்கிரமநாயக்காவும் செனிவிரட்னாவும் கொல்லப்பட்டு, கேர்ணல் கப்பு ஆராய்ச்சியும், கப்டன் ஜெயவர்த்தனாவும் வேறு ஒருவரும் படுகாயம் அடைந்தனர். இவைகளை விட எவ்வளவோ பட்டியல் போட முடியாத தாக்குதல்களை எமது இயக்கங்கள் ஒன்று சேர்ந்து நடாத்தின.

அனைத்து ஐக்கியமும் மக்களின் எதிர்பார்ப்புகளும் புலிகளின் வெளியேற்றத்தால் சிதைந்தன. 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி இயக்கங்களின் ஐக்கியத்தில் புலிகள் சேர்ந்து ஒருவர் கையை ஒருவர் இறுகப் பிடித்துப் போட்டோவும் பிடித்துக்கொண்டனர். ஐக்கியத்துக்குள் இருந்துகொண்டே ஈ.பி.ஆர்.எல்.எப்.ஐச் சேர்ந்த அமீன் என்பவரை 1986ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், 1985ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் றீகன் என்பவரை வவுனியாவிலும் புலிகள் கொலை செய்ததன் மூலம் மொத்த ஐக்கியத்துக்கும் ஆரம்ப வேட்டு வைத்தனர். இக் கொலை பற்றி பத்மநாபா பிரபாகரனுடன் கதைத்த போது பிரபாகரன் அதை ஒரு விடயமாகவே எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் சரியாக ஒரு வருடம் முடிந்த நேரத்தில் ரெலோ இயக்கம் புலிகளால் அழிக்கப்பட்டு அதன் தலைவர் சிறீசபாரட்ணம் 1986ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி ஈன இரக்கமின்றிக் கொல்லப்பட்டார். எவ்வளவு போலியான ஐக்கியம்? எத்தனை போலியான அரவணைப்பு?

**1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி இயக்கங்களின் ஐக்கியத்தில் புலிகள் சேர்ந்து ஒருவர் கையை ஒருவர் இறுகப் பிடித்துப் போட்டோ வும் பிடித்துக்கொண்டனர். ஐக்கியத்துக்குள் இருந்துகொண்டே ஈ.பி.ஆர்.எல்.எப்.ஐச் சேர்ந்த அமீன் என்பவரை 1986ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், 1985ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் றீகன் என்பவரை வவுனியாவிலும் புலிகள் கொலை செய்ததன் மூலம் மொத்த ஐக்கியத்துக்கும் ஆரம்ப வேட்டு வைத்தனர். இக் கொலை பற்றி பத்மநாபா பிரபாகரனுடன் கதைத்த போது பிரபாகரன் அதை ஒரு விடயமாகவே எடுத்துக்கொள்ளவில்லை.**


கொடூரமான கடற் கொந்தளிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் உடமைகளை/உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். முரசு:- ஆசிரியர் குழு + ஊழியர்கள்

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

அவர்கள் சொல்ல வருவது இதுதான்!

'நல்ல கவிதைகளை - மரபாகவோ புதிதாகவோ - படைக்கவல்ல நீங்கள்; நல்ல இலக்கிய நடையோடு சிறுகதையும் கட்டுரையும் எழுதவல்ல நீங்கள்; ஏறத்தாழ இருபதாண்டு காலம் கண்ணதாசனோடு இணைந்து



இலக்கியத்தரமான திரைப்பாடல்களை எழுதிய நீங்கள்; ஏன், தற்போதைய திரைப் பாடல்களில் தரத்தைப் பற்றி அவ்வளவாகக் கவலை கொள்ளாது இருக்கிறீர்கள்?"

என்பதுதான் எனக்கு வந்த மடல்களில் குறிப்பிடப்பட்ட விஷயம்.

பல முறை நான் ஏற்கனவே, இது குறித்து எழுதியிருக்கிறேன். இனியும் இதுபற்றியே பன்னிப் பன்னிப் பேசுவது பொருளற்றது.

சினிமா ஒரு வியாபாரச் சந்தை. இங்கு கலையம்சத்தைக் காட்டிலும் விலையம்சமே கணக்கில் கொள்ளப்படும்.

அன்றைய சினிமாக்களிலல் கதை உரையாடல், நடிப்பு அனைத்திலும் ஓர் இலக்கியத்தனம் இருந்தது. எனவே, அதற்கேற்ப செழுமையான தமிழ் ஆதிக்கம் செலுத்தியது. அன்று அத்தகு பாடல்கள் ரசிகப் பெருமக்களால் வரவேற்கப்பட்டு, சினிமா வாணிபம் செழித்தது.

இன்று மொத்தத் தமிழ் சினிமாவுமே விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக கருத்தழகைக் காட்டிலும் காட்சியழகை நம்பி சந்தைக்கு வருகிறது. பொருட் செறிவு பெரிய அளவு பாடலில் இல்லாது போயினும், வியாபா ரீதியில் முதல் போட்டவர்களுக்கு, இன்றைய படப் பாடல்கள் இலாபத்தை ஈட்டித் தருகின்றன.

இந்த இலாபம் எங்கிருந்து வருகிறது? பெருவாரியான மக்கள் அத்தகு பாடல்களை விரும்பி ஆரவாரிக்கிறார்கள் என்பதால் தானே?!

யாரோ மூலைக்கொருவர் உட்கார்ந்துகொண்டு சினிமாப் பாடல்களில் இலக்கியம் இல்லை என்று மூக்கைச் சிந்துவதை, இலட்சக்கணக்காகப் பணம் போட்டுப் படமெடுப்பவர்கள், முக்கியமாகக் கவனத்தில் கொள்ள இயலாது. எல்லா மார்க்கெட்டிங் துறையிலும் Demand ஐப் பொருத்துத்தான் Supply என்றிருக்கையில் அந்த விதி ஏன் சினிமா மார்க்கெட்டிங்கிற்குப் பொருந்தாமலிருக்க வேண்டும்?

நிராகரிப்பவர் நாலு பேரும் ஆதரிப்போர் ஆயிரம் பேருமாக இருக்கையில் வியாபாரி எதை அளவு கோலாக வைத்து செயல்படுவான் என்பது சின்னக் குழந்தைக்குக் கூடத் தெரியும்.

இந்த வணிகத்தனத்தால், சினிமாவில் தமிழ் வளர்ச்சி குன்றாதா என்று சில அவசரக் குடுக்கைகள் கேட்கலாம். இது ஓர் அபத்தமான கேள்வி. தமிழ், தன்னுடைய வளர்ச்சிக்குப் புலவர் பெருமக்களை நம்பியிராமல், பாடலாசிரியர்களை நம்பிக் கொண்டிருக்கிறது என்பது தமிழிழைக் கொச்சைப் படுத்துவதாகும். வேடிக்கை யென்னவென்றால் இப்படிப் புலம்புபவர்களே புலவர் பெருமக்கள்தான்.

குறுங்காப்பியமோ பெருங்காப்பியமோ படைத்து, இவர்களெல்லாம் தழிழை வளர்க்காமல், ஏன் கோடம்பாக்கத்தைப் பற்றியே கவலை கொள்கிறார்கள் என்பது தான் எனக்குப் புரியவில்லை.

என்னைப் பொருத்த வரையில் நான் ஒரு விஷயத்தில் உறுதியாக இருக்கிறேன்.

அதாவது -

தமிழ்தான் நம்மை வளர்க்கிறதே தவிர


நாம் தமிழை வளர்க்கிறோம் என்பதெல்லாம் தகிடுதத்தம்.

இது குறித்து மேலும் சற்று விரிவாகவே விளக்க விரும்புகிறேன்.

(தொடரும்.......)




**உளவு பார்த்தல் எவ்வாறு ஆரம்பமானது, உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதை அநுபவங்களிலிருந்து கூறும் கட்டுரைத் தொடர்....**




**மேரி** உயிருடன் இருப்பது எலிசபெத்தின் பாதுகாப்புக்கு உகந்தது அல்ல என்று வால்ஷிங் ஹாம் கருதினார். ஆனால் சட்டபூர்வமாக அவளை அப்புறப்படுத்த வழி எதுவும் இருக்கவில்லை. மேரியின் ஆதரவாளர்கள் மேரியை அரியணையில் அமர்த்துவதற்கு சதி செய்வதாக நிருபிக்க தன்னுடைய உளவாளிகளின் மூலம் பல தடயங்களைத் தயாரித்தார் வால்ஷிங் ஹாம். மேரிக்கு மரணதண்டனை விதிக்க அவை போதுமான ஆதாரம் ஆகாது என எண்ணிய எலிசபெத், அவற்றை ஏற்க மறுத்துவிட்டாள்.

ஆனாலும் வால்ஷிங் ஹாம் சோர்வடைந்து விடவில்லை. புதிய தகவல்களைச் சேகரித்து அவற்றை ஆதாரங்களாக ஆக்கினார். எலிசபெத்தால் மறுக்க முடியாத ஆதாரங்களாக அவை இருந்ததால், மேரிக்கு மரண தண்டனை விதிக்கும் உத்தரவில் கையெழுத்துப் போட எலிசபெத் ஒப்புக்கொண்டாள்.

உளவுத் துறை வரலாற்றில் வால்ஷிங் ஹாமுக்கு சிறப்பான இடம் உண்டு. ஒரு தேசத்தின் பாதுகாப்புக்கும் பலத்திற்கும் உளவுத் துறை எவ்வளவு பெரிய சக்தியாக விளங்க முடியும் என்பதை நிருபித்துக் காட்டியவர் வால்ஷிங் ஹாம்.

### தவறான தகவல்கள்

உளவு பார்த்தலில் வேண்டுமென்றே தவறான தகவல்களைக் கொடுத்து எதிரிகளைத் திசை திருப்புவது முறையாகும். இதை மார்ல்ப்ரோ பிரபு வெற்றிகரமாகக் கையாண்டார். இங்கிலாந்திற்கும் பிரான்ஸுக்கும் போர் மூண்டிருந்த சமயம் அது. வில்லாஸ் என்கிற தளபதியின் படை ஆர்ராஸ் என்கிற இடத்திற்கு கிழக்கே பலம் பொருந்திய அணியாக உருவாகியிருந்தது. இங்கிலாந்து படைகளின் நடவடிக்கைகள் எதிரிப் படைகளுக்கு அவ்வப்போது கிடைத்துக் கொண்டிருந்ததால் இங்கிலாந்து படைகள் வெற்றி பெற முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தன.

மார்ல்ப்ரோ பிரபு தற்செயலாகச் செல்லுவதைப்போல தன்னுடைய துணைத்தளபதியின் வீட்டுக்குச் சென்றார். துணைத் தளபதி விசுவாசமானவர் என்பது அவருக்குத் தெரியும் அவருடடைய மனைவி பெரிய வாயாடி. அவளுக்கும் பிரஞ்சுக்காரர் களுக்கும் தொடர்பு இருக்க வேண்டுமென மார்ல்ப்ரோ பிரபு எண்ணினார். அவள் கொடுத்த தகவல்களே பிரஞ்சுக்காரர்களுக்கு உதவி இருக்கவேண்டுமென மார்ல்ப்ரோ பிரபு சந்தேகப் பட்டார். துணைத் தளபதியின் வீட்டில்விருந்து சாப்பிட்டு துணைத்தளபதியின் மனைவியுடன் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார். பேச்சோடு பேச்சாக, சில தினங்களுக்குள்ளாகவே பிரஞ்சுப் படைகளை மேற்குப் பகுதியிலிருந்து தாக்குவதற்கு ஏற்பாடுகளை செய்து இருப்பதாக அவளிடம் சொல்லி வைத்தார். (தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

Mட்டக்களப்பு பெரிய கல்லாறு, கோட்டைக்கல்லாற்றில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்குக் காரணமாக அங்குள்ள பாலம் உடைப்பெடுத்ததால் இரு ஊர்களுக்குமான போக்குவரத்து தடை பட்டது பெரும் பாதிப்பை அப்பகுதிகளில் ஏற்படுத்தியுள்ளது. மக்கள் ஏற்கனவே பட்ட துயரம் தீருமுன்னர் அநேகமானோர் கிறிஸ்தவர்கள் இவர்கள் 25ஆம் திகதி நத்தார் கொண்டாட்டங்களை வெகுவிமரிசையாகக் கொண்டாடி பல குடிபானங்களை அருந்தி களியாட்டங்களை நடத்திவிட்டு, மிகக் களைப்படைந்து அதிகாலை 4.00மணியளவிலேயே பெரும்பாலான

# தடயங்களைத் தொலைத்த கிழக்கு

மீண்டும் ஒரு பெரும் அபாயம் நேருமென்று அன்று காலையில் துயிலெலும் நேரம் கூட நினைத்திருக்க மாட்டார்கள். இங்கு இடம் பெற்ற கோரக் காட்சிகள் அங்கு மிஞ்சியுள்ள மக்களைக் கேட்ட போது எங்களை அதிரவைத்துள்ளது. பெருக்கெடுத்து வந்த கடல் நீரை எதிர்கொண்டு போய்



தங்கள் பிள்ளைகளை மீட்கச்சென்று தங்கள் உயிரையும் பறிகொடுத்துள்ளனர். இவற்றை நேரடியாகக் கூரை மேல் நின்று பார்த்தவர்கள் மிக்க வேதனையுடன் தெரிவித்தனர்.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் கரையோரப் பகுதியும், மீனவப் பிரதேசமும், உல்லாசப் பிரயாணிகளில் தளமுமாகிய அறுகம்பைப் பகுதியிலுள்ள பெரிய பாலத்திற்கு அருகாமையில் உள்ள சிறிய பாலம் உடைந்து தண்ணீரோடு களப்பில் சங்கமித்து விட்டதால் உல்லை, சின்ன உல்லை, பாணமை போன்ற பகுதிகளில் இறந்த மற்றும் காயப்பட்ட மக்களை மீட்டு பொத்துவில் வைத்தியசாலைக்கு எடுத்துவர முடியாத



சூழல் மனதில் பெரும் கவலையையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அங்குள்ள மக்களைக் காப்பாற்றுவதற்காக இலங்கை இராணுவத்தினர் வானூர்தி மூலம் மீட்புப் பணிகளைச் செய்வதாக அறிய முடிகின்றது.

பொத்துவில் வைத்தியசாலையில் கிட்டத்தட்ட 70 சடலங்கள் வந்துள்ளதாக அங்கிருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன. அறுகம்பையில் உள்ள வெளிநாட்டவருக்குச் சொந்தமான பிரபல நட்சத்திர விடுதியொன்று தண்ணீரில் மூழ்கியதுடன் அதன் உரிமையாளரான 'வுட்மன்' எனப்படுபவரும் அவரது சாரதியும் வானில் இருந்தவாறே கடலில் அடிபட்டுச் செல்வதை இராணுவத்தினர் நேரடியாகக் கண்டுள்ளனர்.

மட்டக்களப்பில் பறங்கியர் செறிந்து வாழும் 'டச்பார்' பகுதியானது கடலை அண்டிய பிரதேசமாகும். இங்கு வாழும் மக்கள் நித்திரைக்குச் சென்றுள்ளனர். இவர்கள் காலையில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பைக் காணாமலேயே அதில் மூழ்கி மரணத்தைத் தழுவியமை பெரும் கவலைக்குரிய விடயம். பலர் எங்கு ஓடுவது என்று யோசிக்கு முன்னரே



தண்ணீர் அவர்களை அடித்துசென்றுவிட்டது. அநேகமாக டச்பார் நாவலடி போன்ற பகுதி மக்களின் சிலரே மிஞ்சியுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத்தவிர யாரும் அறியாத பல கரையோரப் பிரதேசங்களில் பலர் சிறு கும்பலாக குடிசைகளை அமைத்து



மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவது வழக்கமான ஓர் விடயம். குடாக்கள்ளி, உமிரி மற்றும் திருக்கோவிலையண்டிய பகுதிகளில் வாழ்ந்த மீனவக் குடும்பங்களின் நிலை பற்றி இதுவரை எந்தத் தகவலும் இல்லையென தெரிகின்றது. சுமார் ஆயிரக்கணக்கானோர் இவ்வாறு மாண்டிருக்கலாம்.

கல்முனைக்குடிப் பிரதேசங்களில் பலியான முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை மூடி வைப்பதற்குக் கூட துணிகள் இல்லாத நிலை பலரின் மனதில் நீங்காத கவலையாக அமைந்துள்ளது.

கொடூரமான கடற் கொந்தளிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் உடைமைகளை/உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். முரசு:- ஆசிரியர் குழு + ஊழியர்கள்

## 2 கிங்கரர்கள் என்பவர்கள் யார்?

*சங்கரமடத்துக் கிங்கரர்கள் பற்றிப் பல வாசகர்கள் பாராட்டி எழுதியிருந்தார்கள். சில வாசகர்கள் குறிப்பாக இஸ்லாமிய, கிறிஸ்தவ வாசகர்கள் பலர் கிங்கரர்களென்றால் அர்த்தமென்னவென்று கேட்டிருந்தார்கள். இந்து சமயத்தைச் சேர்ந்த சில வாசகர்களும் இக் கேள்வியை எழுப்பியிருந்தனர். இந்து சமய ஐதீகத்தின்படி பூவுலகில் பிறந்து வாழும் உயிர்களின் பாவ - புண்ணியக் கணக்குகளைப் பார்த்து இன்ன நாளில் இன்னாரின் உயிரைப் பறிக்க வேண்டும் என்ற பொறுப்பு யமதர்மனைச் சார்ந்தது. எமன் என்றும் அழைக்கப்படும் யமன் நீதிவழுவாதவனெனக் கருதப்படுவதால் யமதர்மராஜன் என்றே அழைக்கப்பட்டார். உதாரணத்துக்கு காஞ்சி காமகோடி சரஸ்வதி சுவாமிகளால் கூலிப்படை வைத்துக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சங்கரராமனின் இறப்பை எடுத்துக்கொள்வோம். 2004 செப்டெம்பர் மாதம் மூன்றாம் திகதி மாலை 4.30 மணியளவில் சங்கரராமன் காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வளாகத்தில் வைத்து ஐவரைக் கொண்ட கூலிப்படையினால் வெட்டிப் கொல்லப்பட்டார். அப்பு என்ற தாதாவே ஜெயேந்திரரிடம் பத்து இலட்சம் ரூபா பெற்றுக்கொண்டு இக் கொலையைக் கூலிப்படை வைத்துக் கொன்றாரென்று தமிழக தனிப்படைப் பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர். அதாவது 2004 செப்டெம்பர் மூன்றாம் திகதி சங்கரராமனின் கணக்கை முடித்து அவரது உயிரை எடுக்க வேண்டுமென்று யமதர்மராஜனின் கணக்கப்பிள்ளையான சித்திரபுத்திரன் யமனுக்கு அறிவிப்பார். பின்னர் குறித்த தினத்தில் உயிரை எடுக்கும்படி பாசக்கயிற்றுடன் தனது ஆட்களை யமன் அனுப்பி வைப்பார். இவ்வாறு உயிரை எடுக்கச் செல்பவர்களையே கிங்கரர்கள் என்று இந்து சமய புராணங்கள் கூறுகின்றன.*

*இந்த வகையில் பார்ப்போமானால், அப்புவையும் அவரது கூலிப்படையினரையும் கிங்கரர்கள் என்றும் அழைக்கலாம்.*

# சங்கர மடத்துக் கிங்கரர்கள்



சங்கரராமனை கூலிப்படை வைத்து கொன்றாரென்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் அப்பு ஜெயேந்திரருக்குப் பாதபூஜை செய்யும் காட்சி

தலித்துகளின் குடியிருப்புகளுக்கும் ஜெயேந்திரர் சென்று வந்தாரென்று கூறப்படுபவற்றின் மூடுதிரைகளைக் கிழித்து, அவரது பொய் முகத்தை இவை அம்பலப்படுத்தவில்லையா?

காஞ்சி காமகோடி மடம் இந்தியாவில் இந்துக்கள் மத்தியில் பிரபல்யமானது. கோடிக்கணக்கான சொத்துகள் இந்த மடத்தின் அறக்கட்டளை நிதியத்தில் உள்ளன. தமிழகத்து அரசியல்வாதிகள்,



தமிழ்நாடு மருத்துமனையை ஜெயேந்திரர் வாங்கிய பின்னர் நடைபெற்ற திறப்பு விழாவின்போது தமிழக முதல்வர் ஜெயலலிதாவை ஜெயேந்திரரும் விஜயேந்திரரும் வரவேற்பதைக் காணலாம்.

வி.ஐ.பி.க்கள், டி.ஜி.பி.க்கள், வர்த்தக முதலைகள், பிரபலங்கள் மட்டுமல்ல புதுடில்லியிலிருந்தும் கூடப் பெரிய மனிதர்களென்று சொல்லப்படுபவர்களெல்லாம் காஞ்சிக்கு வந்து காமகோடிகளின் காலில் வீழ்ந்து வணங்கி ஆசி பெறுவது வழக்கம். மாநில அரசில் மட்டுமல்ல, மத்திய அரசில் கூட துண்டுக் காகிதம் அனுப்பிச் சிபார்சுகளைச் செய்யக் கூடிய கொடுமுடியாகத் திகழ்ந்தவர் ஜெயேந்திரர். அப்படியான ஜெயேந்திரர், தான் கைதுசெய்யப்பட்டமை பற்றித் தன் வாயால் கூறியவற்றை அப்படியே இங்கே தருகிறோம்.

“எனக்கு மத வேற்றுமை கிடையாது. மத வெறியும் கிடையாது. ஆனால், இந்தியாவைப் பங்கு போட்டுக்கொள்ளக் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் உலக அளவில் போட்டி போட்டுக்கொண்டிருப்பதை மடத்துக்கு வரும் பக்தர்களிடம் சொல்லி வருத்தப்பட்டிருக்கிறேன். இந்துக்களை முக்கிய பதவியில் அமரவைக்க வேண்டுமென்று போராடினேன்.”

மத சார்பற்ற நாடென்று கூறிக்கொள்ளப்படும் இந்திய மண்ணில் மதப் பெரியவரான சங்கராச்சாரியார் கூறிய இந்தக் கருத்து, அவரது காவி உடைக்குள் பதுங்கியிருந்த கேவலங்களை அம்மணமாக அம்பலப்படுத்துகிறது. இதனால்தான் அயோத்தியில் “பாப்ரி மஸ்ஜித்தை இடித்துத் தகர்த்த பாரதீய ஜனதாக் கட்சி, சிவசேனை மற்றும் இந்துத்துவ அமைப்புகள் பெரியாரின் விடுதலைக்காகக் கூக்குரலிடுகின்றன என்பதைச் சொல்லியா தெரிய வேண்டும்.

தமிழக அரசு அண்மையில் கொண்டுவந்த மத மாற்றத் தடைச் சட்டம், கோவில் அன்னதானத் திட்டம் ஆகியவற்றுக்கு இவரே காரணகர்த்தாவென்றும் தமிழக அரசியல்வாதிகள் பலர் சொல்கிறார்கள். ஜெயேந்திரர் கைதுசெய்யப்பட்டமைக்கு அரசியலே காரணமென்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். பெரிய சாமியார் ஜெயேந்திரருக்கும் சின்னச் சாமியார் விஜேந்திரருக்குமிடையிலான உட்பூசலே காரணமென்றும் காஞ்சிமட வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றன. ஆனால் சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாக இவர் கைதுசெய்யப்பட்டதாகக் கூறும் தமிழக தனிப்படைப் பொலிஸார், இலட்சக்கணக்கில் பணம் கொடுத்து கூலிப்படை வைத்துக் கொலை செய்வித்தவர் ஜெயேந்திரரென்று அடித்துக் கூறுகின்றனர்

காஞ்சி காமகோடி பீடத்தின் சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளை மாமியார் வீடு போக வைத்தது சங்கரராமன் கொலைதான். அப்பு என்ற பிரபல தாதாவுக்கு நான்கு கோடி ரூபா கொடுத்து சங்கரராமனை ஸ்ரீ ஜெயேந்திரர் தீர்த்துக்கட்டிவிட்டாரென்று தகவல் எழுந்தபோது கொலையில் சம்பந்தப்பட்ட கூலிப்படையினர் குழம்பிப் போனார்களாம். கொலையாளிகளுக்கு அப்பு இலட்சக்கணக்கில் மட்டுமே பணம் கொடுத்ததால் தமக்கு மேலதிக பணம் தேவையென்று கூட்டாளிகள் அப்புவைக் கேட்டார்களாம். இதனையடுத்து ஜெயேந்திரருக்குப் போன் செய்த அப்பு, தனக்கு வழங்கப்பட்ட பணத்தொகை பற்றி தன் கூட்டாளிகளுக்குக் கூறும்படி கேட்டாராம். ஆனால், பொலிஸ் தகவல்கள் இலட்சக்கணக்கில்தான் பணம் கைமாறியதாகக் கூறுகிறது. ரவி சுப்பிரமணியம் என்ற கட்டட ஒப்பந்தக்காரர்தான் அப்பு என்றழைக்கப்படும் கிருஷ்ணசாமியை ஜெயேந்திரருக்கு அறிமுகம் செய்து வைத்ததாகப் பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன. அப்பு என்ற இந்தத் தாதாவைத் தனக்கு அறிமுகம் செய்து வைத்ததே ரவி சுப்பிரமணியம் என்ற உண்மையைப் பொலிஸாருக்களித்த வாக்குமூலத்தில் ஜெயேந்திரர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இது ஜெயேந்திரரின் வாக்குமூலம்

“தமிழ்நாட்டில் ஜெயலலிதா கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது அதுக்கு சங்கர மடம்தான் காரணம்னு திருமாவளவன் (ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர். புலிகளின் ஆதரவாளராகத் தமிழகத்தில் செயற்படும் ‘விடுதலைச் சிறுத்தைகள்’ என்ற சிறிய குழுவின் தலைவர்) அறிக்கை விட்டார். எனக்கு எந்த மதமோ, ஜாதி வேற்றுமையோ கிடையாதுன்னு காட்டற விதமா நான் தலித் கிராமங்களுக்கு கிரமமாகப் போக முடிவெடுத்தேன். முன்னாள் அமைச்சர் கக்கனோட சொந்தக் கிராமத்தில் இருக்கிற

**சங்கராச்சாரியார்கள் ஆகம விதிகளை மீறி மடத்தை விட்டு வெளியேறி உல்லாசமாகப் பொழுதுபோக்கக் கூடாது. அத்துடன் மடத்து நிதியில் நடந்த கையாடல்கள், ஊழல்கள், துஷ்பிரயோகங்கள், பெண்களுடனான சில்மிஷங்கள் பற்றியெல்லாம் சங்கரராமன் கடுமையாக விமர்சித்தாரென்று தெரிவிக்கப்படுகிறது. இவை குறித்து ஜெயேந்திரருக்கும் தமிழக இந்து சமய அறநிலைத் துறைக்கும் சங்கரராமன் பல கடிதங்களை எழுதியிருக்கிறார்.**

கோயிலுக்குத்தான் முதல்ல போனேன். நான் அங்கே போறப்போ, என்னை சூழ்ந்துண்டு கலாட்டா பண்ண திருமாவளவனோட ஆட்கள் ஏற்பாடு பண்றதா எனக்கொரு தகவல் வந்தது. முக்கியமா காண்ட்ராக்டர் ரவி சுப்பிரமணியம், சுவாமிகளுக்கு ஏதாவது ஆயிடுமோனு பதற்றப்பட்டார். அவர்தான் கிருஷ்ணசாமியின்

**அருண் கண்ணன்**

பாதுகாப்போடுதான் நான் கக்கன் கிராமத்துக்குப் போகணும்னு ஆசைப்பட்டார். இதுதான் கிருஷ்ணசாமி மடத்துக்கு வந்து அறிமுகமான கதை. அதற்கப்புறம் மடத்துக்கு வந்து என்கிட்டே கிருஷ்ணசாமி ஆசி வாங்கியிருக்கிறார். என் கூட அவருக்கு இருக்கிற தொடர்பைப் பயன்படுத்தி வேறு யாராவது சங்கரராமனை கொன்னுருக்கலாம். பெரியவரே சங்கரராமனை தீர்த்துக்கட்டச் சொல்லிவிட்டார்னு கிருஷ்ணசாமி கிட்டே வேறு யாராவது சொல்லியிருக்கலாம்.”

இப்படி விசாரணையின்போது வாக்குமூலமளித்தார் ஜெயேந்திரர் என்கின்றனர் பொலிஸார். ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பொலிஸ் உயரதிகாரிகளுக்கு விசாரணையின்போது வழங்கிய தகவல்கள் ஒளிப்பதிவு நாடாவில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. 38 நிமிட நேர இந்த ஒளிப்பதிவு நாடா சங்கர மடத்துச் சமாச்சாரங்கள் பலவற்றை அம்பலத்துக்குக் கொண்டுவந்துள்ளன.

சங்கரராமன் கொலை தொடர்பாக இருபது பேருக்கு மேலானோர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். இதுவரை 22 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். முதலாவது எதிரியாக ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளும்இரண்டாவது எதிரியாக ரவி சுப்பிரமணியமும் மூன்றாவது எதிரியாக அப்பு

**சந்திக்கு வராத சங்கர மடத்துச் சங்கதிகளையும் அதிர்ச்சித் தகவல்களையும் அம்பலத்துக்குக் கொண்டுவரும் காஞ்சிபுரத்து புதிய தொடர்.**

என்றழைக்கப்படும் கிருஷ்ணசாமியும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

### யார் இந்த சங்கரராமன்?

ஜெயேந்திரருக்கு முன்னர் காஞ்சி காமகோடி பீடத்தின் சங்கராச்சாரியாராகத் திருப்பணி புரிந்தவர் சந்திரசெகரேந்திர சுவாமிகள். சந்திரசெகரேந்திர சுவாமிகளின் காலத்தில் சங்கரராமனின் தந்தை சங்கர மடத்தில் வேலை பார்த்து வந்தார். சங்கரராமனின் தந்தை சந்திரசெகரேந்திர சுவாமிகளின் நம்பிக்கையைப் பெற்றவர். தந்தையின் மரணத்துக்குப் பின்னர் சங்கரராமன் காஞ்சி மடத்தில் இணைந்து வேலை பார்த்தார். இவரது செயற்பாடுகள் சந்திரசெகரேந்திர சுவாமிகளுக்கு மிகவும் பிடித்துப் போனது. இதனால் சங்கர மடத்தின் கணக்காளராகச் சங்கரராமன் நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் கோயிலின் மணியகாரராகவும் சங்கரராமனை சந்திரசெகரேந்திரர் பதவியுயர்த்தி நியமித்தார்.

சந்திரசெகரேந்திர சுவாமிகள் 1994இல் இல் மரணமடைந்த பின்னர் சங்கராச்சாரியாராக ஸ்ரீ ஜெயேந்திரர் பதவியேற்றுக்கொண்டார். சந்திரசேகரேந்திர சுவாமிகளின் நம்பிக்கைக்குரிய சீடராகச் சங்கரராமன் திகழ்ந்தமை புதிய பெரியவாளுக்குப் பிடிக்கவில்லையென்று சங்கர மடத்து வட்டாரங்கள் இப்போது கூறுகின்றன. அத்துடன் சங்கராச்சாரியராக இருந்துகொண்டே மடத்தை விட்டு வெளியேறி தலைக்காவிரியென்ற இடத்துக்குச் சென்று உல்லாசமாகப் பொழுதுபோக்கிவிட்டு மீண்டும் மடத்துக்கு வந்தபோது சங்கரராமனின் கடுமையான விமர்சனத்துக்கு ஆளானாரென்றுழ் மடத்து வட்டாரங்கள் கூறுகின்றன.

சங்கராச்சாரியார்கள் ஆகம விதிகளை மீறி மடத்தை விட்டு வெளியேறி உல்லாசமாகப் பொழுதுபோக்கக் கூடாது. அத்துடன் மடத்து நிதியில் நடந்த கையாடல்கள், ஊழல்கள், துஷ்பிரயோகங்கள், பெண்களுடனான சில்மிஷங்கள் பற்றியெல்லாம் சங்கரராமன் கடுமையாக விமர்சித்தாரென்று தெரிவிக்கப்படுகிறது. இவை குறித்து ஜெயேந்திரருக்கும் தமிழக இந்து சமய அறநிலைத் துறைக்கும் சங்கரராமன் பல கடிதங்களை எழுதியிருக்கிறார். சில கடிதங்கள் புகார்க் கடிதங்களாகவும் வேறு சில சங்கராச்சாரியாரையே மிரட்டுவது போலவும் அமைந்துள்ளனவென்று தனிப்படைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


**(தொடரும்.....)**

கொடூரமான கடற் கொந்தளிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் உடைமைகளை/உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். முரசு:- ஆசிரியர் குழு + ஊழியர்கள்



ஓம், சக்திசெய்யுந் தொழில்களை எண்ணு - நித்தம்
சக்தியுள்ள தொழில்பல பண்ணு;
சக்திதனை யேயிழந்து விட்டால் - இங்கு
சாவினையும் நோவினையும் உண்ணு

சுப்பிரமணிய பாரதியார்-



# சுண்டெலியும் பெண்ணும்

பாப்பா முரசு சிறுகதை

ஒரு நதிக்கரையில் யாக்ஞவல்கியர் என்னும் முனிவர், ஆச்சிரமம் அமைத்து வசித்து வந்தார். யாக்ஞவல்கியர் சந்தியாவந்தனம் செய்வதற்காகத் தினமும் காலையில் நதிக்குச் செல்வார். அவர் இடுப்பளவு தண்ணீரில் நின்று கொண்டு கண்களை மூடி உள்ளங் கைகளை விரித்தபடி சுலோகங்களை ஜெபிப்பார்.

யாக்ஞவல்கியர் இவ்வாறு கைகளை ஏந்தியபடி தண்ணீரில் நின்று ஒருநாள் ஜெபம் செய்து கொண்டிருந்தபொழுது, வானில் பறந்துகொண்டிருந்த கழுகின் பிடியிலிருந்து நழுவிய ஒரு சுண்டெலி, நேராக முனிவரின் கைகளில் வந்து விழுந்தது.

கண்களைத் திறந்து பார்த்த முனிவர் தமது கைகளில் சுண்டெலி இருப்பதைக் கண்டு, "அடடா! இந்தச் சுண்டெலியை நான் என்ன செய்வது?" என்று ஒரு கணம் யோசித்தார். பிறகு சுண்டெலியைத் தீண்டியதால் ஏற்பட்ட தூய்மைக் கேட்டைப் போக்கிக்கொள்வதற்காக, மீண்டும் நான் ஆற்றில் குளிக்கும்பொழுது யோசித்துக்கொள்கிறேன் என்று நினைத்தபடியே சுண்டெலியைக் கரையில் நின்று கொண்டிருந்த ஒரு மரத்தின் இலையைப் பறித்து அதில் பத்திரமாக வைத்துவிட்டு மீண்டும் ஆற்றில் இறங்கி நீராடினார்.

நீராடிக்கொண்டிருந்த முனிவருக்கு ஒரு யோசனை உதித்தது. "என் மனைவிக்குப் பெண் குழந்தையென்றால் கொள்ளைப் பிரியம். நான் இந்தச் சுண்டெலியை ஒரு பெண் குழந்தையாக மாற்றி என் ஆச்சிரமத்திற்கு அழைத்துச் செல்வேன்" என்று முனிவர் முடிவு செய்தார்.

பெண் குழந்தையைக் கண்டதும் யாக்ஞவல்கியரின் மனைவி மிக்க மகிழ்ச்சி அடைந்தாள். அவள் குழந்தையை வாஞ்சையுடன் வாங்கி, அதன் மீது அன்பைப் பொழிந்து, அதைத் தன் குழந்தையைப் போல் எண்ணிக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள்.

வருடங்கள் கழிந்தன. அந்தப் பெண் குழந்தைக்குப் பதினெட்டு வயதாயிற்று. ஒரு நாள் யாக்ஞவல்கியரின் மனைவி தன் கணவனிடம், "சுவாமி! நமது குழந்தைக்குத் திருமண வ ய து வந்துவிட்டது. அதனால் அவளுக்கு நல்ல ஒரு வரன் பாருங்கள்" என்று சொன்னாள்.

அதற்கு முனிவர், "நீ சொல்வது உண்மைதான்! நமது புதல்வி அழகாகவும், புத்திசாலியாகவும் இருக்கிறாள். அதனால் அவளுக்குப் பொருத்தமான மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டும். அதனால் நான் முதலில் சூரிய தேவனை அழைக்கிறேன்" என்றார்.

முனிவர் யாக்ஞவல்கியர் தமது தவ வலிமையால் சூரிய தேவனை வரச் செய்தார்.

சூரிய தேவன் தனது ஒளிக் கதிர்களுடன் தோன்றி, தன்னை முனிவர் அழைத்து காரணத்தைக் கேட்டான். அதற்கு யாக்ஞவல்கியர், "இவள் என் புதல்வி. அவளுக்கு உன்னைப் பிடித்தது என்றால் அவனை நான் உனக்கு மணமுடித்துக் கொடுப்பேன்" என்று கூறினார்.

பிறகு, அவர் தன் புதல்வின் பக்கம் திரும்பி, "நீ சூரிய தேவனை மணந்துகொள்கிறாயா?" என்று கேட்டார்.

"இல்லை தந்தையே! இவர் மிகவும் உஷ்ணமாக இருப்பதினால் நான் இவரை மணக்க விரும்பவில்லை. அதனால் எனக்கு வேறு ஒரு நல்ல கணவரைப் பாருங்கள்" என்று பதில் கூறினாள்.

உடனே "யாக்ஞவல்கியர் சூரியதேவனிடம் உன்னை விட மேகம் பெரியது. அது என்னை மறைத்தால் நான் மறைந்து விடுவேன்" என்றான்

அதனால் யாக்ஞவல்கியர் மேகத்தை வரவழைத்து, தன் பெண்ணிடம் மேகத்தை மணக்கச் சம்மதமா என்று கேட்டார்.

"இல்லை தந்தையே, மேகம் கறுப்பாகவும் மற்றும் குளிர்ச்சியாகவும் இருக்கிறது. அதனால் எனக்கு வேறொரு நல்ல கணவனைப் பாருங்கள்" என்றாள்.

முனிவர் மேகத்திடம் "உன்னை விடச் சிறந்தவன் இருக்கிறானா?" என்று கேட்டார்.

"ஆம்! காற்று, என்னை விட வலிமையானது. அது என்னை இங்குமங்கும் அலைக்கழிக்கும்" என்று கூறியது.

உடனே முனிவர் காற்றை வரவழைத்து தன் மகளிடம் "காற்றை மணந்து கொள்ளச் சம்மதமா?" என்று கேட்டார்.

"இல்லை தந்தையே, காற்றை மணமுடிக்க மாட்டேன். காற்று மாறும் தன்மை உடையது. அது இங்குமங்கும் வீசும்! அதனால் வேறு ஒரு நல்ல கணவரைப் பாருங்கள்!" என்று மறுமொழி கூறினாள்.

அதனால் யாக்ஞவல்கியர் காற்றிடம், "உன்னைவிடச் சிறந்தவன் யார்?" என்று கேட்டார்.

"மலையே என்னை விடச் சிறந்தது. நான் என்னதான் வலிமையுடையவனாக இருந்த போதிலும், நான் போக நினைக்கும் இடத்திற்கு என்னைப் போகவிடாமல் தடுக்கும் ஆற்றலுடையது" என்றது காற்று.

யாக்ஞவல்கியர் தமது புதல்வியை மலையிடம் அழைத்துச் சென்றார்.

"மலையே! நீ என் மகளை உன் மனைவியாக ஏற்றுக்கொள்" என்று மலையிடம் முனிவர் கூற, அதற்கு மலை சம்மதித்தது.

பிறகு அவர் தன் மகளிடம், "மலையை நீ மணந்து கொள்கிறாயா? அது மிக்க வலிமையுடையது" என்று கூறினார்.

ஆனால் அதற்கு அவள் மறுத்து விட்டாள்.

"தந்தையே, மலை மிகவும் முரடாகவும், அசைக்க முடியாததாகவும் உள்ளது. அதனால் எனக்கு இதைவிட நல்ல கணவனைப் பாருங்கள்!" என்று தயவுடன் கேட்டாள்.

"மலையே! உன்னைவிடச் சிறந்தவன் யார்?" என்று முனிவர் மலையிடம் கேட்டார்.

அதற்கு மலை, "முனிவரே! சுண்டெலி சுறுசுறுப்புடைய ஒன்றாகும். அது என் மீதே துளைகள் போட்டு விடுமென்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்றது.


யாக்ஞவல்கியர் உடனே சுண்டெலி அரசனை வரச்செய்து அதனிடம், என் மகளை மணந்து கொள்ள உனக்குச் சம்மதமா?" என்று கேட்டார்.

சுண்டெலியைப் பார்த்ததும் அப் பெண்ணின் மனம் மகிழ்ச்சியால் படபடவென்று அடித்துக் கொண்டது.

"தந்தையே! இவர்தான் எனக்குப் பொருத்தமான கணவராவார். அருள்கூர்ந்து என்னையும் எலியாக மாற்றி விடுங்கள். அப்போதுதான் நான் அவரை மணந்து சந்தோஷமாக வாழ முடியும்!" என்று அவள் கெஞ்சிக் கேட்டாள்.

அதனால் யாக்ஞவல்கியர் அவளை மீண்டும் சுண்டெலியாக மாற்றி, அதை சுண்டெலி அரசனுக்கு மணம் முடித்துக் கொடுத்தார்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **12.01.2005.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 578**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 576

**பரிசுக்குரியவர்:**
**எம். என். பஸ்னா பர்வின்,**
**95/21, லீகஸ் கொட்டுவ, கலேவெல**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம்.எச். அமானி, தரம் 3, கஹட்டபிடிய முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. | எம். என். எப், சுமையா, 177, முல்லேகம, அம்பதன்ன. |
| கே. சுகன்யா, தரம் 2, கம்பளை ஸ்ரீமுத்துமாரி அம்மன் மகா வித்தியாலயம், கம்பளை. | யோ. சரண்யா, தரம் 8, தி/கலைமகள் வித்தியாலயம், அன்புவழிபுரம், திருகோணமலை. |
| அ. கமலினி, தரம் 6, இல. 1, மூன்றாம் குறுக்குத் தெரு, சின்னக்கடை, மன்னார். | பானுஷா பாலமனோகரன், அமிர்தம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி |
| ந. செல்வகுமார், ஸ்ரீ முருகன் கோயில் வீதி, களுதாவளை - 04, களுவாஞ்சிக்குடி. | எம். எச். அமானி, தரம் 3, கஹட்டபிட்டிய முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. |
| எம். றகுமத்உம்மா, தரம் 1, மாங்குளம், நேரியகுளம். | யோகராசா சிவாஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. |


# ஆத்திசூடி

## கண்டு ஒன்று சொல்லேல்

நீ உன் கண்களால் பார்த்ததை திரித்து வேறுபாடாகக் கூறாதே.

நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# நத்தையின் கேள்வி



நத்தை என்னைப் பார்த்துப் பார்த்து
முத்து! ஏனோ சிரிக்கிறாய்?

நகர்ந்து நகர்ந்து மெல்ல நானும்
நடப்ப தாகச் சொல்கிறாய்.

வீட்டை முதுகில் தூக்கிக் கொண்டு
விரைந்து செல்லும் மனிதரைக்

காட்டு வாயோ, காட்டு வாயோ,
காட்டு வாயோ, நண்பனே?

# அதிசய உலகம்




கடலில் வாழும் டொல்பின்கள் மனிதரது நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் கொண்டவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நரம்புக் கோளாறு, மனச் சோர்வு, மன இறுக்கம் ஆகியவை உடையோர் டொல்பின்னுடன் சேர்ந்து கொண்டு நீச்சலடித்தால் இந்த உபாதைகள் நீங்கிவிடுகின்றன எனப்படுகிறது. ஆனால் டொல்பின் எவ்வித உபாதைகளைக் குணப்படுத்துகிறது எனத் தெரியவில்லை.

அவுஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த பிரபல பாடகியும் - நடிகையுமான ஒலிவியா நியூட்டன் ஜான், கான்சர் நோய்க்கு மருத்துவம் எடுத்துகொண்டார்.

Queensland இல் உள்ள Sea World இல் ஒரு டொல்பினுடன் அளவளாவுவதைப் படத்தில் காணலாம். மனிதனுக்கும் டொல்பின்னுக்கும் என்னே இப்படி நேசம்.

கிழக்கு ஆபிரிக்காவில் வளரும் "பாவோ பாப்" என்ற மரம் நீண்டு உயரமாக வளர்வது இல்லை. ஆனால் அடி மரம் சுமார் 35 அடி சுற்றளவிற்கு வளருமாம். அடி மரம் இலேசாக இருக்கும். அதனால் அதனைக் குடைந்து அறை போல் மாற்றி மக்கள் குடியிருக்கிறார்கள். சில இடங்களில் இரண்டு அறைகளாக மாற்றி மரம் வளர்ந்துகொண்டே இருக்க அடி மரத்தில் வசிக்கிறார்களாம்.



# உங்கள் பொது அறிவு எப்படி?

| பெயர் | சதுரமைல் | சதுர(கிலோ.மீ.) |
|---|---|---|
| 1. ஆசியா | 1,71,29,000 | 4,39,99,000 |
| 2. ஆபிரிக்கா | 1,71,07,000 | 2,98,00,000 |
| 3. வட அமெரிக்கா | 93,63,000 | 2,43,20,000 |
| 4. தென்னமெரிக்கா | 68,63,000 | 1,75,99,000 |
| 5. ஐரோப்பா | 40,57,000 | 97,00,000 |
| 6. அவுஸ்திரேலியா | 29,42,000 | 76,87,000 |
| 7. அந்தாட்டிக்கா | 55,00,000 | 1,42,39,000 |
| சமுத்திரங்களின் பரப்பளவு | | சராசரி ஆழம்(மீ) |
| 8. அண்டாட்டிக் சமுத்திரம் | 8,24,00,000 | 3962 |
| 9. இந்து சமுத்திரம் | 6,55,27,000 | 396 |
| 10. ஆர்டிக் சமுத்திரம் | 1,40,90,000 | 1219 |
| 11. பசுபிக் சமுத்திரம் | 6,40,00,000 | 4267 |





# வளம் ஒன்றின் அழிவு




தஸ்மேனியாவுக்கு தெற்குப் பிரதேசத்தில் கிங் ஹைலன்ட் என்ற தீவின் கடற்கரைக்குச் சென்றவர்களுக்குக் காணக் கிடைத்தது இந்த நெஞ்சை உருக்கும் கோரக் காட்சி. பைலட் வேல் என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற திமிங்கிலம், டொல்பின் மீன்களின் 98 உடல்கள் கரையொதுங்கி இருந்தன. இதைப் போலவே பைலட் வேல் திமிங்கிலங்களின் 53 உடல்களும் மேரியா ஹைலன்ட் தீவுகளில் குவிக்கப் பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

# கரடி நத்தார்




நத்தார் பண்டிகைக் காலத்தில் சில நாடுகளில் மிருகங்களுக்கும் அன்பளிப்புப் பொருட்களை வழங்கத் தவறுவதில்லை. அமெரிக்காவில் சென்டியாகோவில் ஷீவர்ல்ட் என்ற மிருகக்காட்சிச் சாலையில் வாழும் ‘ஃபோலர் பெயார்’ பனிக்கரடிக்கு நத்தார் பண்டிகைக் காலத்தின் விசேட உணவான இஞ்சி பிஸ்கட் வழங்கப்பட்ட காட்சியே இதுவாகும்.

## வட்டப் பயணம்




மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்யும் நாடுகளில் நடைபெறும் வருடாந்த மோட்டார் வாகனக் கண்காட்சிகளில் அபூர்வமான தயாரிப்புகள் இடம்பெறுகின்றன. அண்மையில் ஜேர்மனியில் நடைபெற்ற மோட்டார் வாகன கண்காட்சிக்காக அமெரிக்கப் பிரஜையான கேரி மெர்லின் என்பவரால் நிர்மாணிக்கப்பட்ட கண்கவர் மோட்டார் வாகனமே இது.

# கண்கவர் பயங்கரம்




கடல் அலைகளிலே சிறு வள்ளத்தின் உதவியுடன் சறுக்கி விளையாடுவது கண்ணைக் கவர்வது போல பயங்கரமானதும் கூட. இவ் விளையாட்டுக்கு உயர்ந்த அலைகளை எழுப்பும் ஹவாய் தீவுகள் உலகிலேயே பிரபலமானது. ஹவாய் தீவுகளில் ஹலேய்வா தீவுக்கு அண்மையில் டையிமியா பே பிரதேசத்தில் ரஸ்மி கில்லான என்ற போட்டியாளர் கிட்டத்தட்ட 30 அடி உயரத்தில் எழுந்த அலை ஒன்றில் போட்டியில் ஈடுபடும் காட்சியே இது.

# உருவாக்கப்பட்ட டொல்பின்



அமெரிக்காவின் டொம் டோக் ருச்சி மற்றும் டேனீஸ் ஒஸ்ட் கேன்ஷரின் ஆலோசனையின் பேரில் நிர்மாணிக்கப் பட்ட இந்த அபூர்வ வாகனம் உருவத்தில் மாத்திரமன்றி செயற்பாடுகளிலும் டொல்பின் மீனை ஒத்ததாகவே உள் ளது. அதி வேகத்தில் பயணம் செய்யும் டொல்பின் மீனைப் போல வேகமாக நீர் மட்டத்திற் கும் மேலாகப் பாயும் வல்லமை பொருந்தியது இந்த வாகனம்.


# குதிரைப்பந்தயம்



இது ஓர் குதிரைப் பந்தயம் என்று பார்த்த பார்வைக்கே தெரிகிறது. ஆனாலும் இந்தப் படத்தில் உள்ள சிறப்பம்சம்தான் என்ன? ஹொங்கொங்கில் காணக் கிடைக்கும் மிகப் பெரிய தொலைக்காட்சித் திரையே இது. உண்மையில் இது விசாலமான விமானம் ஒன்றைப் போல் பெரியது.

கொடூரமான கடற் கொந்தளிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் உடைமைகளை/உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். முரசு:- ஆசிரியர் குழு + ஊழியர்கள்

# சினி விசிட்




சேரனின் புதிய படத்திற்கு சிநேகாவைக் கேட்டிருக்கிறார். சிநேகாவின் அப்பாவோ கூடுதலாய் சம்பளம் கேட்க.....அதற்கும் ஒப்புக்கொண்டாராம் சேரன்!

போட்டோ செஷனுக்காக சேரன் வரச் சொல்லி இடத்தையும் தெரிவித்திருந்தார்.

காலையிலிருந்து சிநேகா வரவில்லை. மத்தியானமளவில் சாவகாசமாய் பேசிய சிநேகாவின் அப்பா....."எங்க வரணும்? அந்த அட்ரஸை இன்னொரு முறை சொல்லுங்க" எனக் கேட்க........சேரன் செம டென்ஷனாகிவிட்டார்!

இந்தப் படத்திலிருந்து சிநேகாவை தூக்கிவிட்டோம் எனச் சொல்லிவிட்டாராம்!

---

தெலுங்கில் நடித்து வரும் சிநேகாவைத் தேடி ஷூட்டிங் ஸ்பொட்டிற்கே வந்துவிடும் ஜூனியர் என்.டி.ஆர். "என் அடுத்த படத்தில் நீங்கதான். கதையைக் கேளுங்க!" என ஜொள் வழியக் கதை சொல்கிறாராம்.

'கதை சொல்லும்போதே இவ்வளவு ஜொள்ளா?' எனக் கவலைப்பட்டு இது வரை பிடிகொடுக்காமல் இருக்கிறார் சிநேகா.

---

சரத்குமாரும் நெப்போலியனும் இப்போது மிக மிக நெருக்கமாகிவிட்டார்கள்.

தாங்கள் சார்ந்த கட்சியின் எண்ணத்தை இன்டஸ்ட்ரிக்குள் புகுத்துவது, நடிகர் சங்க விவகாரத்தில் விஜய்காந்த்திற்கு எதிராகக் காய்நகர்த்துவது என இணைந்த கைகளாகச் செயற்படுகிறார்கள். 'ஐயா' படத்தில் இருவரும் இணைந்து நடித்தும் வருகிறார்கள். இந்த நட்பின் அடுத்த கட்டமமாக நெப்போலியன் தயாரிக்கும் படத்தில் சரத் நடிக்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

---

கமலின் புதிய படமான 'மும்பை எக்ஸ்பிரஸில்' முதலில் நாயகியாகப் பேசப்பட்டவர் மாதுரிதீட்ஷித். ஆனால் அவர் நடிக்க மறுத்ததால் ஸ்ரீதேவியிடம் பேசப்பட்டது. அவரும் நோ சொல்லிவிட்டார். அப்புறம் தபுவிடம் பேசினார்கள். தபுவும் பிடிகொடுக்கவில்லை. இப்போது மனீஷா கொய்ராலா நடித்து வருகிறார்.

இதே போல் ரஜினியின் 'ஜக்குபாய்' சமயம் த்ரிஷா நடிக்க மறுத்தார். 'சந்திரமுகி'யில் சிநேகா நடிக்க மறுத்தார். சிம்ரனும் இப்போது பிரச்சினை பண்ணிக்கொண்டு வெளியேறிய நிலையில் ஜோதிகாவும் நயனதாராவும் நடிக்கிறார்கள்.

விஜயகாந்த்துடனும் சரத்துடனும் நடிக்க த்ரிஷாவும் சிநேகாவும் பலமுறை மறுத்துவிட்டனர்.

பெரிய நடிகர்கள் கூப்பிட்டு இந்த நடிகைகள் போக மறுக்கக் காரணம்...'இளம் நடிகை' என்கிற இமேஜ் போய்விடும் என்பதுதான்.

இது ஒருபுறம் நியாயமாக இருந்தாலும்..... இன்னொரு நிஜம் இதில் இருக்கிறது.

சிம்ரன், ஜோதிகா போன்ற தனித்துவமுள்ள நடிகைகள் பெரிய ஹீரோக்களுடன் நடித்த பிறகும் இளம் ஹீரோக்களோடு சேர்ந்து நடித்து சக்ஸஸ் பண்ணியிருக்கிறார்கள். லேட்டஸ்ட் உதாரணம்...ஜோதிகா.

நாலைந்து வருடங்களுக்கு முன்பே கமலுடன் 'தெனாலி'யில் கலக்கிய ஜோதிகா, இதோ 'மன்மத'னில் சின்னப் பையன் சிம்புவுக்கும் செம பொருத்தமாய் நடித்து ஜெயித்திருக்கிறாரே!

தனித்துவம் இருந்தால் எங்கேயும் ஜெயிக்கலாம்!

---

'மும்பை எக்ஸ்பிரஸ்' படத்தில் கமலின் அக்காவாக நடிக்கிறார் கோவை சரளா!

---

'கிச்சா வயசு-16' இல் நடித்து முடித்துவிட்ட சிம்ரன் 'சந்திரமுகி'யில் நடித்தார். பிரபுவுடன் பெட்ரூம் ஸீனில் நெருங்கி நடிக்க மறுத்ததால் படத்திலிருந்து நீக்கப்பட்ட சிம்ரன்....தன் கணவருடன் டெல்லி சென்றுவிட்டார்..

இனி விளம்பரப் படங்களில் மட்டுமே நடிப்பதென்று முடிவு செய்துள்ளாராம்!

---

'குறும்பு' படத்தில் அறிமுகமான நிகிதா 'சத்ரபதி'யிலும் சரத் ஜோடியாகத் தனது கலைச் சேவையைத் தொடர்கிறார்.

அம்மணி அலட்டல் பேர்வழி என்றாலும் காதல் கசமுசாக்களில் அவர் பெயரை ரிப்பேர் பண்ணிக்கொண்டிருக்கிறது மீடியா! தெலுங்கில் பிஸியாக இருக்கும் நிகிதா, தெலுங்கு நடிகர் ராஜேஷ"டன் செமநெருக்கம் என்கிறார்கள்!

"அதெல்லாம் இல்லையே" என மறுக்கிறவர்களும் உண்டு.

அப்படியானால் நிகிதா 'லவ்' வலையா?

அப்படியார் சொன்னது....

டைரக்டர் தசரத் என்பவரைத்தான் நிகிதா சுத்தி வாறார் என்கிறார்கள்.

இப்படி நிகிதாவின் காதலன் டைரக்டரா? நடிகரா? என பட்டிமண்டபம் நடத்தாத குறையாக விவாதம் நடந்துகொண்டிருக்கிறது.

இந்தப் பட்டிமண்டபத்துக்கு நிகிதாவை நடுவராகப் போட்டால்தான் உண்மை தெரிய வரும்!

நிகிதா சம்மதிப்பாரா?

---

ஒற்றைக்கால் கொண்ட வாலிபர் குட்டியை வைத்து 'டான்ஸர்' படத்தைத் தயாரித்து வரும் கேயார் இப் படத்தை உலக ஊனமுற்றோர் தினமான டிசம்பர் 3ஆந் திகதி ரிலீஸ் செய்யத் தீர்மானித்திருக்கிறார்!

அத்துடன் படத்தின் சிறப்புக் காட்சியை ஜனாதிபதி அப்துல் கலாம் முன்னிலையில் ஜனாதிபதி மாளிகையில் போட்டுக் காட்டவும் திட்டமிட்டுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் ஜரூராக நடந்து வருகிறது.

---

நடிகை உமா நடனப் பயிற்சிப் பள்ளி ஒன்று திறக்கவிருக்கிறார்.

---

'காதல் அரங்கம்' பட நாயகி ஷெர்லி...அழகுசாதனம் உள்ளிட்ட பெண்களுக்கான பிரத்தியேக ஷோரூம் ஒன்றைத் திறக்கவுள்ளார்.

---

நடிகர் 'அன்பு' பாலா...ஹோட்டல் பிசினஸில் இறங்கியுள்ளார்.

---

காமெடி நடிகர் கருணாஸ் 'லொடுக்கு பாண்டி மெஸ்' என்ற பெயரில் நடத்தும் ஹோட்டலின் புதிய கிளையை விரைவில் துவக்க உள்ளார்!

---

'சீல்மிஷம்', 'ரவுசு பண்ற வயசு', 'விளையாட்டுப் பசங்க......'இப்படிச் சில டைட்டில்களைப் பதிவு செய்து வைத்திருக்கிறார் கே.பாக்யராஜ்.

தன் மகன் சாந்தனுவை ஹீரோவாக்கத்தான் இந்த டைட்டில்கள்! தன் மகளை நாயகியாக்கும் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்! இதனால் மகளை வைத்துத் தொடங்கிய 'பாரிஜாதம்', 'அம்மணி வீட்டுக்காரங்க' படங்கள் நிறுத்தப்பட்டுவிட்டன,

---

## நமீதாவுக்கு மார்க்கெட் சரிவு

'எங்கள் அண்ணா', 'மகா நடிகன்', 'ஏய்...'ஆகிய படங்களில் நடித்துள்ள மும்பை வரவான நமீதா, 'தலைப்புச் செய்தி' என்ற படத்தில் புதுமுகம் பத்ரி ஜோடியாக நடித்து வருகிறார். இவர் புதுமுகம் ஜோடியாக நடிப்பதாலோ என்னவோ, முன்னணிக் கதாநாயகர்கள் பலரும் நமீதாவைப் பிடிக்கவில்லை என்று கூறிவிட்டனர். எனவே, யாரும் அவருக்குப் படம் தர முன்வரவில்லை. இதனால் நமீதாவுக்குத் திடீர் மார்க்கெட் சரிவு ஏட்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.


---

## ஐதராபாத்தில் ரம்யாவுக்கு குழந்தை

தெலுங்குப் படவுலகின் மணிரத்னம் என்று புகழப்படும் கிருஸ்ண வம்சி, திடீரென்று ரம்யா கிருஷ்ணனைக் காதலித்து இரகசிய திருமணம் செய்துகொண்டார். தற்போது கர்ப்பமாக இருக்கும் ரம்யா, அவுஸ்திரேலியா நாட்டில் வசிக்கும் தனது தங்கை வினயா வீட்டில் தனது பிரசவத்தை வைத்துக்கொள்ள முடிவு செய்திருந்தார். ஆனால், அங்கு பிறக்கும் குழந்தை அவுஸ்திரேலியா குடியுரிமை பெற்ற குழந்தையாகிவிடும் என்பதால், இந்தியா திரும்பி ஐதராபாத்தில் குழந்தை பெற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளார். ஆணா, பெண்ணா என்று தெரியவில்லையாம்.





## சிம்ரன் கோபம்

இயக்குநர் பி.வாசுவைப் பற்றிப் பேச்செடுத்தாலே கோபத்துடன் எரிந்து விழுகிறார் சிம்ரன். காரணம், அவர் இயக்கி வரும் 'சந்திரமுகி' படத்தில் இருந்து நீக்கப்பட்டதுதான்.

## சோனியா அகர்வால் காதலன் மாற்றம்?

கோலிவுட் வட்டாரத்தில் இப்போது பரபரப்பாகப் பேசப்படும் விஷயம் என்ன தெரியுமா? இயக்குநர் செல்வராகவன் காதலி என்று பேசப்படும் மும்பை வரவு சோனியா அகர்வால், திடீரென்று தன் காதலனை மாற்றத் தீவிரமாக ஆலோசித்துக்கொண்டிருக்கிறார் என்பதுதான். நெருங்கிப் பழகிய இளம் காதல் ஜோடி பிரிந்து செல்வது சாத்தியமா என்று சந்தேகத்துடன் பலர் கேள்வி கேட்டாலும், உண்மை நிலையை அறிந்தவர்கள் சாத்தியம் என்றே கூறுகின்றனர். சமீபகாலமாக சோனியா அகர்வால் ஒரு இளம் கதாநாயகனிடம் குழைந்து குழைந்து பேசுவதாக கிசுகிசுக்கப்படுகிறது. விரைவில் இயக்குநருக்கு அவர் டாட்டா காட்டிவிட்டுச் செல்வார் என்றும் கூறப்படுகிறது. உண்மையா சோனியா?


சச்சின்
விஜய் - பிபாசாபாசு

## ஆபாசமாக நடிக்கமாட்டேன் – லக்ஷ்மிராய்

விஜய் சித்தி மகன் விக்ராந்த் ஜோடியாக, ஸ்மார்ட் லைன் பிக்சர்ஸ் சார்பில் ஏ.ஆர்.வி.உதயகுமார் தயாரித்து இயக்கும் 'கற்க கசடற' என்ற படத்தில் நடிக்கிறார், பெல்காம் பேரழகி லக்ஷ்மிராய். அவருடன்....

*முதல்ல உங்களைப் பத்தி சொல்லுங்க?*

நான் பிறந்து வளர்ந்தது பெங்களூர்ல. அப்பா ராம்ராய், அம்மா மஞ்சுளாராய், இரண்டு சகோதரிகள், அப்புறம் நான். பெல்காம் பகுதியில் வசிக்கும் நான், பெங்களூர் செயின்ட் ஆன்ஸ் ஸ்கூல்ல ப்ளஸ் - டு காமர்ஸ் செகண்ட் இயர் படிக்கிறேன்.

*தமிழில் தெளிவா பேசிறீங்களே! எப்படிக் கத்துக்கிட்டீங்க?*

எல்லாம் டைரக்டர் உதயகுமார் சார் உபயம். 'என் படத்துல நீ நடிக்கணும்னா....நல்லா தமிழ் பேச கத்துக்கணும். அப்படி பேசினாத்தான், எந்த டயலாக்குக்கு என்ன அர்த்தம்னு தெரிஞ்சுக்க முடியும்' என்றார். உடனே வசனகர்த்தா ஹோமோஷோ நிறைய ஹெல்ப் பண்ணார். ஒவ்வொரு டயலாக்கையும் தெளிவா எடுத்து சொல்லி, எப்படி பேசணும்னு கத்துக் கொடுத்தார். ஸோ, இப்ப தெளிவா தமிழ் பேச கத்துக்கிட்டேன். இங்கிலீஷ், கன்னடம், மராட்டி, இந்தி, குஜராத்தி மொழிகள்லயும் பேச தெரியும்.


லண்டன்
பிரஷாந்த் - அங்கிதா

*படிக்கிற உங்களுக்கு சினிமா ஆசை வந்தது எப்படி?*

மூணு வயசுலயே சினிமாவில் நடிக்க ஆசைப்பட்டேன். முதல்ல மாடலிங் பண்ணேன். 2000இல் ஒருமுறையும் 2003இல் ஒருமுறையும் மிஸ் பெல்காம் போட்டியில் வெற்றிபெற்றேன். அப்ப எனக்கு பிரபல இந்தி நடிகை பத்மினி கோலாபுரி கிரீடம் சூட்டி பாராட்டினார். பத்மினி கோலாபுரி யார் தெரியுமா? இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ் இந்தியாவுக்கு வந்தப்ப, எர்போர்ட்ல அவருக்கு திடீர்னு முத்தம் தந்து பரபரப்பானவர். நான் மாடலிங் செய்த ஸ்டில்ஸ் ஒரு கன்னடப் பத்திரிகையில் வந்தது. அதைப் பார்த்த டைரக்டர் எம்.எஸ்.ரமேஷ் 'வால்மீகி' என்ற கன்னட படத்துல நடிக்கக் கேட்டார். இதுல எனக்கு ஜோடியா சிவராஜ்குமார் நடிச்சார். இந்த சமயத்துலதான் ஒருத்தர் மூலமா உதயகுமார் சார் தயாரித்து இயக்கும் 'கற்க கசடற...'படத்துல கதாநாயகியாக நடிக்க சான்ஸ் வந்தது. உடனே சென்னை வந்த நான், மேக்கப் டெஸ்ட்ல தேர்வாகி, வீடியோ டெஸ்ட்ல வெற்றிபெற்றேன்.


ரீ.எம். சௌந்தரராஜனுக்கு பாராட்டு விழா

*அவுட்டோர் ஷூட்டிங் ஸ்பொட்ல ஒரு சீன்ல நீங்க நடிக்கிறப்ப, திடீர்னு டைரக்டர் டென்ஷனாகி கத்திட்டாராமே! நிஜமா?*

ஆமாம், எங்கே என்னை டைரக்டர் சார் அடிச்சிடுவாரோன்னு பயந்துகிட்டே இருந்தேன். என் அண்ணி சீதா மேடம் கூட நான் பேசற சீன் அது. டைரக்டர் என்ன எதிர்பார்த்தாரோ அந்த ரியாக்ஷன் உடனே எனக்கு வரல. பொறுத்து பொறுத்துப் பார்த்த அவர், பயங்கர டென்ஷனாகி கத்தினார். ஷூட்டிங் ஸ்பொட்டே பயந்தது. எனக்கு லேசா அழுகை வந்தது. பிறகு டைரக்டர் சார் பொறுமையாகி, மறுபடியும் நான் எப்படி நடிக்கணும்னு சொன்னார். அவர் என்ன எதிர்பார்த்தாரோ அந்த ரியாக்ஷனை கொடுத்த பிறகுதான் அந்த ஷாட் ஓ.கே. ஆச்சு. அந்த வகையில் உதயகுமார் சார் ஒரு கடின உழைப்பாளி.

*உங்க அப்பா நிறைய ஒயின் ஷாப்புக்கு ஓனர் என்று கேள்விப்பட்டோமே! நிஜமா?*

நிஜம்தான். பதினொரு ஒயின் ஷாப்புகள் இருக்கு.

*அப்ப நீங்களும் ஒயின் குடிப்பீங்களா?*

ம்...கிரேப் ஒயின் மட்டும் குடிப்பேன்.

*எந்த மாதிரி ரோல்ல நடிக்க ஆசை?*

கவர்ச்சி காட்டுவேன். ஆனா, ஆபாசமாக நடிக்கமாட்டேன். எனக்குப் பொருத்தமான எந்த கேரக்டரா இருந்தாலும் ஓ.கே. சிம்ரன், ஜோதிகா மாதிரி நம்ம சினிமா இன்டஸ்ட்ரியில ஒரு கலக்கு கலக்குவேன்.


வெயிட் அன்ட் ஸீ.

## நயன்தாரான்னா என்ன அர்த்தம்

சூப்பர் ஸ்டார் ஜோடியாக 'சந்திரமுகி'யில் நடித்து வருகிறார் நயன்தாரா. 'ஐயா'வில் சரத் ஜோடியாக நடித்து முடித்துவிட்டு ரஜினியோடு ஆடிப் பாடுகிறார்.

எடுத்த எடுப்பிலேயே இப்படி ரஜினி, சரத் என பெரிய ஹீரோக்களோடு ஜோடி போட வாய்ப்புக் கிடைத்ததால், யார் இந்த நயன்தாரா என எல்லோருக்குமே கேள்வி. நயன்தாராவிடமே அதைக் கேட்டோம் :

'ஐயா'வில் சரத்தோடு நடித்துக்கொண்டிருந்த நயன்தாராவுக்கு ஏகப்பட்ட சந்தோஷம்தான். ஆனால், யார் கண் பட்டதோ, 'சந்திரமுகி'யில் ரஜினியோடு நடிக்க வேண்டிய தேதியில் வைரஸ் ஃபீவர் வந்துவிட்டது. நெல்லையில் 'ஐயா' படப்பிடிப்பில் இருந்த நயன்தாரா அப்படியே கேரளா போய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுத் திரும்பி இருக்கிறார்.


கலிங்கா
பாலா

*ரஜினியின் அழைப்புக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார் நயன்தாரா. ரஜினி கூப்பிடுவதற்குள் நாம் கொஞ்சம் அவரோடு பேசலாமா?*

கேரளாவில் உள்ள திருவல்லாதான் எங்க ஊர். அப்பா சி.கே.கொரியன், அம்மா ஓமனா. ஒரு அண்ணன், அப்புறம் நான். இதுதான் எங்க குடும்பம்.

பி.ஏ. படிச்சிக்கிட்டிருக்கும்போது ஒரு விளம்பரப் படத்தில் நடிக்கிற வாய்ப்பு வந்தது. அதன் மூலம் மலையாள டைரக்டர் சத்யன் அந்திக்காடு, எனது புகைப்படங்களைப் பார்த்துவிட்டு ஜெயராமுடன் என்னை நடிக்க வைத்தார். தொடர்ந்து மோகன்லாலுடன் இரண்டு படங்கள். இந்தப் படங்கள் எல்லாமே வெற்றிப் படங்கள்.

*தமிழ் சினிமாவில் எப்படி வாய்ப்புக் கிடைத்தது?*


பிரபல பத்திரிகை ஒன்றில் வந்த எனது புகைப்படத்தைப் பார்த்துவிட்டு ஹரி இந்த வாய்ப்பைத் தந்தார். 'ஐயா' படத்தின் ஸ்டில்கள் பத்திரிகையில் வந்ததைப் பார்த்துவிட்டு டைரக்டர் பி.வாசு சார் என்னை ரஜினிக்கு ஜோடியாக்கிவிட்டார் 'சந்திரமுகி'யில் என்கிறார்.



## 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து

லண்டனில் வசிக்கும் திரு - திருமதி. விஜயகுமார் - ஜெசிதா தம்பதிகளின் செல்வப் புதல்வி அபிநயா தனது இரண்டாவது பிறந்தநாளை 12.01.2005 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அபிநயாவை அன்பு அப்பா - அம்மா மற்றும் லண்டனில் வசிக்கும் அம்மப்பா இந்திரன், பெரியப்பா தயா - பெரியம்மா சசி, தங்கை ஆரணி, சித்தப்பா இலந்திரகுமார், ஜெகன் தாத்தா குடும்பத்தினர், கனடாவில் வசிக்கும் மாமா இனிதன் இலங்கையில் வசிக்கும் அப்பப்பா - அப்பம்மா, அம்மம்மா, பூட்டிமார்கள், சித்திமார்கள், வவுனியாவில் வசிக்கும் மாமா, மாமி, மச்சான், மச்சாள் மற்றும் மாமாமார்களான சதீஸன், வினோத், தாத்தாமார்கள், பாட்டிமார்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் அருள் பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.


செல்வி அபிநயா
12.01.2005

தகவல்:
எம். கோணேஸமுருகையா,
திருகோணமலை.




கண் முன்னே கடலலையே!
காவிக் கொண்டு போனாயே.

ஓ கடலலையே
பூமியின் தலையில்
ஏன் பொய் சத்தியம்
செய்கிறாய்?
வாழ்க்கை தந்த உன்னை
இப்போது பார்க்கவே
பயமாயிருக்கிறது.

கரையோடு இத்தனை நாளும்
சிரித்து விளையாடுகிறாய் என்றுதான்
நாங்கள் நினைத்துக் கொண்டோம்
இப்போதுதான் புரிகிறது......
பலியெடுக்க நீ
பார்த்துக் கொண்ட
பயங்கர ஒத்திகை என்று.

ஊர் அடங்கிப் போனாலும்
மனிதன் மரம் செடி, கொடி
எல்லாமே உறங்கிப் போனாலும்
கரையோடு கைதட்டி
காவலிருக்கும் கடலலையே!

மார்தட்டி மனிதனோடு மல்லுக்கட்ட
மனசு எப்படி வந்தது?

ஏழை எங்களுக்கு
தொழில் தரும்
முதலாளி நீயென்று
கை கூப்பி கும்பிட்டோம்
குறையேதுமிருந்திருந்தால்
இதுதான் தண்டனையா?

அழகான நீலக்கடலே
உன் மறுபக்கம்
இத்தனை கொடூரமானதா
நினைத்துப் பார்க்கவே
நெஞ்சு வெடிக்கிறது.

நீ மட்டும் கொஞ்சம்
நிதானமாயிருந்திருந்தால்
இத்தனை அழிவுகளை
இல்லாது செய்திருக்கலாம்.
கடல் தாயே!
உன் அவசரத்தால்
எத்தனை உயிர்கள்
காவு போயிற்று?

பூமியில் நடக்கும்
பொல்லாத காரியங்களை
பொறுக்க முடியாமலா
பொங்கி எழுந்தாய்
பாவங்களைக் கழுவத்தான்
வேண்டும்; அதற்காக
உயிர்ப் பலி எடுப்பது
எந்த வகையில் நியாயமோ?

கையெடுத்துக் கும்பிட்டோம்
இப்போது நீயும்
களங்கப்பட்டுப் போனாயே
உறவுகளை, உடன் பிறப்புகளை
இழந்து கதறி அழுகிறோம்
உன் காதுகளுக்குக் கேட்கிறதா?
இழுத்துப் போன வேகத்தில்
திருப்பித்தர முடியாமல்
நீ வெட்கித் தலைகுனிவது
உனக்கே வேடிக்கையாய்
இல்லையா?

கண்ணீர் உறைந்த கன்னங்களும்
அழுது வீங்கிய முகமுமாய்
அநாதரவாய் இருக்கிறோம்

பெற்றோர் எதிரிலேயே
பிள்ளைகளையும்
பிள்ளைகள் எதிரிலேயே
பெற்றோர்களையும்
கோரமாய் கொலை செய்தாயே
அன்பையும் பாசத்தையும்
புதைக்கும் அளவிற்கு - எங்கள் மீது
அத்தனை அதிருப்தியா உனக்கு?

பேரிரைச்சலோடு
பொங்கி எழுந்தாயோ
எங்கேயோ அதிர்ந்ததற்கு
எங்களை ஏன்
பலி தீர்த்தாய்?
உன் கொலைகளுக்காக
எங்கள் ஆட்சேபனையை
யாரிடம் முறையிடுவது?
கடல்தாயே, உன்
எதிர்ப்புக்கு முன்னால்
மனித குலம் மௌனித்துப்
போயிருக்கிறது.

நிர்வாணமாக நீண்டு கிடக்கிறாய்
என்பதற்காகவா எங்களை
மாற்றுத் துணி கூட இல்லாமல்
இடம் பெயரச் செய்தாய்?
தஞ்சம் தேடி அலைகிறோமே
நீ நிவாரணமாக
தரப்போவது என்ன.....
மீண்டுமொரு அழிவையா?

எங்களுக்கு
ஒவ்வொரு விடியலுமே
கொலைகளோடுதான் விடிந்தது -
அதைக்
கண்டிக்கும் கற்பைக்கூட
இழந்துதான் மனிதம்
இங்கே மானங்கெட்டு வாழ்கிறது.

இயற்கையே!
அதற்கான தண்டனையா இது?
மரணங்களைச் சுமக்க
பாவியாகிப் போன
மனிதத்தால் முடியாது.

*—தாமரை மகன், திருமலை.*

**இக் கவிதை சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் சமர்ப்பணம்**


## உன்னை மட்டும்...

நன்றி சொல்கிறேன்
உனக்கு!
கவலை என்ன
என்பதைக்
கற்றுத் தந்தவள் நீதான்
எனக்கு!

என் கண்களில் இந்த
நேரம்!
கசிகிறது சிறு ஈரம்!
இப்போது தான்
தெரிகிறது
என் மனமும்
இளகியதென்று!

எனக்காக நீ பட்ட
பாட்டை
நான் அறியேன்!
அது தெரிந்திருந்தால் -
இன்று
நான் உன்னைப்
பிரியேன்!
உன்னைப் போலவே
தள்ளி ஓடுகின்றன பருவ
காலங்களும்
என்னை விட்டு!
பத்து மாதமா? இல்லை
பல ஆண்டுகளாக
அல்லவா - நீ
என்னைச் சுமந்தாய்!

இதுவரை நான்
காதலிக்கவில்லை
எந்தப் பெண்ணையும்!
இன்று காதலிக்கிறேன்
அன்னையே!
உன்னை மட்டும்.



*—அருள்.சக்தியன், சங்கமன் கிராமம்.*

## மனிதா....

மனிதா.....
நேற்றைய இரவுகளை நினைத்து
இன்று ஏன்
தூக்கத்தை இழக்கின்றாய்?
நாளைய தினத்தைக் கொஞ்சம்
நன்றாகவே நினைத்துப்பார்....

நேற்றைய கனவுகள் உனக்கு
பஞ்சணையில் தூங்குவது....
போன்றே இருக்கலாம்.
கடந்த கனவுகள் பற்றி - எனக்கு
கதைகள் பல உள்ளன.

உலக வாழ்க்கை என்பது
ஒருமுறை தான்.....
இன்னொரு உலகம் உண்டென்று
நினைத்தால்...
உன்னை நீ தயார்படுத்திக்
கொள்.....

உந்தன் கரங்களுக்குக்
கொஞ்சம் வலுக் கொடு!
உந்தன் கால்களுக்குக்
கொஞ்சம் உரம் கொடு - அப்போது
உலக கோளத்தில்
நீ மட்டும் சுற்றி வருவாய்....

மனிதா...
எதைச் செய்யும் போதும்
எதற்காக என்று மட்டும்
நினைத்துச் செய் - அப்போது
யார் கடவுள் என்பதை
நீயே தீர்மானித்துக் கொள்....

*—எஸ்.எம்.ஹரீர், வவுனியா கல்விக் கல்லூரி.*



# கவிதை எழுதுதலும் வாசித்தலும்


[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

'இயல்பிலேயே வன்முறையைத் தன் இயங்குதலாகக் கொண்ட மனித மிருகம்' என்று நம்மைச் சொல்கிறார்கள். 'தான்' என்பதே இவ் வன்முறையின் மையம் என்றும் இனங்காண்கிறார்கள். மனிதன் தான் சார்ந்த குழு அடையாளத்தை உயர்த்திப் பிடிக்கும்போது, பிற குழு அவனது எதிரியாகிறது. வன்முறைகளுக்கெல்லாம காரணமாக இருக்கும் இந்தப் பிரிவு நிலைகள் பொய்யானவை என்பதையும், இந்தப் பிரிவு நிலையே பேரழிவுகளின் ஊற்று என்பதையும் உணர்ந்துகொள்ளும்போதே மனிதகுலம் வன்முறையிலிருந்து விடுபட முடியும் என்றும் சொல்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய்ப் போர் எனும் பெயரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மனிதக் கொலைகள் மற்றும் 'இயல்பாக' நடந்துகொண்டிருக்கும் வன்முறைகளுக்கெல்லாம் இந்தப் பிரிவு நிலையே விஷ ஊற்று என்பதை இன்னும் மனிதகுலம் அறிந்துகொள்ளவில்லை என்பதுவே பேரவலம் ஆகும்.

இந்த வன்முறையை அடையாளப்படுத்தும் மூன்று கவிதைகள்.



## வரலாறு என்பது.......

வரலாறு என்பது போர்களாலும்
புவியியல் என்பது மலைகள்
மற்றும் நதிகளாலும் ஆனது.

வரலாறு என்பது வருடங்களால்
ஆனது.
மறக்கவே முடியாதபடிக்கு
உயிர்களைக் குடித்திருக்கும்
வருடங்கள்.

வரலாறு என்பது மறதியால் ஆனது.
மறைந்து போன இனங்கள்
மறைந்து போன மொழிகள்
மறந்து போன படுகொலைகள்.

வரலாறு செயற்கை அழிவுகளாலும்
புவியியல் இயற்கை அழிவுகளாலும்
ஆனதெனினும்
புவியை ஆக்கிரமிப்பதிலேயே
வரலாற்றின் ஆதாரமிருக்கிறது.

பேசுவோர் உடன் உயிரிழந்தும்
வாய் பேசாதோர் சௌபாக்கியத்துடனும்
வாழ்ந்து வருகின்ற பூமியிது.

வரலாறு என்பது
நீரினை மறைத்த பூக்கள்
மற்றும் கொஞ்சம்
செந்நிறம்.

*—மு.சத்யா.*

## இறுதிச் சொல்லுக்குக் காத்திருக்கும் உலகம்!

மாசற்ற வெளி சூழ்ந்த
ஜீவநதிப் பிரதேசப் புல்வெளிகளில்
காளைகளை விரட்டியவர்களின்
கவணிலிருந்து வெளியேறிய கல்
துளைத்து
கபாலம் சிதறி இறந்தவர்களையும்......

அடர்ந்த கானகத்தின் இருண்ட பகலில்
வேட்டைகளைத் துரத்தித் திரிந்தவர்களின்
குத்தீட்டிகளுக்குப் பலியானவர்களையும்........

கடுக்காய்ச் சாந்து நிரப்பிய
கடும் பாறைக் கோட்டைச் சுவர்களின்
பின்னிருந்து புறப்பட்ட
தோட்டாக்களுக்குச்
சாய்ந்தவர்களையும்.........

ஒட்டுக் கேட்கப்பட்டு தவறாய் மொழிமாறிய
வேற்றுமொழி சமிக்ஞையின் விளைவாய்
நொடியில் கருகிய
பல்லாயிரமானவர்களையும்........

இயற்கையின் தீய கொடையான
கொள்ளை நோய்களால்
இறந்தவர்களையும் தவிர்த்து............

வாழ்தலுக்காய் வருத்திக்
கொண்டிருப்பவர்களும்
அரசியல் உள்ளவர்களும்
இல்லாதவர்களும்
கருகலின் விடுதல் உயிர்களும்
குறைப்புலன் மதி கொண்டோரும்
ரோடுகளில் விளையாடித் திரியும்
கிழிந்த சராய்ச் சிறுவர்களும்.....

கடந்த நொடி உருவான
தலைப்பிரட்டைகளும்
தாவரங்களும் விலங்குகளும்
கண்டுபிடிப்புகளும் இன்ன பிறவும்
காத்துக் கொண்டிருக்கின்றன

ஒரு சாத்தான்
உச்சரிக்கப்போகும்
கவுண்ட் டவுன் கட்டளைச் சொல்லுக்காக.

*—ம.பாலகுருசாமி.*

## நம் அரசன்

திருடனைப் போல இல்லை.....
முட்டாளும் இல்லை; குடிகாரனும் இல்லை.
புரட்சிக்காரனும் இல்லை; புலவனும்
இல்லை.
குடிமகனின் சாயல் கொஞ்சமும் இல்லை.
அவன் நல்லவனைப் போல இருக்கிறான்.


மகிழ்ச்சியோடு இருக்கும்படி கேட்கிறான்;
நாம் விரும்புவதும் இதைத்தானே;
எப்படி என்றுதான் கேட்க விரும்புகிறோம்
தயக்கத்தைக் கண்டு கெஞ்சுகிறான்.
அவன் கருணையை நம்பத்
தொடங்கும்போதே
ஆணை பிறப்பிக்கிறான் பின்பற்ற
வேண்டுமென.

முடியாத தருணங்களில்
சாட்டையைச் சுழற்றுகிறான்
'ஏன் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க
மறுக்கிறீர்கள்?'


நம்மில் சிலர் துணிச்சலுடன் சொல்கிறோம்!
'உன்னாலதான்.'
அவனோ தனது வாளை உருவிக்
கொண்டுவிடுகிறான்.

*—ஜீ.முருகன்.*


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : ஏ. அன்சாத்
வயது : 19
முகவரி : 141, சென்றல் வீதி, திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரி.வி.



பெயர் : H.M.K. Rahuman.
வயது : --
முகவரி : Sinmoyug H.A. Company, No - 1237-4- Siwna Industrial, area-1-Ra-704-Chung-wong Dong, Szhung City Kyon KI - Do, South - Korea.
பொழுதுபோக்கு : பத்திரிகை.



பெயர் : S.M.M. Murthala.
வயது : 25
முகவரி : P.O.Box - 09, Doha Qatar.
பொழுதுபோக்கு: இணையத்தளம் பார்த்தல்.



பெயர் : என்ஸ்லி பிலிப்ஸ்
வயது : --
முகவரி : 7, ஜலண்ட் ஹோட்டல், திருகோணமலை.
பொழுதுபோக்கு : பத்திரிகை, ரி.வி.


கொடூரமான கடற் கொந்தளிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் உடைமைகளை/உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். முரசு:- ஆசிரியர் குழு + ஊழியர்கள்




# வெண் தோல் நோய்

"பொண்ணு என்ன கலர் தெரியுமா?" என்று அதிசயிக்க வைப்பது அந்தப் பெண்ணின் தோலில் உள்ள நிறமிகள்தான். அதிலும் மெலனின் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இது தோல் முழுக்க மிகச் சீரான அளவில் இருப்பதால்தான் மிஸ் வேர்ல்ட்களும், மிஸ் யூனிவர்ஸ்களும் ஜொலிக்கிறார்கள்.

திடீரென்று ஏதாவது ஒரு இடத்தில் இந்த மெலனின் குறைந்தாலோ காணாமல் போனாலோ அந்த இடம் வெள்ளையாக நிறமற்றுப் போய்விடும். இந்த நிலைக்கு விட்டிலிகோ அல்லது லூக்கோடெர்மா என்று பெயர். இந்த நிறக் குறைபாடு உடலின் எந்த இடத்தில் வேண்டுமானாலும் வரலாம். உடலின் மற்றப் பாகங்களில் இது ஏற்பட்டால் சுலபமாக மற்றவர் கண்களுக்குத் தெரியாமல் மறைக்க முடியும். ஆனால், முகத்தில் வந்துவிட்டால்...அவ்வளவுதான். எப்போதும் அது பற்றிய தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கி நம்மை அழுத்திக்கொண்டே இருக்கும்.



திட்டுத் திட்டான இந்த வெள்ளை நிறங்களோடு பலர் நம் கண் முன்னால் இருக்கிறார்கள். இவர்களை அடிக்கடி பார்க்கிறோம். இது என்ன என்று யோசிக்கிறோம்.

இந்தக் குறைபாடு யாருக்கு வேண்டுமானாலும் எந்த வயதில் வேண்டுமானாலும் வரலாம். திடீரென்று தோன்றி உடல் முழுக்க அங்கங்கு விட்டு விட்டுப் பரவி நம்மை நிலை குலைய வைக்கும். இது யாருக்கு, எதனால் வருகிறது என்பதற்கு குறிப்பிட்ட எந்தக் காரணமும் இதுவரை கண்டறியப்பட வில்லை. பெற்றோருக்கு இருந்தால் குழந்தைக்கு வருவதற்கான வாய்ப்பு அதிகம்.

தோல் திடீரென்று வெள்ளைத் திட்டுகளை உருவாக்கிவிட்டுப் போகிற இந்த நோய் வேறு ஏதாவது வகையில் உடலைப் பாதிக்குமா என்றால் இல்லை. நம்முடைய தோலில் இப்படி ஒரு குறை வந்துவிட்டதே என்ற மன அழுத்தத்தை உருவாக்குமே தவிர உடல் உறுப்புகளுக்கு வேறு எந்தத் தீங்கும் தராது.

நீண்ட நாட்களாகத் தோல் மருத்துவர்கள் இந்த நோயை எப்படிச் சரி செய்வது என்று புரியாமல் விழித்தார்கள். இப்போது அப்படி இல்லை. நவீன மருத்துவ வளர்ச்சியின் முன் இந்த விட்டிலிகோ ஒரு விட்டில்பூச்சிக்குச் சமம்.

என்ன மருத்துவம்?

இந்த நோய் இரண்டு விதமாக அணுகப்படுகிறது. ஒன்று, இந்த வெள்ளைத் திட்டுகள் மற்ற இடங்களுக்குப் பரவாமல் தடுப்பது. இரண்டாவது, வெள்ளை படிந்த தோலை பழைய நிலைக்குக் கொண்டு வருவது. இதில் ஒரு சின்ன மேக்கப் சிகிச்சை முதல் அறுவைச் சிகிச்சை வரை இருக்கிறது.

என்ன மேக்கப் சிகிச்சை அது?

கேமப்ளாக் என்கிற மேக்கப் சிகிச்சை.

இந்த மேக்கப்பில் பல்வேறு விதமான நிறங்கள் இருக்கின்றன. தோலுக்குப் பொருந்துகின்ற நிறத்தைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தலாம். பவுடர் அடிக்கிற மாதிரிதான் இந்தச் சிகிச்சை. இப்படிச் செய்வதால் வெள்ளை நிறத்தில் வேறுபட்டுத் தெரியும் இடத்தைச் சுலபத்தில் கண்டுபிடிக்க முடியாது.

ஒளி சிகிச்சை (Light Theraphy) UVB-A என்கிற குறைந்த அகலம் கொண்ட ஒளி தோலில் பாய்ச்சப்படும். அதிகமான நபர்களுக்கு இந்தச் சிகிச்சை பெரிய பலனை அளித்திருக்கிறது.

இது தவிர இப்போது மிகப் பரவலாக வெளிநாடுகளில் செய்யப்படும் அறுவை சிகிச்சை மெலனோசைட் டிரான்ஸ் பிளான்டேஷன். இதனால் பல விட்டிலிகோ நோயாளிகள் பயன்பெற்றிருக்கிறார்கள். இதைப் பற்றி விரிவாக அறியுமுன் விட்டிலிகோ பற்றிய சில தவறான கருத்துக்களை தெரிந்து தெரிந்துவோம்.

1. இது தொடுதல் மூலம் பரவும் - இது தவறு.

2. மீன் மற்றும் தயிர் சாப்பிடுவதால் இந் நிலை வருகிறது - இது தவறு.

3. இரத்தப் பரிசோதனை செய்தால் இந்த நோய் வருகிறதா என்று தெரிந்து கொள்ள முடியும் - இது தவறு.

துல்லியமாகச் சரி செய்ய முடியும்.


இந்த விட்டிலிகோ என்கிற வெள்ளத் தோல் நோய் தாக்கி அதிலிருந்து சரி செய்து கொண்ட பிரபலம் - மைகேல் ஜாக்சன்.

# சிகை அலங்காரங்கள்

## த்ரீ பன்

1. முதலில் தலையை வாரி Poney tail ஆகக் கட்டுக.

2. கட்டிய Poney tail ஐ மூன்று சம பகுதியாகப் பிரிக்குக.



3. பின்பு மூன்று ஒரேயளவான சிறு உருளை வடிவான Padகளைத் தயாரித்துக் கொள்க.

4. பின்பு முதலாவது பிரிவுத் தலைமுடியின் கீழ் Padஐ வைத்துச் சுற்றித் தலையின் வலது புறமாகச் சிறிது சாய்வாக வைத்து, Hair Pin குத்தி Padஐ முடியுள்ள தலைமுடியை Pad மறையும் வண்ணம் விரித்துக்கொள்க.

5. பின்பு மூன்றாவது பிரிவுத் தலைமுடியின் கீழ் Padஐ வைத்துச் சுற்றி, தலையின் இடது புறமாகச் சிறிது சாய்வாக வைத்து Hair Pin குத்தி தலைமுடியை முன்பு போல் விரித்துக்கொள்க.

6. பின்பு இரண்டாவது பிரிவுத் தலை முடியின் மேல் Padஐ வைத்துச் சுற்றி, குமிழ் போல வரும் பகுதியின் கீழாக வைத்து Hair Pin குத்தி தலை முடியை முன்பு போல் விரித்துக்கொள்க.

(அடுத்த வாரம் இன்னுமொரு சிகை அலங்காரத்துடன் சந்திப்போம்.)

# சிறுநீர்ப் பிரச்சினை

கர்ப்பிணிப் பெண்கள் தாராளமாக சிறுநீரைக் கழிக்க வேண்டியது முக்கியம்.

சாதாரணமாக கர்ப்பிணிப் பெண்களின் சிறுநீரில் நோய்க் கிருமிகள் சற்று அதிகமாகவே இருக்கும். அடிக்கடி நீர் வெளியேறாவிட்டால் நோய்க் கிருமிகளின் ஆதிக்கம் உடலில் அதிகரித்து கர்ப்பிணிப் பெண் பலவித பிணிகளுக்கு இலக்காக நேரிடும்.

ஆறு அல்லது ஏழாவது மாதமளவில் கருப்பை மிகப் பெரிதாக விரிந்து சிறுநீரகத்தின் மீது அழுத்தம் கொடுக்க நேரிடுவதால் அந்த மாதங்களில் சிறுநீரை வெளியேற்ற கர்ப்பிணிப் பெண் சற்றுச் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

சிறுநீர் கழிக்கச் சிரமமாக இருக்கிறது என்ற எண்ணத்தில் சில பெண்கள் சிறுநீரை அடக்கிக்கொண்டு எப்போதாவது ஒரு தடவை சிறுநீரை அகற்ற முற்படுவர். இது மிகவும் அபாயகரமான விளைவுகளைத் தோற்றுவித்து விடும்.

அதனால், சிரமப்பட்டாவது அடிக்கடி சிறுநீரை அகற்றிவிடுவதை ஒரு கடமையாகக் கொள்ள வேண்டும்.

சிறுநீரை அகற்றுவதில் ஏதாவது சமாளிக்க முடியாத சிரமம் இருந்தால் உடன் டாக்டரின் ஆலோசனையை நாடி சிகிச்சை பெற்றுக் கொள்ளத் தவறக் கூடாது.

ஐந்தாவது மாதத்திலிருந்தே கர்ப்பிணிப் பெண் சில வேதனையான அனுபவங்களைப் பெற வேண்டியிருக்கும். குழந்தை அடிக்கடி புரண்டு கொடுப்பதால் சற்று வேதனையும் சிரமமும் இருக்கும். இது ஒரு சாதாரண நிலைதான். இது குறித்து கவலையோ பீதியோ கொள்ளத் தேவை இல்லை. இதனால் ஏற்படக் கூடிய வேதனை தாங்கக் கூடியதாகத்தான் இருக்கும்.

ஆனால், மேற்சொன்னது போன்ற வேதனை அடிக்கடி ஏற்படுவதாகத் தோன்றினால், சான்றாக அரை மணிக்கு ஒரு தடவை தோன்றினால் அது ஓர் அசாதாரண நிலையாகும். அது குறை பிரசவத்துக்கான அறிகுறியாகக் கூட இருக்கும்.

அந்த மாதிரிச் சமயங்களில் உடனடியாக மருத்துவரின் உதவியை நாடிவிட வேண்டும்.

ஏழு மாதங்களுக்குப் பிறகு பெண்களுக்குச் சற்று அதிகமான இடுப்பு வலி இருக்கும்.


இடுப்புத் தசைகளே முதுகெலும்பைத் தாங்கிக்கொள்ளும் ஆதார தளமாக இருப்பதால், கருப்பையின் கனம் முதுகெலும்பு, இடுப்புத் தசைகளுக்கு அழுத்தம் கொடுக்க நேரிடும். அப்போது அடிக்கடி இடுப்பில் வலி உணர்வு தோன்றும்.

இது குறித்தும் அதிகமாகக் கவலைப்படத் தேவையில்லை.

இடுப்புத் தசைப் பகுதி உறுதியாக உள்ளவர்களுக்கு இந்த மாதிரி இடுப்பு வலி இருக்காது. இருந்தாலும் மிகக் குறைவாக இருக்கும்.

## சில வேதனைகள்

அஜீரணம் காரணமாக கர்ப்பிணிப் பெண்ணுக்கு சில பல தொந்தரவுகள் ஏழெட்டு



மாதங்களுக்குப் பிறகு தோன்றுவது உண்டு.

அந்தக் காலகட்டத்தில் கருப்பை மிகவும் அதிகமாக விரிந்து பெருத்துவிடுவதால் அது அடிவயிற்றில் அளவுக்கு அதிகமாக அழுத்தம் கொடுக்கும்.

இந்த அழுத்தம் காரணமாக வயிற்றிலுள்ள ஜீரண உறுப்புக்கள் தாராளமாக இயங்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிடுகிறது. இதனால் உண்ணும் உணவு எளிதில் ஜீரணிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.

உண்ணும் உணவு சரியாகச் செரிமானம் ஆகாததால் உணவின் மீது கர்ப்பிணிப் பெண்ணுக்குச் சற்று விருப்பம் இருக்காது. தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டிருப்பது போன்ற உணர்வு தோன்றி கர்ப்பிணிப் பெண் மிகவும் சங்கடப்படுவாள்.

இப்படிப்பட்ட நிலைக்கெல்லாம் மருந்து தேடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

நல்ல சத்தான உணவ்வு, மிகவும் கொஞ்சங் கொஞ்சங்கமாக கர்ப்பிணி பெண்ணுக்குக் கொடுக்க வேண்டும்.

மிகவும் எளிதாக ஜீரணமாகக் கூடிய உணவு வகைகளாகப் பார்த்துக் கொடுக்க வேண்டும்.

திரவ உணவை அடிக்கடி சாப்பிடுவது நலம். பழ வகைகளை அடிக்கடி உண்ண வேண்டும்.

ஜீரணக் கோளாறு சற்றுத் தீவிரமாக இருக்கும்போது இருதயப் பகுதியில் பல சங்கடங்கள் தோன்றுவது போல் இருக்கும்.

சில பெண்கள் அதை இருதயக் கோளாறு என்று எண்ணிக் குழப்பமும் பீதியும் அடைந்துவிடுவதுண்டு.

அவ்வாறெல்லாம் மனக் குழப்பம் அடையத் தேவையில்லை.

உணவு விஷயத்தில் சீரான நடைமுறைகளைக் கையாளுவதன் மூலமே இந்தக் குறைபாட்டினை நீக்கிக்கொள்ள முடியும்.

ஏதாவது தாங்க இயலாத சங்கடம் இருந்தால் உடன் மருத்துவரின் யோசனையை நாட வேண்டும். அதை அவர் சரிபடுத்திவிடுவார்.

மூச்சுத் திணறுவது கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படுகிற இயல்பான கோளாறுகளின் ஒன்று.

கருவில் வளரும் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்து அனைத்தும் தொப்புள் வழியாகத் தாயிடமிருந்துதான் குழந்தைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

கருப்பைக்கு அதிக அளவு இரத்தம் பாய வேண்டியிருப்பதால் இருதயமும் நுரையீரலும் மிகவும் அதிகமாக இயங்கிச் செயற்பட வேண்டியிருக்கிறது.

இதுதான் மூச்சுத் திணறல் போன்ற உணர்வுக்குக் காரணம்.

அதனால் இந்த மாதிரியான சங்கடங்கள் எந்த வகையிலும் ஆபத்தான ஒன்றல்ல என்பதை உணர்ந்து கர்ப்பிணிப் பெண் சகித்துக்கொள்ள வேண்டும். சற்று மன உறுதியுடன் முயன்றால் எளிதாகச் சமாளித்துவிட முடியும்.

உறக்கம் வராத நிலை, கர்ப்ப காலத்தின் இறுதியில் தோன்றும் தவிர்க்க இயலாத நிலையாகும்.

முதற் குழந்தையைக் கர்ப்பம் தரித்திருக்கும் பெண்களுக்குத்தான் இந்த உறக்கக் கேடு அதிகமாக இருக்கும்.

அந்தச் சமயத்தில் உடலில் தோன்றும் பல வகையான அசௌகரியங்கள் - வேதனைகள் அவர்கள் மனத்தை மிகவும் அதிர்ச்சிக்கும் குழப்பத்துக்கும் உள்ளாக்கும்.

மனச் சோர்வும் காரணமின்றி ஏற்படும் அச்ச உணர்வுமே இதற்கு முக்கியமான காரணம் எனலாம்.

கர்ப்ப காலத்தில் சில பல வேதனைகளை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். அவற்றை எந்த நிலையிலும் தவிர்க்க முடியாது என்ற உண்மையை உணர்ந்து குழந்தையை பெற்றெடுத்த பிறகு ஏற்படுகிற மகிழ்ச்சியை - இன்பத்தை - தேக்கி மனத்திற்கு உறுதியூட்டிக்கொண்டால் உறக்கக் கேடு என்ற குறைபாட்டை எளிதாக அகற்றிக் கொண்டு நிம்மதியாக உறங்கியெழ முடியும்.

அந்த மாதிரிச் சமயங்களில் தூக்க மருத்துகளைப் பயன்படுத்தாமல் இருப்பதே நல்ல நடைமுறையாகும்.

சில பெண்களுக்கு கை, கால் வீங்குவது கர்ப்ப காலக் கோளாறுகளில் குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

இந்தக் குறைபாட்டுக்குக் காரணம் கர்ப்பிணிப் பெண்ணின் ஆரோக்கியக் குறையும் போதிய சக்தி இல்லாததுமே ஆகும்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது -ஷோபா-

## மீன் மசாலா வடை

(10 - 12 வடைகள்)

**தேவையான பொருட்கள் :-**

| | |
|---|---|
| அவித்த கோதுமை மா | - 1 மே.க. (நிரப்பி) |
| கடலை மா | - 1/4 கி.கிறாம் |
| ரின் மீன் | - 1 (425 கிறாம்) |
| சிறிதாக வெட்டிய வெங்காயம் | - 3 மே.க. (நிரப்பி) |
| சிறிதாக வெட்டிய பச்சைமிளகாய் | - 2 மே.க. (நிரப்பி) |
| சிறிதாக வெட்டிய கறிவேப்பிலை | - 1 மே.க. |
| சிறிதாக வெட்டிய உள்ளி | - 1 தே.க. (நிரப்பி) |
| பெருஞ்சீரகம் | - 2 சிட்டிகை |
| தனி மிளகாய்த் தூள் | - 1 தே.க. (மட்டமாக) |
| உப்புத் தூள் | - அளவிற்கு |
| தண்ணீர் | - அளவிற்கு |
| தேங்காயெண்ணெய் | - 1/4 போத்தல் |

**செய்முறை:-**

ரின் மீனை நன்றாகப் பிசைந்து வைத்துக் கொள்க.

கடலை மா, கோதுமை மா என்பவற்றைக் கலந்து அரித்துப் பாத்திரத்திலிட்டு, ரின் மீன், வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, உள்ளி, மிளகாய்த் தூள், உப்புத் தூள் என்பவற்றையிட்டு நன்றாகப் பிசிறிச் சேர்த்துக்கொண்ட பின்பு தண்ணீரை அளவிற்கு விட்டு இறுக்கமான கூழ்ப் பதமாகக் கரைத்து வைத்துக் கொள்க.

பின்பு நன்றாகக் கொதித்த தேங்கா யெண்ணெயில் பிசைந்து வைத்துள்ள கலவையைக் கையில் கிள்ளியெடுத்து உருண்டையாக விழத் தக்கதாக எண்ணெயில் போட்டுப் பொரியவிட்டு சிறிது நேரத்தால் ஒரு கரண்டியின் அடிப்பாகத்தில் நடுவே ஒரு பள்ளம் விழும் வண்ணம் அழுத்திப் பொன்னிறமாகப் பொரியவிட்டு எடுத்து ஓரளவு சூடாக இருக்கும்போதே பரிமாறலாம்.

# ஒரு தாய் மகன் 13

பிலிப்பின் காருடன் மோதிய காரை ஓட்டி வந்தது ஒரு செனட்டரின் மனைவி என்று அறிந்ததும் அந்தத் தீயணைப்புப் படை வீரர் திகைத்துப்போனார்.

"லாரா ஹட்சின்ஸ் என்றா சொன்னாய்?" என்று மறுபடி கேட்டார்.

"ஆமாம், ஆமாம்" என்றார் மற்றவர்.

"நல்ல காலம்! விபத்தில் அந்த அம்மாள் இறந்து போயிருந்தால் என்ன ஆகியிருக்கும்! ஊரையே இரண்டு படுத்திவிடுவார்கள்.!" நிம்மதிப் பெருமூச்சு விட்டார் முதல் நபர்.

"அது சரி மெர்ஸிடிஸ் காரில் இருந்த பசங்கள் விஷயம் என்ன? குடித்திருந்தார்களா? அல்லது போதை மருந்து கஞ்சா.."

"யாருக்குத் தெரியும்? ஆஸ்பத்திரியில் பரிசோதனை செய்து கண்டுபிடித்து விடுவார்கள். சில சமயம் யார், யார் மீது, ஏன் எப்படி மோதினார்கள் என்பது தெரியாமலே போய்விடுவதும் உண்டு. இதுவும் அந்த மாதிரி ஆகலாம். இரண்டு கார்களும் இப்போது இருக்கிற மாதிரி விதத்தைப் பார்த்தால் சொல்ல முடியாதிருக்கிறது. கார்களும் உருப்பிடியில்லாமல் நொருங்கிப் போய்விட்டன."

பொலிஸார் துண்டு துண்டாகக் கார்களை வெட்டி அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள். சிலர் தண்ணீர் பீய்ச்சி, இரத்தக் கறைகளையும் பெட்ரோல் கறைகளையும் குப்பை கூளங்களையும் நடைபாதையிலிருந்து அகற்றிய வண்ணம் இருந்தார்கள்.

செனட்டரின் மனைவி லாரா கைக்குட்டையால் வாயைப் பொத்திக் கொண்டு விம்மிவாறு இருந்தாள். இரண்டு பெண்கள் அவளைத் தேற்றி,



தண்ணீர்ப் புட்டி கொண்டு வந்து தர,அதைக் குடித்தாள். நடந்ததையெல்லாம் நம்பவே முடியாதவள் போலத் தலையை அசைத்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு ஏறத்தாழ நாற்பது வயது இருக்கும். விலையுயர்ந்த உடையில் கவர்ச்சிகரமாக இருந்தாள்.

பாலத்தில் போக்குவரத்தை ஓரளவு சீர்படுத்தியிருந்தார்கள். ஆனால் சாலையில் ஒரு பாதி அடைபட்டிருந்ததால், மறுபாதியிலேயே வாகனங்கள் போவதும் வருவதுமாக இருந்தன. அதைச் சரிப்படுத்த இன்னும் இரண்டொரு மணி நேரம் ஆகுமென்று தோன்றியது.

டி.வி. கமெரா வண்டிகள் புறப்படத் தயாராகின. செனட்டரின் மனைவி என்பது தெரிந்து, லாராவிடம் சில நிருபர்கள் பேச்சுக் கொடுத்துப் பார்த்தார்கள். லாரா பேச மறுத்து விட்டாள். விபத்தில் இறந்து போன பையனைப் பற்றிக் கேட்டதற்கும் அவள் எதுவும் சொல்லவில்லை. நிருபர்கள் அவளை அதிகம் தொந்தரவு செய்யாதபடி நெடுஞ்சாலைப் பொலிஸார் நாசூக்காகத் தடுத்துவிட்டார்கள்.

சான்பிரான்ஸிஸ்கோவில் க்ளே ஸ்ட்ரீட் என்னுமிடத்தில் இருந்தது அவள் வீடு. இரண்டு பொலிஸார் அவளை வேனில் ஏற்றி அழைத்துச் சென்றார்கள். அப்போது மணி பன்னிரண்டரை ஆகிவிட்டது. செனட்டர் ஹட்சின்ஸ் தலைநகர் வாஷிங்டனுக்குப் போயிருந்தார். இவள் பெல்வெடேர் என்னுமிடத்தில் ஒரு பார்ட்டிக்குப் போய்விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது இந்த விபத்து நிகழ்ந்துவிட்டது.

ஒரு பொலிஸார் வேனிலேயே இருந்தார். மற்றவர் இறங்கி லாராவை வீட்டுக்குள் அழைத்துப் போனார்.

வீட்டில் குழந்தைகள் தூங்கி விட்டார்கள். சமையல்கார அம்மாள் கதவை திறந்தவள், தலையும் உடையும் அலங்கோலமாக வந்த எஜமானியைக் கண்டதும் அதிர்ச்சியுடன் வீறிட்டு விட்டாள். "ஒரு சின்ன விபத்துதான், வேறொன்றுமில்லை" என்று அவளைச் சமாதானப்படுத்தினாள் லாரா.

"ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டுமா? சொல்லுங்கள் அழைத்துப் போகிறோம்" என்றார் பொலிஸ்காரர்.

"அவசியமில்லை. தேவைப்பட்டால் நாளைக் காலை என் டாக்டரிடம் போய் கொள்கிறேன்" என்றாள் லாரா.

பிலிப் இறந்துவிட்டான் என்பது

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

மட்டுமே அவளுக்குத் தெரியும் ஆலிஸனின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்று பொலிஸார் அவளிடம் சொல்லவில்லை. ஏனெனில் லாராவைப் பார்க்க அவர்களுக்குப் பரிதாபமாக இருந்தது. 'பாவம் எவ்வளவு பயந்து போய் பித்துப் பிடித்த மாதிரி இருக்கிறாள் இந்த அம்மாள்! ஏற்கெனவே விபத்து நடந்ததில் ஆடிப்போய்விட்டாள். பிலிப்பின் சவத்தைத் தூக்கிச் சென்ற போது அதைப் பார்த்துப் பயங்கரமாய் அழுதுவிட்டாள். மூன்று குழந்தைகளைப் பெற்றவள். தன் குழந்தைக்கு இந்த மாதிரி நேர்ந்திருந்தால் என்ன ஆவது என்று நடுங்கிக் கொண்டிருக்கிறாள். இவளிடம் ஆலிஸனைப் பற்றி வேறே சொல்லிக்கொண்டிருப்பானேன்?' என்று அவர்கள் எண்ணினார்கள்..

வீட்டுக்குள் வந்த பொலிஸ்காரர், தூக்க மாத்திரை இருக்கிறதா மேடம்? இருந்தால் ஒன்று சாப்பிடுங்கள்" என்றார்.

"பரவாயில்லை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள் லாரா.

"அல்லது ஸ்டிராங்காய் ஏதாவது ட்ரிங் சாப்பிடுங்கள்"

"சாயந்தரத்திலிருந்து நான் ட்ரிங்கே சாப்பிடவில்ல" என்றாள் லாரா. "என் கணவரோடு வெளியே போனால்தான் மது அருந்துவேன். அவர் இல்லையென்றால் கிடையாது."

"இருந்தாலும் இப்போது கொஞ்சம் சாப்பிட்டீர்களானால் உடம்புக்குத் தெம்பாயிருக்கும். நான் எடுத்து தரட்டுமா?"

அவள் சற்றுத் தயங்கினாள். ஆனால் எடுத்து வந்து தந்தால் சாப்பிடுவாள் என்று பொலிஸாருக்குத் தோன்றியது. மதுபானங்கள் வைத்திருக்கும் அலமாரியிலிருந்து தானே எடுத்து வந்து ஊற்றி தந்தார். நல்ல ஸ்டிராங்கான பிராந்தி.

வேண்டா வெறுப்பாக, முகத்தை அஷ்ட கோணலாக்கிக்கொண்டு அதைக் குடித்தாள் லாரா. ஆனால் குடித்த பின்னர் பொலிஸ்காரரை நோக்கிப் புன்னகை செய்து, "தாங்க்ஸ்" என்றாள். "நீங்களும் உங்கள் தோழரும் எனக்கு ரொம்ப உதவியாக இருந்திருக்கிறீர்கள். செனட்டர் ஊரிலிருந்து வந்ததும் உங்களைப் பற்றிச் சொல்லிறேன். மிகவும் சந்தோஷப்படுவார்."

"இதில் என்ன மேடம்?" என்று கூறிவிட்டு அந்தப் பொலிஸ்காரர் வேனுக்குத் திரும்பினார். வேனில் இருந்த பொலிஸ்காரர், "ஏனப்பா, அந்த அம்மாளை நாம் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போயிருக்க வேண்டாமோ? குடித்திருந்தாளா இல்லையா என்று அங்கே செக் பண்ணுவார்கள் இல்லையா? நாளைக்கு விசாரணை வந்தால்...?" என்று கேள்வி எழுப்பினார்.

"கம்மென்றிரு, டாம்!" என்று அவரை அதட்டினார். முதல் பொலிஸ்காரர். "அந்த அம்மாள் சாதாரண நபரா என்ன? செனட்டரின் மனைவி. ஏற்கெனவே இந்தக் கார் விபத்தினால் பைத்தியம் பிடித்த மாதிரி இருக்கிறாள். அந்தப் பையன் இறந்து போனதில் வேறே அதிர்ச்சி. ஆஸ்பத்திரி, அது இது என்று நாம் எதற்குக் கலாட்டா செய்ய வேண்டும்? அத்தோடு தான் எதுவும் குடிக்கவில்லை என்று அந்த அம்மாளே சொன்னாள். அதற்கு மேலே என்ன வேண்டும்?"

இந்த இரண்டாவது பொலிஸ்காரருக்கும் அது நியாயமே என்று பட்டது.

(தாய் தொடர்வாள்.....)

ஆலிஸனை உதவிக்கு வந்த டாக்டர் இளைஞன் காப்பற்றப் பாடு படுகின்றான். காரை துண்டுதுண்டாக வெட்டி அனைவரையும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்கிறார்கள். விசாரணையில் இவர்களின் காருடன் மோதிய மற்றைய காரை செலுத்தி வந்தவர் செனட்டர் ஒருவரின் மனைவி என்பது தெரிய வருகிறது.


## 200 கோடி பட்ஜெட் படத்தில் ஐஸ்வர்யா!



ஐஸ்வர்யா ராய்

புத்த மதம் 2550ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் காணப்போகிறது! இதையொட்டி மஹபோத்தி சமுதாயத்தினர் இணைந்து புத்தர் பற்றிய படமொன்றைத் தயாரிக்கவிருக்கின்றனர். இது இந்திய அளவிலான படமாக இல்லாமல் உலக அளவிலான அம்சங்களோடு வெளிவரப்போகிறது. இயக்க இருப்பவர் இந்தியாவின் பிரபல இயக்குநர் சேகர்கபூர். இதில் ஹாலிவுட் ஸ்டார்களான பிராட்பிட்டும், ரீச்சர்டு கெரேவும் நடிக்க இருக்கின்றனர்.

தி பேஸன் ஆஃப் கிறிஸ்ட் என்ற ஆங்கிலப் படத்திற்கு மெல்கிப்சன் பாதி தயாரிப்பாளராகப் பணம் போட்டார். அதேபோல் 'சுஜாதா' என்ற இந்த புத்தரைப் பற்றிய காவியத்திற்கு ரீச்சர்டு கெரே பணம் போட உள்ளார். தவிர, மிகப்பெரிய அளவில் தொழிலதிபர் மோடியும் இப் படத்தில் பணத்தை இறைக்க உள்ளார்.



ஐஸ்வர்யா ராய்

ஐஸ்வர்யா ர்ராய்க்கு இரண்டு விதமான நடிப்பினை வெளிப்படுத்தும் வாய்ப்பு இப் படத்தில் உள்ளது. முதலில் இளவரசியாகவும், பின்னர் புத்த மதத்தைத் தழுவி அதின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் சந்நியாச ஸ்திரீயாகவும் நடிக்க உள்ளார். படத்தைப் புத்தரின் 2550வது பிறந்த நாளில் அதாவது 2006இல் வெளியிட இருக்கிறார்கள்.

## உள்ளங் கவர் கள்வன்




பிரியங்கா சோப்ரா

பிரியங்கா சோப்ராவுக்கு ஒரு விநோதமான ஆசை, தன் உள்ளம் கவரப்போகும் க்ள்வனையே திரும்பத் திரும்ப ஆறு முறை திருமணம் செய்துகொள்ள வேண்டுமாம். எப்படி, அம்பாலாவில் இருக்கும் தன் தாத்தா - பாட்டில் வீட்டில் முதல் முறை. பஞ்சாபி பாணியில் மெஹந்தி அணிந்து, சங்கீத வாத்தியங்கள் முழங்க ஆனந்தமும் ஆர்ப்பாட்டமும் கலந்த கல்யாணமாக இருக்குமாம் அது. இரண்டாவதாக, சுவிற்ஸர்லாந்தில் இருக்கும் ஒரு சர்ச்சில் அமைதியும் சாந்தியும் நிலவும் திருமணம். மூன்றாவதாக, லாஸ்வேகாஸில் கன்னாபின்னாவென ஆடம்பரமாக ஒன்று. அடுத்தது, ஸ்கூபா டைவிங் உபகரணங்கள் அணிந்து நீருக்கடியில். விருந்தினர்களும் தண்ணீருக்கு உள்ளே வர வேண்டுமாம். ஐந்தாவது, மொஹல் முறையில் ஒரு நிக்காஹ். ஆறாவது கல்யாணம் ரிஜிஸ்திரார் ஆபீஸில் நெருங்கிய சொந்தங்கள் சாட்சிக் கையெழுத்திட பதிவுத் திருமணம்.

சரி....ஹனிமூன்? திகட்டத் திகட்ட காஸபிளாங்காவில். இதற்கு மேல் தகவல் சொல்லமாட்டேன் என்கிறார் பிரியங்கா.

## நம்பிக்கை




இஷா ஷெர்வானி

'எப்படி இப்படியொரு வாய்ப்பு வந்தது என்று எனக்கு இன்னமும் புரியவில்லை....' என்று நினைத்து நினைத்து மகிழ்கிறார் இஷா ஷெர்வானி. (நம்ம இஷா கோபிகருக்கும் இவருக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை) சுபாஷ் சுய்யின் புதுப்பட ஹீரோயின் வாய்ப்பு பற்றித்தான் இப்படிச் சொல்கிறார் இஷா. நடன இயக்குநர் வாய்ப்புக் கேட்டு சுபாஷைச் சந்தித்த இஷா, இப்போது ஹீரோயின். பதிமூனு வயசிலிருந்தே நாட்டியத்தில் புலியாம்.

"ஐஸ்வர்யா ராய்க்கு ஒரு தால், ப்ரீத்தி ஜிந்ததாவுக்கு ஒரு கல் ஹோநா, கஜோலுக்கு ஒரு தில்வாலே துல்ஹானியா லே ஜாயேங்கே கிடைத்தது போல என் திறமையைக் காட்ட எனக்கு இந்த ஒரு படம் போதும். என்னை நீங்கள் என்றும் மறக்கமாட்டீர்கள்!" என்று தன்னம்பிக்கையோடு பேசுகிறார்.

நம்பிக்கையில்தானே சுழல்கிறது.








# சுனாமியின் அவலத் தடங்கள்








கொடூரமான கடற் கொந்தளிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் உடமைகளை/உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். முரசு:- ஆசிரியர் குழு + ஊழியர்கள்

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இலங்கை இனப்பிரச்சினையில் அமெரிக்கத் தலைப்பாடு!




**பா**ர்த்தசாரதியிடம் ஜெயவர்த்தன கூறினார்: "ஒவ்வொரு மாவட்டத்துக்கும் குறிப்பிடத்தக்களவு சுயாட்சி கிடைக்கக்கூடிய வகையில் மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் பூரணமாக அமுல்படுத்தத் தயாராக வுள்ளேன். மாவட்ட அபிவிருத்திச் சபைத் திட்டத்தைப் பூரணமாக அமுல்படுத்துவதற்கு நிதிப் பிரச்சினைகளும் அரசியலமைப்புப் பிரச்சினைகளும் இடைஞ்சல்களாக இருக்கின்றன. இதனால் அத் திட்டம் தாமதமாகிறது."

இதற்குப் பதிலளித்த பார்த்தசாரதி, "தமக்கெனத் தாயகமொன்றினைக் கோரும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு மாவட்ட அபிவிருத்தி சபை தீர்வாக அமையப் போவதில்லை" என்றார்.

பங்களாதேஷில் நேரடி இராணுவ நடவடிக்கை மேற்கொண்டதுபோல் இலங்கையில் நேரடித் தலையீட்டை இந்தியா தவிர்த்துக் கொண்டமைக்கு இன்னுமொரு காரணமும் இருந்தது. இலங்கையின் இறைமையில் இந்தியா தலையிடுவதாக மேற்கு நாடுகள் கண்டிக்கக் கூடுமென்ற அச்சமும் இந்தியாவுக்கு இருந்தது. இதனால் இந்தியா இரு முனைகளில் தனது இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1981ஆம் ஆண்டிலிருந்து இலங்கையிலுள்ள தமிழ்ப் போராட்ட இயக்கங்களுக்கு இந்தியா ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் பணமும் வழங்கி வந்திருக்கிறது. 1983ஆம் ஆண்டு ஜுலை இன சங்காரத்தையடுத்து இந்திய உளவு நிறுவனமான 'றோ' சகல தமிழீழக் குழுக்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டது. இதேவேளை ஈரோஸ், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., புலிகள், டெலோ ஆகிய இயக்கங்கள் அனைத்தும் சென்னையில் தமது அலுவலகங்களை ஏற்படுத்திக்கொண்டன. தமிழ்க் குழுக்களுக்கு இந்தியா ஆயுதங்களையும் பயிற்சிகளையும் அளித்த அதேவேளை தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்று இலங்கை அரசுக்கு

> **1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் நான்காம் திகதி இலங்கையின் வான் பரப்பை அத்துமீறி இந்திய விமானங்கள் பறந்து உலர் உணவுப் பொருட்களைப் போட்டபோது கூட, அமெரிக்கா உட்பட எந்தவொரு பெரிய நாடும் இந்தியாவைக் கண்டிக்கவில்லையென்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. அமெரிக்கா கவலை தெரிவித்தபோதும் இந்திய உதவியுடன் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு இலங்கை அரசாங்கத்தை அமெரிக்கா வற்புறுத்தியது.**

அழுத்தம் கொடுத்து வந்தது. இந்த முயற்சியின் ஓர் அங்கமாகவே பார்த்தசாரதியின் இலங்கை விஜயம் அமைந்தது. பார்த்தசாரதி இந்தியா திரும்பியதும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், இரா. சம்பந்தன் ஆகியோரையும் தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் மற்றும் தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோரையும் சந்தித்துப் பேசினார்.

செப்டெம்பர் மாதம் ஐந்தாம் திகதி அமிர்தலிங்கம் இந்திராகாந்தியைச் சந்தித்துப் பேசினார். மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாதென்று அமிர்தலிங்கம் இந்திரா காந்தியிடம் கூறினார். அன்று மாலை அமிர், பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில், இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தயாராக இருப்பதாக அறிவித்தார். இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லையென்று மன்னாரில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவை மாற்றத் தயாராக இருப்பதாகவும் அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

(அரசியல் தொடர்)

பார்த்தசாரதியின் இலங்கை விஜயம், தமிழர்களின் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான வழிவகையை ஏற்படுத்தியது.

இதற்கிடையில் அமெரிக்க இராணுவத் தளபதி 1983ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலும் பின்னர் 1984ஆம் ஆண்டும் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயங்கள் இராணுவ மற்றும் அரசியல் முனையில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தின. அமெரிக்க உளவுத் துறையில் ஜெனரல் வோல்டர்ஸ் ஒரு பெரும் புள்ளியாவார். 1983ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த வோல்டர்ஸ் இந்தியாவுக்குச் சென்றார். இந்தியாவின் தேசிய பந்தோபஸ்து சம்பந்தப்பட்ட அமெரிக்கக் கொள்கைகளில் இந்திய எதிர்ப்பை ஏற்படுத்துவதற்கு ஜெனரல் வோல்டர்ஸ் பெரும் பங்காற்றியவரென்று இந்திய தரப்பில் நம்பப்பட்டது. தமிழ்ப் பிரிவினைவாத இயக்கங்களுக்கு இந்தியா பயிற்சியும் ஆயுதங்களும் வழங்குகின்றதென்ற தகவலை விபரமாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு ஜெனரல் வோல்டர்ஸ் எடுத்துரைத்தார். இலங்கைக்கு இஸ்ரேலிடமிருந்து ஆயுதங்களையும் உளவுத் தகவல்களையும் பெற்றுக் கொடுப்பதற்கு இடைத்தரகராகச் செயற்படவும் ஜெனரல் வோல்டர்ஸ் இணக்கம் தெரிவித்தார். இலங்கை ஆயுதப் படைகளில் பிரிட்டிஷ் கைக்கூலிப் படையினரையும் பாகிஸ்தானிய இராணுவ அதிகாரிகளையும் கடமையில்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

ஈடுபடுத்துவதற்கான அலுவல்களையும் இவரே கவனித்துக் கொண்டார். இலங்கை விவகாரம் தொடர்பாக கொழும்பிலும் வாஷிங்டனிலும் வோல்டர்ஸ் மத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிய தகவல்கள் இந்தியாவுக்குக் கிட்டியதாக இலங்கையில் இந்திய ஸ்தானிகராகப் பணி யாற்றிய ஜே.என். தீக்ஷித் ஒரு தடவை கூறியிருந்தார். இவை இந்திராகாந்திக்குக் கோபத்தை ஏற்படுத்தி யிருக்குமென்பதில் சந்தேகமில்லை.


1984ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாக ஜெனரல் வோல்டர்ஸ் கொழும்புக்கு வருகை தந்தபோது, இந்தியாவில் தமிழீழக் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்படுவது தொடர்பான செய்மதிப் புகைப்படங்கள் அமெரிக்காவிடம் இருப்பதாக அப்போதைய தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியிடம் தெரிவித்தார். தமிழ்க் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சிகள் அளிக்கப்படுவதைத் தொடர்ந்து இந்தியா மறுத்து வருமானால் இப் புகைப்படங்களை பத்திரிகைகளுக்கு வழங்கி இந்தியாவுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தப் போவதாகவும் ஜெனரல் வோல்டர்ஸ் கூறினார். இப் பயிற்சி முகாம்களை இந்தியா மூடி விட வேண்டுமென்றும் வோல்டர்ஸ் கருத்துத் தெரிவித்தார். எனினும் இலங்கைப் பிரச்சனை தொடர்பாக இந்தியாவுடன் முரண்பட்டுக்கொள்ள அமெரிக்கா என்றுமே விரும்பியதில்லை. 1983ஆம் ஆண்டு ஜுன் 16ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை ஜனாதிபதி ஜெயவர்த்தன அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்கள் பெற எடுத்த முயற்சி பலிக்கவில்லையென்பது இங்கு குறிப்பிடத் தக்கது. அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது அமெரிக்கா இலங்கைக்கு நேரடியாக ஆயுத உதவிகள் அளிப்பதையும் தவிர்த்து வந்தது.

1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் நான்காம் திகதி இலங்கையின் வான் பரப்பை அத்துமீறி இந்திய விமானங்கள் பறந்து உலர் உணவுப் பொருட்களைப் போட்டபோது கூட, அமெரிக்கா உட்பட எந்தவொரு பெரிய நாடும் இந்தியாவைக் கண்டிக்கவில்லையென்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. அமெரிக்கா கவலை தெரிவித்தபோதும் இந்திய உதவியுடன் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு இலங்கை அரசாங்கத்தை அமெரிக்கா வற்புறுத்தியது.

1984ஆம் ஆண்டு அமெரிக்க செனட்டின் வெளிவிவகாரக் கமிட்டிக்கு தெற்காசியாவுக்கான அப்போதைய பிரதி உதவி வெளிவிவகாரச் செயலாளர் சமர்ப்பித்த அறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

"ஜனாதிபதி ஜெயவர்த்தன அமெரிக்காவுக்கு இராஜதந்திர விஜயம் மேற்கொண்டபோது பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் அவர் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து எமது அங்கீகாரத்தை வெளிப்படுத்தினோம். இனப் பிரச்சினைக்கு சமாதான அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்கு அவர் தொடர்ந்தும் முயற்சி செய்ய வேண்டுமென்ற எமது எதிர்பார்ப்பை அவருக்கு தெரியப்படுத்தினோம்." ஆரம்பத்திலிருந்தே பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்பதே அமெரிக்காவின் நிலைப்பாடாக இருந்து வந்தது.

(தொடர்ந்து வடியும்....)




**வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!**

கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகளையும் உறவுகளையும் உடைமைகளையும் இயல்பு வாழ்க்கையையும் இழந்து தஞ்சம் கோரி நிற்கும் எங்கள் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அநுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். உயிரிழப்புக்கு ஆளான ஆயிரக்கணக்கான எம் உறவுகள் முரசின் வாசகர்களாக இருந்து இப்போது எங்களை விட்டு பிரிந்துள்ளனர். ஒரு பக்கமும் இந்தக் கவலை தவித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு உதவுகின்ற பெயரில் ஒரு சிலர் நடத்துகின்ற நாடகம் மற்றொரு பக்கமும் மனவேதனையைத் தருகின்றன. என்றாலும் சமகாலத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சில விடயங்களை நாம் பேசாது விட்டால் வரலாற்றில் இச் சம்பவங்கள் மறைக்கப்பட்டுவிடலாம் என்பதனாலே, துக்கம் தொண்டையை அடைக்கின்றபோதும் உதடுகளைப் பிரித்து பேச முற்படுகின்றோம். மீண்டும், மன்னவரும், சின்னவருமாகிய எங்கள் இருவரினதும் இதய அஞ்சலிகளையும், ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

***சின் :-*** *சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள்நாட்டிலேயே பலரும் தம்மாலான உதவிகளைச் செய்து வருகின்ற இவ்வேளையில் சர்வதேச நாடுகளும் தாராளமாக உதவ முன்வந்துள்ளன. அந் நாடுகள் இலங்கை அரசாங்கத்தினூடாகவே தமது நிவாரணப் பணிகளை மேற்கொண்டும் வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்குக் கிழக்கில் வழங்கப்படுகின்ற நிவாரண உதவிகள் புலிகளுக்கூடாகவே வழங்கப்பட வேண்டும் எனக் கேட்டிருக்கிறதே.*

**மன் :-** பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதில் அல்லது உதவுவதில் அரசாங்கமும் தம்பிமாரும் இணைந்தே சேவை செய்யப் போவதாக தெரிவித்துள்ளனர். அதேவேளை முரண்பாடுகளையும் அரசியல் பேதங்களையும் தூக்கிப் பிடிக்காமல் அர்ப்பணிப்போடு செயலாற்றப் போவதாகவும் தெரிவித்துள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இவ்வேண்டுகோள் கபடத்தனமானது என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்.

***சின் :-*** *தஞ்சம் கோரியிருக்கும் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாகவே உதவிகள் வழங்கப்பட வேண்டுமென உதவி செய்ய வருபவர்களிடம் வலியுறுத்தப்படுகின்றதாகக் கேள்வி. அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.?*

**மன் :-** அதற்கு முதல், ஒவ்வொரு அகதி முகாம்களிலும் நிர்வாகக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதுவும் தம்பிமார்தான் அமைத்துள்ளனர். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திலும் தம்பிமார்தான் அங்கம் வகிக்கிறார்கள். அரசாங்கத்தோடும் தம்பிமார்தான் இணங்கிச் செயற்பட விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். ஆக, தலையில் இருந்தால் தலைமுடி, மூக்குக்கும் மேல் உதட்டுக்கும் இடையில் இருந்தால் மீசை, கண் இமைக்கு மேல இருந்தால் புருவம் எண்டும் சொல்லுமாப் போல எல்லாம் முடிதான், பெயர்தான் மாற்றம் பெற்றிருக்கு. இதுக்கு மேல கேக்காதயுங்கோ.

***சின் :-*** *ஏற்கெனவே வெள்ளம் வந்து சனம் படாத பாடு பட்டுச்சுதுகள். பிறகு சுனாமி எண்டு கடற்பெருக்கு. திரும்பவும் கடும் மழை பெய்து வெள்ளம் போட்டிருக்குதே. அப்பிடி இயற்கைக்கு எங்கட சனத்தின் மேல் என்ன கோபமோ?*

**மன் :-** கோப தாபம் எண்டு ஒண்டுமில்ல. எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது. எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும். இந்த கீதையின்ர உபதேசமானது இயற்கைக்கு மட்டும் பொருத்தம். மனிதனுக்கோ இதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. எதைச் சொல்லிறன் எண்டு புரியுதோ. தூங்கிக் கிடக்கிற யுத்தப் பிசாசை ஈரச் சாக்கால அடிச்சு எழுப்பிறவனும் மனுசன்தானே.

***சின் :-*** *பாராளுமன்றத்தில இந்த ஆண்டுக்கான புதிய அமர்வுகள் ஆரம்பித்துள்ளன. அரசியல் மாற்றங்கள் எதையும் எதிர்பார்க்கலாமா?*

**மன் :-** அரசியல் மாற்றங்கள் எதுவும் நடக்கும் என்ற எதிர்பார்ப்பு டிசம்பர் 26 வரைக்கும் இருந்தது வாஸ்தவம்தான். ஆனால் இப்போது நிலைமை வேறு கோணத்தில் மாறியிருக்கிறது. புலிகளோட நெருங்கிப் போற முயற்சியில அரசாங்கம் மிகக் கவனமாக இருப்பதையும் வெளிநாட்டு இராணுவங்கள் இலங்கையில தளம் அமைக்க இருப்பதையும், இராணுவத்துக்கும் புலிகளுக்கும் சுனாமி தாக்கம் பெரியளவில் இடம்பெற்றிருப்பதையும் பாக்கேக்க உடனடியான யுத்தம் ஒண்டு வருமெண்டு எதிர்பார்க்க முடியாது. தவிரவும், எதிர்க்கட்சிகளும் அரச தரப்பும் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும், நாட்டை மீளக் கட்டியெழுப்பவும் உறுதி கொண்டிருப்பதால் உடனடி அரசியல் மாற்றங்கள் எதுவும் இடம்பெற வாய்ப்பில்லை.

***சின் :-*** *ஒவ்வொரு வருடமும் களியாட்டங்களுடனும், கேளிக்கைகளோடும், பட்டாசுச் சத்தங்களுடனும் புதுவருடப் பிறப்புகள் வரவேற்கப்படுவதுண்டு. இவ்வருடம் அப்படியெதுவும் இல்லாமல், மிகவும் அமைதியான முறையில் வரவேற்கப்பட்டிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்.?*

**மன் :-** கடந்த ஆண்டுகளைப் பொறுத்தவரையில் பரபரப்பாக வரவேற்கப்பட்டு துயரத்தோடு விடைகொடுக்கப்பட்டன. 2005ஆம் ஆண்டைப் பொறுத்தவரை அதிலிருந்து வேறுபடுகின்றது. அதாவது கரும்பு சாப்பிடும் ஒருவர் நுனியிலிருந்து அடிப்பக்கமாக சாப்பிடும்போது ருசியில்லாமல் ஆரம்பித்து ருசியாக முடியும் என்பது போல ஆரவாரம் இல்லாமல் வரவேற்கப்பட்ட இவ்வாண்டு மகிழ்ச்சி ஆரவாரத்தோடு விடைகொடுக்கும் என்றே தோன்றுகிறது. இது திட்டமிட்டு நடைபெறவில்லை என்றாலும் சுனாமியின் தாக்கத்தில் நாடே மரண வீடாகிப்போயுள்ள நேரத்தில் பட்டாசு கொளுத்துமளவிற்குப் பகுத்தறிவில்லாதவர் எவருமில்லை என்பதையே நிலவிய அமைதி வெளிப்படுத்தி நிற்கின்றது.

***சின் :-*** *நோர்வேயின் இலங்கைக்கான சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறதே, நத்தையின் நகர்வு போல இருக்கும் சமாதான முயற்சிகளில் ஏதாவது முன்னேற்றங்கள் எற்பட வாய்ப்புள்ளதா?*

**மன் :-** அப்பிடி ஒரு எதிர்பார்ப்பு எப்பவுமே எரிக் சொல்ஹெய்முக்கு இருக்கும் தற்போது சுனாமியின் அனர்த்தத்தினால் அரசாங்கமும் புலிகளும் தூரத்தில் ஆனால் நேர்கோட்டில் ஒன்றுசேர்ந்திருப்பதால் இரு தரப்பினரையும் நெருங்கச் செய்ய முடியுமென்ற புதிய நம்பிக்கைகள் அவருக்கு ஏற்பட்டிருக்கக் கூடும். எப்பொழுதுமே வெவ்வேறு திசையை நோக்கியிருப்பவர்கள் ஒரே திசையைப் பார்க்கின்றபோது, அவர்களை நெருங்கச் செய்வதென்பது தகுதியான மத்தியஸ்தர் ஒருவருக்கு ஓரளவு இலகுவான காரியமாகும். தற்போதைய நிலையில் சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதில் எதிர்ப்புகள் குறைவாகவே உள்ளதால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் இலங்கை மக்களுக்கே அதிகமாக உள்ளது. இதில் எரிக் சொல்ஹெய்மின் பங்கானது எதிர்பார்ப்புகளைத் தாண்டியதாகும்.

***சின் :-*** *பெண்கள், ஆண்கள், குழந்தைகள் என சுனாமி அனர்த்தத்தில் உடன் பிறப்புகளை, பிள்ளைகளை, கணவனை, மனைவியை இழந்து அனாதரவாக நிற்பவர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையப்போகின்றது.*

**மன் :-** சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் எனும்போதே வார்த்தைகளால் அவர்களின் நிலைமையை விபரிக்க முடியாது. ஆனாலும், சமூக ஆர்வலர்களை நோக்கி சில வேண்டுகோள்களை விடுக்க முடியும். அநாதரவாக தனியே உலக வாழ்க்கைக்கு முகங்கொடுக்கப் போகும் இவ்வாறனவர்களுக்கு முதலில் உளவியல் ரீதியான நம்பிக்கை தரும் செயற்பாடுகளும், அன்பும், பாசமும் கிடைக்கும் பராமரிப்பும் தேவையாகவுள்ளது. ஆதரவற்ற குழந்தைகளை குழந்தைகளற்ற மனிதாபிமானமுள்ளவர்கள் தத்தெடுத்துக்கொள்ளலாம். வயதுக்கு வந்தவர்களை அவர்களுக்குப் பொருத்தமான இடங்களில் சேர்த்து வாழ்க்கை அளிப்பது அவசியமாகும். இப் பணிகளே எதிர்காலத்தில் சவால் மிக்கதாக அமையக்கூடும். ஒரு வாசல் மூடி ஒரு வாசல் திறப்பான் இறைவன் என்பது போல இப்படி அநாதரவாக நிற்பவர்களுக்கும், வாழ்க்கை உண்டு என்ற நம்பிக்கையை அவர்களுக்கு வரச் செய்ய வேண்டும் அல்லது தர வேண்டும் இதுவே மனிதநேய ஆர்வலர்களை நோக்கி நாம் விடுக்கும் வேண்டுகோளாகும்.

அது சரி, சின்னவரே வழமையாக நான் ஒரு பதில் சொன்னால் அதற்கொரு நையாண்டி நீர் சொல்வீர், இவ்வாரம் ஏனோ கேள்விகளை மட்டும் கேட்டு வைக்கிறீர். ஒருவேளை துக்கங்களை சேகரித்து வைத்திருக்கும் உம்மால் நக்கல்களை உதிர்க்க முடியாமல் போயிற்றோ. நடப்பதெல்லாம் நன்மைக்கே. அடுத்த வாரமாவது வழமை நிலைமையோடு சந்திப்போம்.

**மன்னவரும் சின்னவரும்**

**கொடூரமான கடற் கொந்தளிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் உடைமைகளை/உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.** முரசு:- ஆசிரியர் குழு + ஊழியர்கள்

# இன்னும் ஒரே ஒரு நாள்...

ஆசைகளைப் பற்றி நமது வேதங்கள் விரிவாக விவாதித்திருக்கின்றன! ஆசைகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று - அடிப்படையான ஆசைகள். அதாவது, Fundamental Desires. இரண்டாவது - அவ்வப்போது வரும் ஆசைகள். அதாவது, Topical Desires.

அவ்வப்போது எழும் ஆசைகள் என்பது என்ன?

இனிப்பு சாப்பிட வேண்டும் என ஆசைப்படுகிறோம். சாப்பிடுகிறோம். ரி.வி. வாங்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். வாங்குகிறோம். இதெல்லாம்தான் 'டாபிக்கல்' ஆசைகள்!

அடிப்படையான ஆசைகளுக்கு வருவோம். இவைதான் மிக முக்கியமானவை. இதில் மூன்று ஆசைகள் அடக்கம்.

இன்றுதான் நம் வாழ்க்கையின் கடைசி நாள் என்று தெரிந்தால், இன்னும் ஒரே ஒரு நாளாவது கூடுதலாக நாம் உயிர்வாழ மாட்டோமா? என்று ஓர் ஆசை எல்லோருக்குமே பிறக்கும். இதுதான் முதல் ஆசை!

இந்த இடத்தில் ஒரு சின்ன பிரேக்...நான் முதன்முதலாகக் கீதையைப் பற்றிச் சொற்பொழிவாற்றப் போனபோது, அந்தக் கூட்டத்தில் முதல் நாள் பேச்சை முடித்துவிட்டு ஓய்வெடுக்கச் சென்றுவிட்டேன். அன்றிரவு நான் தங்கியிருந்த ஓட்டல் அறையின் கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்தபோது, ஓர் இளம் பெண் நின்றிருந்தாள்!

நான் 'என்ன.....?'என்று கேட்பதற்கு முன்பே, அந்தப் பெண் படபடவென்று பேச ஆரம்பித்தாள். "நான் தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில்தான், இன்று என் கொடுமைக்கார மாமியாரின் வீட்டை விட்டுக் கிளம்பினேன்! கடற்கரையில் ஜனசந்தடியாக இருந்தது. 'சரி, இன்னும் ஒன்று, இரண்டு மணி நேரம் கழித்துத் தற்கொலை செய்துகொண்டால் யாரும் என்னை வந்து காப்பாற்றமாட்டார்கள்' என்று பட்டது. அதனால் நேரத்தை ஓட்டுவதற்காக, உங்களின் கீதை பிரசங்கம் நடக்கும் இடத்துக்கு வந்தேன்.

நீங்களோ....'எல்லோருக்குமே கூடுதலாக ஒரே ஒரு நாளாவது வாழவேண்டும் என்று ஆசை இருக்கிறது.' என்று உளறிக் கொட்டிக்கொண்டிருக்கிறீர்கள். இது தவறு! இதோ என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். இனி ஒரே ஒருநாள் கூட வாழ வேண்டும் என்ற ஆசை எனக்கில்லை! என் உயிரை மாய்த்துக்கொள்ள, இப்போது நேராக கடற்கரைக்குத்தான் சென்று கொண்டிருக்கிறேன்...." என்று சொல்லிவிட்டு அறைக்கு வெளியே நடக்க ஆரம்பித்தாள்.

சந்நியாசியான என்னை ஓர் இளம் பெண் நள்ளிரவில் சந்தித்துவிட்டு, நேரடியாகக் கடற்கரைக்குப் போய்த் தற்கொலை செய்துகொண்டால் என்ன ஆகும்...?

வேகமாகக் கிளம்பிய அந்தப் பெண்ணைத் தடுத்து நிறுத்தி, "நான் சொல்ல வந்ததில் பாதியைத்தான் இன்று சொற்பொழிவில் சொன்னேன்.... சொல்ல வேண்டியது இன்னும் மீதி இருக்கிறது! நாளை வரை காத்திருந்து நான் சொல்லப் போவதையும் கேட்டுவிடு...." என்றேன்.

அடுத்த நாள் கீதை சொற்பொழிவை, நான் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தேன். அங்கே நான் சொன்ன விஷயம் இதுதான்...

எல்லோருக்குமே ஒரே ஒரு நாள் கூடுதலாக வாழ்ந்துவிட வேண்டும் என்று ஆசை இருக்கிறது. இதை நமது வேதம் 'சத்' என்று குறிப்பிடுகிறது. ஆனால், கூடுதலாக வாழப்போகிற அந்த நாள் மகிழ்ச்சியானதாக இருக்க வேண்டும் என்றே அனைவரும் ஆசைப்படுகிறோம். இதை வேதம்



'ஆனந்தம்' என்கிறது. நிரந்தர மகிழ்ச்சி கிடைத்துவிட்டால், எந்த மனிதனும் சாக விரும்பமாட்டான். தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்துடன் என்னைச் சந்தித்த பெண் உட்பட "(அதன்பிறகு நான் அந்தப் பெண்மணியைப் பார்க்கவில்லை என்பது வேறு விஷயம்).

மனிதனுக்கு உள்ள மூன்றாவது நிரந்தர ஆசை, தனது வாழ்நாளில் நிறைய தகவல்களை - அறிவைச் சேகரிக்க வேண்டும் என்பது! இந்தக் கருத்தை எங்கே சொன்னாலும் கடுமையான எதிர்ப்புக் கிளம்புவது வழக்கம்! 'என் மகனுக்குப் பத்து வயதுதான் ஆகிறது. அவனுக்குப் பள்ளிக்கூடப் பாடங்களிலேயே ஈடுபாடு இல்லை. ஆனால் நீங்களோ, ஒவ்வொரு மனிதனுக்கும் அறிவைச் சேகரிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது என்கிறீர்கள். அது எப்படி....?' என்று சிலர் கேட்கலாம். ஒருவனுக்குப் பள்ளிக்கூடத்தில் கற்றுத் தரப்படும் பாடத்தின் மீது ஈர்ப்பு இல்லாமல் இருக்கலாம். ஆனால், அதற்கு அர்த்தம், எந்த வகையான அறிவைச் சேகரிப்பதிலுமே அவனுக்கு ஆசை இல்லை என்பது கிடையாது.

ஒரு முக்கியமான இரகசியம்! 'இது உனக்குத் தெரியக் கூடாது' என்று யாரிடம் வேண்டுமானாலும் சொல்லிப் பாருங்கள். அது என்ன இரகசியம் என்று அறிய, அடுத்த நாள் வரை அவரால் காத்திருக்க முடியாது. அதனால்தான் சொல்கிறேன். தகவல்களைச் சேகரிக்க வேண்டும். புதிது புதிதாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசைதான், மூன்றாவது நிரந்தரமான ஆசை! இந்த ஆசையைத்தான் நமது வேதங்கள் 'சித்' என்று குறிப்பிடுகின்றன.

ஆக-

'சத்' எனப்படுவது வாழ்கிற ஆசை.

அடுத்து, 'ஆனந்தம்' என்ற ஆசை....வாழ்கின்ற நாள் மகிழ்ச்சியானதாக இருக்க வேண்டும் என்பது.

மூன்றாவதான 'சித்' எனப்படும் அறிவைச் சேகரிக்கும் ஆசை.

இதைத்தான் நமது வேதம் 'சத் - சித் - ஆனந்தம்' என்று மொத்தமாகச் சொல்கிறது. பேச்சுத் தமிழில் சொன்னால், சச்சிதானந்தம்.

சத், சித், ஆனந்தம் என்ற மூன்று ஆசைகளையும்தான் வாழ்க்கைப் பெருங்கடலில் மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு முத்தெடுப்பவன் போல தேடிக் கொண்டேயிருக்கிறோம்.

**நன்றி: சுவாமி சுகபோதானந்தா**

(தொடர்ந்து வரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 101க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

என். எட். பாரூக், 36, தெஹிதெனிய மடிகே, ஹதரலியத்தை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. எம். பரமேஸ்வரி, நெலுவ த.வி.; பண்டாரவளை.
02. அ. சந்தியாகோ, அசோகா வித்தியாலயம். கண்டி.
03. ஆர். சுரேஷ்குமார், 25, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு.
04. எம்.ஜே.எம். ஹிஷாம், 55, சங்கம, சீனக்குடா, திருகோணமலை.
05. ச. சந்துரு, 8ஆம் குறுக்கு, புதிய டச்பார் வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
06. திருமதி. சா. சிவநேசன், கெதிகண்ணாவலை, மயிலபிடிய.
07. திருமதி. அன்ரன் மேசி, கர்த்தர் கோயில் (அருகாமையில்), கீரி, மன்னார்.
08. ஜீ.ஏ. நிரோஷன், 158, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
09. எஸ் நிவேதா, கண்டி வீதி, வவுனியா.
10. க. கார்த்திகா, பிரதான வீதி, புத்தளம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 103

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | ■ |
| 4 | 5 | ■ | 6 | ■ |
| 7 | 8 | 9 | ■ | 10 |
| 11 | 12 | 13 | ■ | 14 |
| ■ | 15 | 16 | 17 | 18 |
| ■ | ■ | 19 | 20 | 21 |

### இடமிருந்து வலம்

01. பெண்களின் அணிகலன் ஒன்று (குழம்பியுள்ளது).
06. பஞ்ச பூதங்களில் ஒன்று.
07. ஒரு பறவை - ரஜினி நடித்த திரைப்படமும் உண்டு (குழம்பியுள்ளது).
11. பாசம் (திரும்பியுள்ளது).
15. முன்னை நாள் (குழம்பியுள்ளது).
19. திசை என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

01. இலங்கையில் சனத்தொகை கூடிய மாவட்டம் (குழம்பியுள்ளது).
02. யாழ். மாவட்டத்திலுள்ள ஊர் ஒன்று (குழம்பியுள்ளது).
09. கக்கம் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது).
10. 1985இல் நெடுந்தீவு கடற்பகுதியில் வைத்து சுடப்பட்டு நிர்மூலமாக்கப்பட்ட பொதுமக்கள் பயணித்த படகு.
17. உண் (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 101 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கா 1 | ய் 2 | கி 3 | ஸ் 4 | ர 5 |
| ஷ் 6 | ■ | லி 7 | ■ | தி 8 |
| ஸீ 9 | ■ | ல் 10 | ம 11 | ■ |
| ற் 12 | ஜ 13 | ■ | த 14 | ■ |
| ■ | ணி 15 | ■ | வி 16 | தி 17 |
| தை 18 | ■ | ■ | ■ | ரூ 19 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 11.01.2005க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி;

**குறுக்கெழுத்துப் போட்டி இல-103**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல. - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.


## ராதா ரெக்ஸ்ரைல்ஸின்
## வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 594727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

77

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்: ........................
கையொப்பம்: ...............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 11-01-2005

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சேலை? மட்டக்களப்பு வாசகிக்கு அதிர்ஷ்டம்! 75

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**பு - அனுசா**
70, கதிர்காமர் வீதி, மட்டிக்கழி, மட்டக்களப்பு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

கொடூரமான கடற் கொந்தளிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் உடைமைகளை/உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். முரசு:- ஆசிரியர் குழு + ஊழியர்கள்

# வாழ்க்கை ஒரு நாணயம்

"**பெ**ரிசாச் செய்யயில்ல பெரியம்மா... சும்மா கொஞ்ச சொந்தங்களுக்கு மட்டும்தான் சொல்லியிருக்கு... எல்லாருக்கும் சொல்ல வேணாம் எண்டு அண்ணா சொல்லிட்டுது...."என்று சித்ரா சொல்லுவது, தூக்கம் வராமல் மகளை மார்பில் வளர்த்தித் தூங்கவைத்துக் கொண்டிருந்த சுதாகரின் காதுகளில் சன்னமாகக் கேட்டது. விடிந்தால் தனக்குத் திருமணம் என்ற எந்த உணர்வுமின்றி விடியலை விழித்துக்கொண்டிருந்தான் அவன்.

திருமணம் என்றாலே நண்பர்களின் கேலிப் பேச்சு, உறவினர்களின் தொல்லை, பெரியவர்களின் அறிவுரைகள், அதற்கும் மேலாக வரப்போகும் மனைவி பற்றிய கற்பனை, எதிர்காலம் பற்றிய சிந்தனை இவைகளால் நிரம்பி வழியும் அறிவும் உள்ளமும் தூக்கம் வராமல் தவிப்பது வழமை. ஆனால் அவை எவையும் இவன் தூக்கத்தைப் பாதிக்கவில்லை. ஆனாலும் அவன் தூங்கவுமில்லை. காரணம், அவன் நினைவுகள் முழுதும் மனைவி ரக்ஷிதா பற்றியே இருந்ததுதான்.

நேற்றோடு திருமணமாகி ஆறாவது வருடம் முடிந்திருந்தது. திருமணநாள் என்பது எல்லோருக்கும் சந்தோசமான தினம்தான். ஆனால் அவனுக்கு மட்டும் அது மிகவும் வேதனைக்குரிய தினமாகிப் போனது சோதனைதான். அன்றுதான் அவன் அன்பு மனைவி - அவன் உயிருக்குயிராய் நேசித்த ரக்ஷிகா இறந்தநாள்.

திருமணமாகி ஒரு வருடம் எவ்வளவு மகிழ்ச்சியாய் அவர்களது நாட்கள் போய்க்கொண்டிருந்தன.....எல்லாமே ஒரு வருடம்தான்....கடவுள் எப்பொழுதும் இப்படித்தான். எவரையும் எந் நேரமும் ஒரே நிலையில் வைத்திருப்பதில்லை. ஒருமுறை மகிழ்ச்சி என்றால், மறுமுறை துன்பந்தான். இல்லாவிட்டால் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்காதல்லவா..... வாழ்க்கை என்பது சுண்டிவிடப்பட்ட நாணயம் போன்றது. பூவும் விழலாம்; தலையும் விழலாம்.

அவர்கள் வாழ்ந்த ஒரு வருட வாழ்க்கையின் அத்தாட்சியாக அந்தக் குழந்தையைக் கொடுத்துவிட்டு அந்தப் புண்ணியவதி போயே போய்விட்டாள்... பெண் குழந்தை. அப்படியே அம்மாவை உரித்து வைத்தாற் போல் இருக்கிறது என்று அனைவரும் அங்கலாய்த்தார்கள். இருக்காதா பின்னே... தன் உயிரை அப்படியே அந்தக் குழந்தைக்குக் கொடுத்துவிட்டல்லவா போய்விட்டாள் அவள்.

அன்றைய தினம் நினைவுப் பெட்டகத்தில் பொறித்து வைக்கப்பட்ட கல்வெட்டுப் போன்று அவனது நினைவு



களை விட்டு நீங்க மறுத்தது. அன்று அலுவலகத்துக்கு விடுப்புக் கொடுத்துவிட்டு வைத்தியசாலையின் பிரசவ அறைக்கு முன் குட்டி போட்ட பூனை போன்று அங்குமிங்குமாக அலைந்துகொண்டிருந் தான். கடவுளே நல்லபடியாகக் குழந்தை பிறக்க வேண்டும் என்று கடவுளை வேண்டிக்கொண்டிருந்தான்.

குழந்தை நல்லபடியாகத்தான் பிறந்தது. ஆனால் கடவுள் ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பறித்துக்கொண்டான். அதிக இரத்தப் பெருக்கின் காரணமாக தாயைக் காப்பாற்ற முடியவில்லை என்று வைத்தியர்கள் சொல்லிவிட்டார்கள். அவர்களும்தான் என்ன செய்வது? அவர்களையும் மீறிய சக்தி ஒன்று உண்டல்லவா! அதை யாரால் வெல்ல முடியும்....உலகத்தில் மரணத்தைத் தவிர எதுதான் நிச்சயமானது ? எதுவுமில்லை!

கதறினான், அழுதான். என்ன பயன்? போனவள் வரவா போகிறாள்? எத்தனையோ பேர் ஆறுதல் சொன்னார்கள். துக்கம் விசாரித்தார்கள்....ஆனால் எதுவும் அவளது இழப்பை ஈடுசெய்யவில்லை. கொஞ்ச நாட்கள் பைத்தியம் போல் திரிந்தான். திடீர் திடீரென்று அழுவதும்.....எவர் கதை கேட்டாலும் எரிந்தெரிந்து விழுவதுமாயிருந்தான். குழந்தை அழுதால் கூட அருகில் சென்று பார்ப்பதில்லை. தானும் சேர்ந்து அழுவான். ஆனாலும் காலமாற்றம் அவனையும் இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தது.

தான் இப்படி இருந்தால் தன் குழந்தை அனாதையாகிவிடும் என்ற உண்மை உறைத்தது அவனுக்கு. கஷ்டப்பட்டுத் தன்னைப் பழைய நிலைக்குத் திருப்பிக்கொண்டான். தனக்காக இல்லாவிட்டாலும் தன் குழந்தைக்காக வாழ்வது என்று முடிவெடுத்தான். தாய்ப்பால் ஒன்றைத் தவிர மற்றைய பொருட்கள் எல்லாவற்றையும் பெற்றுக் கொடுத்தான் அந்தப் பிஞ்சுக் குழந்தைக்கு. அதற்காகவே உண்டு, உடுத்து உறங்கினான். எல்லாம் அதற்குக் கிடைப்பதாக எண்ணி மகிழ்ந்தான். எந்தக் குறையும் இல்லாமல் தன் மகள் வளர்வதாக எண்ணினான். ஆனால் ஐந்து வருடங்களின் பின்தான் அந்த உண்மை அவனுக்கும் தெரிய வந்தது, என்னதான் செய்தாலும் ஒரு தந்தை, தாயாக முடியாது என்பது!

"அப்பா....அம்மா எங்கப்பா எப்ப வருவாங்க...."? குழந்தையின் அத்தனை கடினமான கேள்விகளுக்கும் பதில் சொன்னவனுக்கு இந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொல்ல முடியவில்லை.

"அப்பா எனக்கு அம்மா வேணும்." என்று அவள் அழுது அடம்பிடித்தாள். அதனால் காய்ச்சல் கூட வந்துவிட்டது அவளுக்கு. அதை அவனால் தாங்க முடியவில்லை. கண்களில் இரத்தம் கண்ணீராய் சிதறியது.

எத்தனையோ பேர் பல தடவைகள் கேட்டும் திடமாய் மறுத்திருக்கிறான். "என் ரக்ஷி இருந்த இடத்தில் இன்னொருத்திக்கு இடமில்லை. இனி யாரும் இதைப் பற்றி பேசினீங்கண்ணா இந்த வீட்டை விட்டே போயிடுவன்" என்று கூறியிருக்கிறான். ஆனால் இன்று குழந்தையே கேட்டுவிட்டது. தான் இத்தனை செய்தும் 'அம்மா வேணும்' என்று அழுகிறாளே என்பது அவனுக்கு வருத்தமாகத்தான் இருந்தது.

குழந்தைகளுக்கு என்னதான் செய்தாலும் தாய்ப் பாசத்திற்கு ஈடாக எதுவும் அமையாது என்பதைப் புரிந்துகொண்டான். உடனடியாகக் காரியத்திலும் இறங்கிவிட்டான். அதுதான் அவனது இரண்டாம் திருமணம். அது ஒரு சடங்காக மட்டுமே நிகழ்ந்து முடிந்தது. சட்டத்துக்காகச் செய்யப்படும் கடமைகள் நிறைவேற்றப்பட, அவள் அவனது மனைவியானாள்.....இரண்டாம் தாரமாக....

இந்தத் திருமணத்தின்போது நிகழ்ந்த ஒவ்வொரு நிகழ்வும் அவனது முதல் திருமணத்தின் ஒவ்வொரு நிமிடங்களையும் நினைவுபடுத்தியது....அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியை விடத் துன்பமே அவனுக்கு அதிகமானது.

அன்றைய இரவும் அவனுக்கு நரக வேதனையையே கொடுத்தது. அது அவளுக்கு அவனுடனான முதல் இரவானாலும், முதலிரவாய் இருக்கவில்லை. அவன் அப்படியான ஒரு மனநிலையிலும் இல்லை. அவனால் அவன் முதல் மனைவி

**-இ.மதன், திருமலை.**

ரக்ஷியாவை மறக்க முடியவில்லை.

"இங்க பாருங்க....என்னப் பற்றின எல்லா விஷயமும் உங்களுக்கு நல்லாத் தெரியும்...என் மகளுக்கு ஒரு நல்ல தாய் வேணும் என்றதனாலதான் உங்கள நான்......நான் திருமணம் செய்தனான். அதனால நீங்க என்ன தப்பாப் புரிஞ்சுக்கக் கூடாது" என்று கூறிக்கொண்டே அறையைவிட்டு வெளியேறினான் சுதாகர்.

அவனது நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவனைத் திருமணம் செய்திருந்தாலும் அவளும் உணர்ச்சியுள்ள பெண்தானே...அவளது கண்களிலிருந்தும் கண்ணீர் கன்னம் வழியே வழிந்தோடியது.... ஆனால் அவள் உதடுகள் மட்டும் புன்னகை சிந்தியது, குழந்தையை எண்ணி. அந்தக் குழந்தைக்கு ஒரு நல்ல தாய் கிடைத்துவிட்டாள்..!

# கடைக்குள் மழை

**கு**டை கொண்டு போக மறந்து போகிற நாளில்தான் அநேகமாக மழை பெய்கிறது.

அன்றும் அப்படித்தான். இடியுடன் கூடிய மழை! பஸ்ஸிலிருந்து இறங்க முடியவில்லை. கடையோரம் ஓடிப்போய் ஒதுங்குவதற்குள் முழுதாக நனைந்து போனேன் நான்.

நீர்கொழும்பு வீதி - பொஸ்கோ சந்தியிலிருக்கும் நவீன பேக்கரி அது.

குடையை மறந்தவர்கள் பலர் நின்றுகொண்டிருந் தனர். அவரவர்க்கறிமுகமானவர்கள் குடை பிடித்து வர அவரவர் பாதி நனைந்து நடந்தனர். நான் மட்டும் தனியாக நின்றேன். கடைக்குள் மழை! முழுக்க நனைந்த பின்னே முக்காடு எதற்கு என நினைத்து மழையில் தொடர்ந்து நனைந்து வீட்டுக்குச் செல்ல எத்தனித்தபோதுதான் அந்தக் கார் வந்து நின்றது. முப்பதும் முடியாத முழுநிலவொன்றுதான் காரோட்டி வந்த காரிகை. கவியரசு கண்ணதாசன் நி(இ)ன்றிருந்தால்...இப்படித்தான் பாடி இருப்பார் :

அரம்பை தேச வில்லும்
விரும்பி ஆசை கொள்ளும்
கரு புருவத்தாள் - பிறர்
அறிவை மயக்கும் ஒரு
கர்வம் இருக்கும் மங்கைப் பருவத்தாள்!

என் கம்ப விழிகளில் அவள் சீதையாகத் தெரிந்தாள். அவளை நம்ம வைரமுத்து கண்டால்... 'அழகை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. ஒரு வயலின் தா, வாசித்துக் காட்டுகிறேன்' என்பார். அந்த அழகிக்குப் பக்கத்தில் அவளுடைய கணவன் அமர்ந்திருந்தான். தலை நிமிரான்! திமிரன்! ஆணவன்! காரை நிறுத்தியவள் கைக்குட்டையை எடுத்துத் தலையில் போட்டுக்கொண்டாள்.

கதவைத் திறந்தாள்.

இறங்க விடாத மழை! இடிக்குப் பயந்தவள் மீண்டும் காரில் அமர்ந்தாள். நான் மெதுவாகக் கடைக்குள் நுழைய முயன்றேன்...முடியவில்லை. கடைக்குள் மழை! நவீன கட்டட அமைப்பு அப்படி! கடைக்குள் நேரத்தைப் பார்த்தேன். 6.10. இன்னும் பத்து நிமிஷங்கள்தான் இருக்கின்றன நோன்பு துறக்க. இன்று அஸீஸ் மச்சான் வீட்டில் இப்தார் அழைப்பு. மழை விடுவதாக இல்லை. என் புத்தக அலுமாரி நனைந்ததோ என்னமோ... மனைவியையும் பிள்ளைகளையும் மச்சான் வீட்டுக்குச் செல்லுமாறு சொல்லி இருந்தேன், நான் வேலை முடிந்து நேரே அங்கு வந்து சேர்வதாக.

புலினதலாராம வீதியால் சென்றும் 'மிட்லேண்ட் சிட்டி' போகலாம். அங்கேதான் அஸீஸ் மச்சான் வீடு.

காரிலிருந்த கணவன் - கனவான் - கையால் காட்டிய சைகையறிந்து கடைக்கு வந்த ஒருவரின் குடையைக் கேட்டு வாங்கி அவனிடம் கொடுத்தேன். ஏனோ தானோப் புண் - நகை மட்டும் தந்துவிட்டுக் காரின் கண்ணாடியைக் கீழிறக்கிக் குடையை உள்ளே எடுத்தான் அவன். குடையை அவளிடம் கொடுத்தான்.



அம்மா ஆட்சியோ? இறங்கினாள். நான் கண்ட காட்சியோ... சற்றே சரிந்த குழலே அசைய...ஒல்லியாய் உயரமாய் அழகாய் இருந்தாள்.

மனைவியிடம் குட்டு வாங்கியது வேறு விஷயம்) பதினாறு வயதுப் பருவக் குமரி அழகாய் நடந்தால் ஆடிப் போன கிழவன் கூட ஓடிப் போய்ப் பார்ப்பானாம். ஒரு கிழவர்தான் சொன்னார். இரண்டாவது தடவையாக அந்தக் காரழகியை - இல்லை - பேரழகியைப் பார்த்தபோது அவளது கண்ணியம் மனசுக்குள் ஒரு மரியாதையைத் தந்தது.

அவள் ஒரு இந்துப் பெண்!

இந்தியப் பெண்!

குடையிலிருந்து ஒழுகிய நீரை உதறி உதறி ஒழுங்காய் மடித்து அழகாய்த் தந்தாள். "தெங்க்யூ வெரி மச்...பிரதர்..."என்றாள். அவளது இங்கிதமான இங்கிலீஷ் இனிமையாக இருந்தது. அவளாகவே சொன்னாள் - "நாங்கள் இந்தியர்!"

கட்லட், ரோல்ஸ், பணிஸ் பார்சலோடு - சற்றே தணிந்த மழையில் நனைந்தே...காரில் ஏறினாள். 'நாங்கள் இந்தியர்' என்று அவள் சொன்னது மீண்டும் மீண்டும் என் காதில் ஒலித்தது.

"நாங்கள் இந்தியர்..."

அவர்கள் இந்தியர்!

அது சரி. நாங்கள்...?

யோசிக்க வேண்டிய விஷயம்.

நாங்கள் சோனகர்.

நாங்கள் தமிழர்.

நாங்கள் சிங்களவர்....

நாங்கள் கிறிஸ்தவர்....

இதுதான் நாங்கள்.

அது சரி - இதிலே யார் இலங்கையர்? யோசிக்க வேண்டிய விஷயம். நான், நீ, நாம்...எல்லோருமே நான் - நீயாகத்தான் இருக்கிறோம். நான், நீயெல்லோருமே நாமாவதெப்போது?... அப்போதே நாம் இலங்கையர்! கார் சென்று விடுவதற்குள் கதைக்கு வந்து விடுகின்றேன். நான் இப்போது காருக்குள் இருந்த அவளது கணவனைப் பார்த்தேன்.

அந்த அகங்காரன் முகங் காணப் பிடிக்கவில்லை. மழைக்குள் மனைவியை இறங்க வைத்து இரசித்தானே...

மாய்ச்சலன்!

சிரித்தான். அதற்கும் ஆயிரத்தெட்டுத் தரம் யோசித்திருப்பான்.... ஏனோ தெரியவில்லை எனக்கு அவன் மீது ஓர் இனம்புரியாத வெறுப்பு வந்தது.

சகஜமாய்...சரளமாய்...சிநேகமாய்...சிரிக்காத மனிதர்களை எனக்கு அறவே பிடிக்காது.

அவன் யார் என்னோடு உறவு கொண்டாட...?

இருந்தாலும்...சில மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கவே பிடிக்காது. இவனும் அதே வகை. அவனைப் பார்க்கப் பார்க்கக் கோபம் கோபமாய் வந்தது. அவன் பணக்காரன்!

நான்...?

வெறும் சொப்பனக்காரன்!

கனவில் சிரித்துச் சிரித்தே என் காலம் கழிகிறது.

சற்றே பெய்த மழை தணிய....ஓட ஆயத்தமானேன். அவளது கணவன் மீண்டுமொரு தடவை என்னைப் பார்த்தான். சிரித்தான்.

வெறுமனே உதடசைத்தேன்.

அவனது கர்வம் எனக்குப் பிடிக்கவில்லை.

**-அமீர்அலி, கிண்ணியா.**

அவள் காரோட்ட ஆயத்தமாகிக் கையசைத்தாள்.

சிரித்தாள். சிரித்தேன்!

நானும் மெல்லப் படியிறங்கினேன். நோன்பு துறக்கும் நேரம் நெருங்கிவிட்டது.

அப்பொழுதுதான் எதேச்சையாக அதைக் கவனித்தேன்...அவன் - காரில் வந்த அந்த அழகியின் கணவன் காரின் கண்ணாடியைக் கீழிறக்கி ஏதையோ காட்டினான். நான் அப்படியே ஒரு கணம்...ஸ்தம்பித்து நின்றேன். அவன் காட்டிய பொருள்...அது - ஊன்றுகோல்!

ஊனத்தை மறைக்க அவன் பட்ட அந்த அவஸ்தை நிமிஷங்கள்....என் விழிகளிலிருந்து இன்னும் விலகவே இல்லை. அவரைத் தவறாக எடை போட்ட மனசைத் திட்டித் தீர்த்தேன்.

கொடூரமான கடற் கொந்தளிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் உடைமைகளை/உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். முரசு:- ஆசிரியர் குழு + ஊழியர்கள்

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## மதித்துநட! மதிப்பைப் பெறுவாய்!!

- மகிழ்ச்சியை விட மேலான போசாக்கு எதுவுமே இல்லை.

- மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதே மிகப் பெரிய தர்மமாகும்.

- எனது மனதை சுமைகளைச் சுமக்க விட்டேனானால், நான் பாரத்தை அனுபவித்து மிக விரைவில் களைப்படைந்துவிடுவேன்.

- மற்றவர்களுக்கு வேதனையை ஏற்படுத்தும் ஒருவரால் உண்மையாக மகிழ்ச்சியாக இருக்க முடியுமா?

- என்னை ஒத்தவர்களை நான் அவதூறு செய்யும்போதே மற்றவர்கள் என் மீது வைத்துள்ள மரியாதையை நான் இழக்கின்றேன்.

- உங்களை உயர்த்துவதற்கு முயற்சிக்கவும். உங்கள் தரத்தைக் குறைக்காதீர்கள். ஏனெனில் நீங்களே உங்களுக்கு நண்பனும் உங்களுக்கு எதிரியுமாவீர்கள்.

- தர்மத்திற்காகப் பணம் கொடுப்பது நல்லது. ஆனால் தூய, புண்ணிய ஆத்மாவாக இருப்பதே அதி மகத்துவமானது ஆகும்.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

---

"ஐயோ" என்று கத்தியபடியே தொலைக் காட்சியை அணைத்தாள் பிருந்தா.

மதுரன் அவளைச் சினத்துடன் திரும்பிப் பார்த்தான். "எதுக்கு அதை அணைக்கிறாய்? உனக்குப் பார்க்க முடியாமலிருந்தால் எழுந்து போ" என்றபடி தொலைக்காட்சித் திரையை மீண்டும் ஒளிரவிட்டான்.

## மக்களை வாட்டுகிறது வேதனை! அதிலும் சிலருக்கு ஒரு சாதனை!!



பிருந்தா அழுதுவிடுவாள் போலிருந்தாள். கண்களை மூடிக்கொண்டு, "அதையெல்லாம் பார்த்து இரசிக்கிறாயா, மிருகம்..."என்று திட்டினாள்.

மதுரன் இவளைத் திரும்பிப் பார்த்துவிட்டு தொலைக்காட்சியில் கண்களை நிலைக்க விட்டான். சடலங்களை இழுத்துக் குழிக்குள் ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக்கொண்டிருந்தார்கள். பெண்களும் முதியவர்களும் தலையிலடித்தபடி வீரிட்டுக் கதறிக்கொண்டி

### தருவது முழடில்யன்

ருந்தார்கள். சோகங் கப்பிய முகங்களுடன் ஆண்கள் மிகத் தளர்ந்திருந்தார்கள்.

"நாசூக்காக முகத்தைத் திருப்பிக் கொண்டு இதையெல்லாம் பார்க்காமலிருந்து விட்டால் நாங்கள் நிம்மதியாய் இருந்து விடலாமா? அந்த இடத்தில் அகப்பட்டவர்களால் இப்படிப் பார்க்காமல் ஓடி ஒளிந்து மனதை அதிர்ச்சியிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியுமா? முகத்தை மூடி இவற்றிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பார்க்காதே. உதவ நேரில் போக முடியாவிட்டாலும், 'மனிதம் மனிதம்' என்று அன்பில் இதயம் வலித்துத் துடிப்பதையாவது விடு....மனிதச் சாவுகளில் மகிழ்ந்து இதயத்தைச் சீழ் பிடிக்க வைத்திருந்தவர்கள் நாம்......."என்று எரிச்சலுடன் சொல்லி நிறுத்தினான் மதுரன்.

பிருந்தா பயந்து பயந்து கண்களைத் திறந்தாள். "ஐயோ! தாங்க முடியவில்லையே!" என்று மறுபடி மூடிக்கொண்டாள். "தப்பிக்கொள்ள நினைக்கவில்லை..... எனக்குப் பார்க்க முடியவில்லை மதுரா! அங்கேயே நானும் இருந்திருந்தால் மனதைக் கல்லாக்கிக் கொண்டு மீட்பு உதவிகளில் என் சோகத்தை ஆற்றிக் கொண்டிருப்பேன்..... இங்கிருந்து அதையெல்லாம் பார்க்க..." மேலே பேச முடியாமல் விக்கி நிறுத்தினாள் பிருந்தா.

மதுரன் ஒரு நிமிடம் அவள் மீது பதித்த பார்வையை மீண்டும் தொலைக்காட்சித் திரைக்குத் திருப்பினான்.

சிதைந்து கிடந்த நீள்பரப்பைக் காட்டினார்கள். மக்கள் குடிநீருக்கும் உடுபுடைவைகளுக்குமாக, நிவாரணம் கொண்டு சென்ற வாகனங்களை மொய்த்தார்கள்.

ஐந்து நிமிடங்களுக்கு ஒரு தடவை தலைவர்கள் தங்கள் முகத்தை மக்களுக்குக் காண்பிக்க வகை செய்த ஊடகத்தின் புகழ் பாடிக்கொண்டிருந்தார்கள்.

"வழக்கம் போல விளம்பரப்படுத்தாமல் உதவி செய்யும் நபர்களை மக்கள் நினைத்தே பார்க்க முடியாதபடி, விளம்பரப் படுத்த முடிந்தவர்கள் மட்டுமே காருண்ய சீலர்களாக மக்களைத் தங்கள் பிடிக்குள் வசப்படுத்துகிறார்கள்" என்றான் மதுரன்.

"எப்படியாவது உதவி செய்கிறார்கள் தானே, செய்யட்டும்" என்றாள் பிருந்தா.

மற்றவர்களின் பங்களிப்புகள் பற்றி மூச்சுவிடாமல் நிராகரித்தபடி, எரிச்சலூட்டும் விதமாக தங்களைத் தாங்களே புகழ்பாடிக் கூச்சலிட்டுக்கொண்டிருப்பது, கொடையின் நோக்கத்தையே சந்தேகிக்க வைக்கிறது...... நாம் மட்டுமே மக்களைக் காப்பாற்ற இருப்பவர்கள் என்று காண்பிக்க முனைவது கூட ஒரு பாசிஸ அம்சம்தான்......

பிருந்தா தலையை ஆட்டினாள். "நாடு முழு வதுமே அழிவைச் சந்தித்திருக்கிறது. நம்மவர்கள்தான் இன ரீதியான கொச்சைப் பேச்சுக்களை ஊடகங்களில் உளறி அருவருப்பூட்டுகிறார்கள். நிவாரணப் பகிர்வில் அநீதி நடைபெற்றால் பார்த்துக் கண்டிக்க இன்று உலகம் முழுவதுமே விழிப்புடனிருக்கிறது. ஆனால், இந்தத் தேசிய துக்கத்தில் நம்மவர்கள் - குறிப்பாய் ஊடகங்கள் போடும் ஆர்ப்பாட்டம் மிக ஆபாசமாயிருக்கிறது....

"ஆமாம், நாகரிகமாகப் பேசத் தெரியாதவர்களாகவே நாம் வளர்ந்து வருகிறோம். எங்கள் தலைவர்கள் கூட மிகக் குறுகிய பார்வையையும் சிறுபிள்ளைத்தனத்தையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஊடகங்களுக்கு நற்சான்றுப் பத்திரம் வழங்கி, தங்களை விளம்பரப்படுத்திக்கொள்ள வேண்டிய அவல ஆவலாதி அவர்களுக்கு....."

"அதற்கப்பால், ஊடகங்கள் முன்கையெடுத்துச் செய்திருக்கும் உடனடி உதவிகளைக் குறைத்து மதிப்பிடுகிறாயா நீ?"

"இல்லை. அவர்களுக்குத்தான் எதையும் மக்களுக்குக் காண்பித்தபடி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதனால் நன்கொடை வழங்கும் மக்கள் நம்பிக்கையோடு தங்கள் உதவிகளைச் செய்யக்கூடிய மார்க்கம் அதுதான். தங்கள் பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேர்வதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். ஆனால், மக்கள் குறை தீர, தாங்களும் ஒரு கருவியாகச் செயற்படும் எண்ணத்துக்கு மேலாக சுய விளம்பரப் படுத்தலும் குழுவாதப் பேச்சுக்களும் அளவு மீறிப் போவதுதான் ஆபாசமாயிருக்கிறது."

தொலைக்காட்சியிலிருந்து விழிகளை அகற்றாமல் பிருந்தா சொன்னாள்"

இப் பிறவியில் செய்யும் கொடையும் உதவிகளும், தனது அடுத்த பிறவியில் புண்ணியங்களாகக் கணக்கிலெடுக்கப்படும் என்று கருதிச் செய்வது கூட பண்டமாற்று வியாபாரமே தவிர, மனித நேயச் செயல் ஆகாது என்று சொல்லும் சங்கப் பாடல் ஒன்று இருக்கிறதல்லவா!"

"ஆமாம்! முடமோசியார் பாடல். தன் அடுத்த பிறப்புக்கு உதவும் என்று கருதிச் செய்யாமல், மனிதனுடைய இயல்பான குணத்தின் காரணமாக அன்பு மிக்கூர உதவுவது தன் மன்னனுடைய வள்ளல் தன்மை என்கிறார் அவர்."

***இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்***
***எனும் அறவிலை வணிகன்***
***ஆஅய் அல்லன்; பிறரும் சான்றோர்***
***சென்ற நெறி என, ஆங்குப் பட்டன்று***
***அவன் கைவண்மையே.***

*(புறம் :134)*

---

**சுனாமி?**

-ஆர்.கோபிநாத், கம்பளை.

இந்தப் புதிய சொல்லைக் கற்றுக்கொள்ள நாம் கொடுத்த விலை முப்பதினாயிரம் உயிர்கள்!

**ஆபாசம் எது?**

-செ.சுமதி, கந்தப்பளை.

பல உண்டு. தானம் கொடுப்பதைத் தம்பட்டம் அடித்துக் கொண்டே இருப்பதும் அதில் அடங்கும் சாமீ!

**எதிர்காலத்திலாவது தமிழ்ப் படங்கள் எல்லாம் தமிழ்பெயர்களுடன் வருமா?**


-சூ.யோ.மரியதாசன், அளவெட்டி.

எதிர்ப்பு சில மாறுதல்களை உண்டாக்கித் தான் இருக்கிறது. சேரனின் டூரிங்டாக்கீஸ் 'தவமாய்த் தவமிருந்து' ஆகியிருக்கிறது. கமலின் படத்தில் கதைப்படி, நாயகன் கூண்டுக்குள் மோட்டார் சைக்கிள் ஓட்டிச் சாகசம் செய்பவன். அவனை மக்கள் 'மும்பை எக்ஸ்பிரஸ்' என்று பட்டப் பெயரிட்டு அழைக்கின்றனர். அதை எப்படி மாற்றுவது? இதனால் ஏற்பட்ட விரக்தியிலோ என்னவோ பார்த்திபன் தன் புதிய படங்களுக்கு வைத்திருக்கும் பெயர்கள் 'ரவுடி' யும் 'அட' வும். கிண்டல்தான் வித்தியாச விண்ணருக்கு!

**பாதிக்கப்பட்டவர்களுக்கு உங்கள் ஆறுதல் என்ன?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

'உன் கரங்கள் தேவைப்படுகையில்
உன் ஆறுதல் யாருக்கு வேண்டும்?
-இதையே எனக்கும் சொல்லுங்கள்.'



கமல்

**நமக்கு மட்டுமே வந்து குவிந்து கொண்டிருக்கும் இந்தத் துக்கத்திற்கு என்ன காரணம்?**

-மனே கோபாலன், ஹப்புத்தளை.

இயற்கை தரும் துக்கத்தை விடுங்கள். இந்தப் பெரும் அவலத்திற்குப் பின்பும் நாமே நமக்கு உண்டாக்கிக் கொள்ளும் துக்கத்திலிருந்து விடுபட எண்ணமுண்டாகாமலிருப்பதுதான் இழிவு! ஆசைதான் துக்கத்திற்குக் காரணம் என்று புத்தர் சொன்னார். நாம் இன்றைய நம் அனுபவத்திலிருந்து இந்த இரண்டைப் பற்றியும் யோசிக்கலாம் :

1. பிறருடைய துக்கத்தை, மற்றவர்களுடைய வேதனைக் கதறலை நம் கருத்திற்கே எடுக்காமல், எல்லாவற்றுக்கும் பதிலாக நம்முடைய துன்பங்களையே முன்னிலைப் படுத்துதல்.

2. நம்முடைய எந்தத் தன்மை இப்படித் துக்கத்திற்கு வழிவகுக்கிறது என்று யோசித்துப் பாராமல், நமக்குத் துக்கம் தரும் நபர்களாக மற்ற எல்லோரையும் கண்டு கொள்ளுதல்.

**நீங்கள் கண்களை மூடித் தியானம் செய்வதுண்டா?**

-பெ.கோகிலன், மேபீல்ட்.

உண்டு. கண்களைத் திறந்தால் எதிரிலிருப்பவர் தொடர்ந்து பேச ஆரம்பித்துவிடுவார் என்றிருக்கும் சந்தர்ப்பங்களில்!

**இத்தனை நாடுகளின் படைகளும் வந்து குவிந்திருக்கின்றனவே, என்ன நடக்கப் போகிறது?**

-எம்.எச்.இர்பான், பொகவந்தலாவ.

நாளை நடப்பதை யாரறிவார்? என்று டிசம்பர் 26க்கு முன் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் தீர்க்கதரிசிகளாகப் போகிறார்கள். அதாவது, நம் பிரச்சினையின் போக்கே மாறப் போகிறது, வேறொரு பரிமாணத்துக்கு!

**நறுக்கென்று ஒருவார்த்தை சொல்ல முடியுமா?**

-கே.மேகசுதன், திருக்கோவில் - 02.

Thenne.com இல் பார்த்தது இது : மேற்கு நாடுகளில் வாழ்ந்துகொண்டு - தம் பிள்ளைகளை பிறமொழி பிற கலாசாரத்தில் வாழ விட்டுக்கொண்டு - ஐரோப்பிய கனடிய பிரஜா உரிமைகள் பெற்று மில்லியன் பெறுமதியான வீடு சொத்துக்களை வாங்கிக் கொண்டு - இனவாத நஞ்சை தமிழ்மக்கள் மனங்களில் புகுத்திக் கொண்டிருக்கும் தமிழ்மக்கள் மனங்களில் புகுத்திக் கொண்டிருக்கும் கயவர்களிலும் பார்க்கவா ஏழைச் சிங்களவர்கள் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டார்கள்?

**உண்மை எப்போதும் வெல்லுமா?**

-செ.கலா, முருங்கன்பிட்டி.

இறுதியில் நிச்சயம் உண்மைதான் வெல்லும் என்று நம்ப வேண்டும். அப்போதுதான் அது தரும் தொடர்ச்சியான தோல்விகளை கடைசிவரை தாங்கிக் கொண்டிருக்க முடியும்.

ஒரு கதை :

கடலில் மூழ்கித் தத்தளித்துக்கொண்டிருந்தான் ஒருவன். வழியே சென்ற ஒருவர் அவனைக் காப்பாற்றிக் கரையில் சேர்த்தார். மயக்கம் தெளிந்தவுடன் அவன், என்னைக் காப்பாற்றியது நீங்கள்தானே? என்று கேட்டான். இவரும் ஆமாம் என்று உண்மையைச் சொன்னார்.

வேறு யாரும் இங்கு வந்தார்களா?

அவர், இல்லை என்று மீண்டும் உண்மையைச் சொன்னார்.

பொக்கெற்றுக்குள் வைத்திருந்த பேர்ஸ் பத்திரமாக இருக்கிறது. ஆனால் அதற்குள்ளிருந்த ரூபா பத்தாயிரத்தைக் காணவில்லையே என்றான் அவன்.

தெரியவில்லை. உன்னைக் காப்பாற்றியது நான் இல்லை என்று சொல்லிவிட்டு நடந்தார் காப்பாற்றியவர்.

**சிந்தியா நீங்கள் பதில் சொல்ல முடியாத கேள்வி எது?**

-மணிவேல் ருத்ரா, மாத்தளை.

### சிந்தியா பதில்கள்

ஏராளம் இருக்கிறது. அதை விடுங்கள். யாராலும் விடை சொல்ல முடியாத கேள்விகளில் ஒன்று என்று தமிழவன் தன் கட்டுரை ஒன்றில் இந்தக் கவிதையைக் குறிப்பிடுகிறார். ஞானக்கூத்தனின் கவிதை.

"ஒருவனைக் கனவில் கண்டேன்
உதடுகள் பற்கள் கண்கள்
தலைமயிர் நகங்கள் கை கால்
அனைத்துமே மனிதன் போல
இருந்திடும் அவனைக் கண்டேன்
கணவிலும் மனிதன் போலத்
தோன்றினால் மனிதன் தானா?

**நாடு உனக்கு என்ன செய்தது என்று கேளாதே. நாட்டுக்கு நீ என்ன செய்தாய் என்று கேள் என்கிறார்கள். நாட்டை விடுங்கள். இந்த உலகம் எவ்வளவோ தந்திருக்கிறதே.....அதற்கு நீங்கள் கொடுக்கப்போவது எதை?**

-ஆர்.இராமு, வவுனியா.

இன்னொரு 'நான்' இந்த உலகுக்கு தேவையில்லாத பாரம் என்பதை நானறிவேன். என்னால் முடிந்ததெல்லாம் என் பிள்ளை ஒழுங்காக வளர உதவி செய்வதுதான்.

அவளை - வன்முறையில் விருப்பற்றவளாக, வெறுத்து அதை விலக்குபவளாக, தன் வேதனைக்கு முன்னால் பிறர் வேதனையைத் தானுணர்பவளாக, தனது அனைத்து இயலுமைகளோடும் கொலைகளைக் கண்டிப்பவளாக, தனக்கு நன்மை பயக்கும் கொலைகளுக்கு மௌனம் சாதித்து இரட்டை வேடம் போடாதவளாக பிற மனிதர் அனைவரையும் தனக்குச் சமமாக எண்ணுபவளாக அவர்களது உயிர் வாழும் உரிமையை மதிப்பவர்களாக வளர்த்துவிட என்னால் முடிந்தவரை முயற்சி செய்வேன்.

இதைத் தவிர இந்த உலகுக்கு என்னால் வேறென்ன செய்ய முடியும்!

**கேள்விக்குப் பதில் தெரியாவிட்டால் குட்டிக்கதையையோ, நகைச்சுவைத் துணுக்கையோ சொல்லிச் சமாளிக்கலாமா?**

-ஏ.போல், கொழும்பு - 13.

ஒரு சமயப் பெரியவர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். மனிதர்கள் நல்லதையே நினைக்க வேண்டும். நல்லதையே செய்ய வேண்டும் என்பதை விளக்கிப் பேசினார். வழக்கம்போல கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் ஆழ்ந்து தூங்க ஆரம்பித்தனர். பெரியவருக்கு மிகவும் சங்கடமாகிப் போய்விட்டது. எனவே தன் தொடர் பேச்சுக்குச் சம்பந்தமில்லாமல் இடை நடுவில் ஒரு கதையைக் கூற ஆரம்பித்தார்.

ஒருமுறை எனக்கு இப்படித்தான் நடந்தது. நான் காட்டு வழியே சென்றுகொண்டிருந்தேன். ஆளரவமே கிடையாது. தனிமையைத் தாங்கமுடியாமல் பயத்துடன் நடந்துகொண்டிருந்தேன். ஒரு கழுதையைக் கண்டேன். விசித்திரமான அங்கங்களுடனிருந்தது அந்தக் கழுதை. திடீரென்று என்னுடன் பேச ஆரம்பித்தது.

இப்போது மெல்ல மெல்ல எல்லோரும் விழித்து விட்டனர். அவர் தனது கதையை அப்படியே விட்டுவிட்டு தனது சொற்பொழிவைத் தொடர ஆரம்பித்துவிட்டார்.

உடனே ஒருவன் எழுந்தான். அதன் பின் என்ன நடந்தது? அந்தக் கழுதை உங்களிடம் என்ன பேசியது? என்றான் ஆர்வமாய். அதற்கு அந்தப் பெரியவர், நான் என்ன கூறுகிறேன் என்பதில் உங்களில் யாருக்கும் ஆர்வம் இல்லை. ஆனால் கழுதை என்ன கூறியது என்பதை அறிவதற்கு மட்டும் எல்லோருமே ஆர்வமாய் இருக்கிறீர்கள். விழித்தும் விட்டீர்கள் என்றார்.

ஆங்.....உங்கள் கேள்விக்குப் பதிலா.....அது வந்து....அதாவது வந்து......


கொடூரமான கடற் கொந்தளிப்பில் இறந்தவர்களுக்கு அஞ்சலியையும் உடைமைகளை/உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். முரசு - ஆசிரியர் குழு + ஊழியர்கள்




மேற்படி போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெறுவதற்கு 416 ஓட்டங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை.

நரேந்திர ஹிர்வாணி எனும் சுழற்பந்து வீச்சாளர் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பிரபல வீரர்கள் அனைவருக்கும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார்.

இரண்டாவது இன்னிங்ஸின்போது மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த கஸ்லோவிக்கு மாத்திரமே 67 ஓட்டங்களைப் பெற முடிந்தது. ஹிர்வாணி இரண்டாவது


அர்ஜுன ரணத்துங்கா

இன்னிங்ஸின்போதும் 75 ஓட்டங்களை கொடுத்து 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றி கொண்டார்.

இதன் மூலம் இவர் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றிலேயே மிகச் சிறந்த பந்துவீச்சினை முன்னிறுத்திய ஒரு வீராகின்றறார். இதன்படி இரண்டு இன்னிங்ஸிலுமாக நரேந்திர ஹிர்வாணி 136 ஓட்டங்களைக் கொடுத்து 16 விக்கெட்டுகளைக் கைப்பற்றிக்கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்திய அணி சார்பில் விக்கெட் காப்பாளராக கடமை யாற்றிய கிரான் மெரே இரண்டாவது இன்னிங்ஸின்போது எதிரணி ஆட்டக்காரர்கள் ஐவரை 'ஸ்டம்' மூலம் ஆட்டமிழக்கச் செய்தார். முதலாவது இன்னிங்ஸின்போது ஒருவரை 'ஸ்டம்' செய்தன் மூலம் ஆட்டமிழக்கச் செய்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

நரேந்திர ஹிர்வாணியின் திறமை காரணமாக இப் போட்டியில் இந்திய அணி 255 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதன்படி பார்க்கும்போது இந்திய அணி மேற்கிந்திய அணியைத் தொடர்ந்து தோல்வியுறச் செய்து வெற்றி பெற்ற 6ஆவது போட்டி இதுவாகும்.

நரேந்திர ஹிர்வாணி இந்திய அணி சார்பில் 17 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலேயே கலந்து கொண்டுள்ளார். இதன்போது இவர் 66 விக்கெட்டுகள் (சராசரி 30.10) பெற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கது.

18 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள அவர், 23 விக்கெட்டுக்களை (சராசரி 31.26) பெற்றுக்கொண்டுள்ளார்.

இனி, இலங்கை அணி வெளிநாடொன்றில் விளையாடிய டெஸ்ட் போட்டிகளில் வெற்றியைப் பெற்றுக் கொண்ட முதலாவது போட்டி குறித்து பார்ப்போம்.

இது முதலாவது போட்டியில் கலந்து கொண்டு 23 வருடங்கள் கழிந்த நிலையில் கிடைத்த வெற்றியாகும் என்பது குறிப்பிடத் தக்கதாகும். அதாவது இலங்கையில் வைத்து டெஸ்ட் போட்டி ஒன்றில் வெற்றி பெற்று சுமார் 10 வருடங்கள் கழிந்த நிலையில் பெற்றுக் கொண்ட வெற்றியாகும். அதே நேரம் இப் போட்டியானது இலங்கை அணி கலந்து கொண்ட 59ஆவது டெஸ்ட் போட்டியுமாகும்.

இலங்கை அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையில் நியூசிலாந்து 'நேபியர்' மைதானத்தில் வைத்து இப் போட்டி 1995ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11, 12, 13, 14, 15ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இப் போட்டியின் போது இலங்கை அணிக்கு அர்ஜுன ரணத்துங்கவும், நியூசிலாந்து அணிக்கு கென் ரதர் பெட்டும் தலைமை தாங்கினர்.

இப் போட்டியில் இலங்கை அணி 241 ஓட்டங்களால் வெற்றி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

தலைவர் ரணதுங்க 55 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். சமிந்த வாஸ் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும், துலிப் சமரவீர ஆட்டமிழக்காமல் (ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்) 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

முதலாவது இன்னிங்ஸின் போது நியூசிலாந்து அணியை 109 ஓட்டங்களுக்கு வரையறுத்துக்கொள்ள இலங்கை வீரர்களால் இயலுமாகியது. இதற்கு இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சாளர்களே காரணம் எனக் கூறலாம்.




சமிந்த வாஸ் 47 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளையும், பிரமோதய விக்கிரமசிங்ஹ 33 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் ரவீந்திர புஷ்பகுமார 23 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத் தக்கது.

இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸின்பொது நியூசிலாந்து வீரர்களுக்கு சளைக்காமல் முகங்கொடுத்து 352 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

-மைந்தன்.

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

## ஆதிக்கம் 6 : பிறந்த கிழமை ஞாயிறு

ஞாயிறு என்பது சூரியனைக் குறிக்கிறது. எண் ஆறு என்பது ஆண்டவன் கட்டகளைகளை அடக்கியுள்ளது. இவ்வாறு சிறப்புக்குரிய ஆதிக்க எண் 6ஐயும் பிரகாசம் பொருந்திய ஞாயிற்றுக்கிழமையினையும் உடைய நீங்கள் சுலபமாக நல்ல முறையில் சம்பாதிக்கக் கூடியவர். உடலை வருத்தித்தான் வருமானம் தேட வேண்டும் என்ற அவசியமே உங்களுக்குக் கிடையாது. இலகுவான தொழில் செய்து நிறைந்த வருமானத்தை அடையக்கூடிய திறன் உள்ளவர் நீங்கள்.

ஒரு மனிதன் எதையும் இழக்கலாம்; ஆனால் மானம், மரியாதை போன்றவற்றை இழக்கக் கூடாது என்பதில் அதிக அக்கறை உடையவராக நீங்கள் காணப்படுவதனால் நேர்மையும் ஒழுக்கமும் உங்களுடைய இரண்டு பக்கங்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் நேர்மையை விட்டு விலகமாட்டீர்கள். அதே நேரம் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பதற்கேற்ப வாழ்க்கையில் ஒழுக்கத்தின் பாதையில் செல்வீர்கள்.

துன்பப்படுகிறவர்களுக்கு எந்த வகையிலாவது உதவி செய்யக்கூடிய மனப்பாங்கு உள்ளவர் நீங்கள். பிறரின் கஷ்டநிலையைத் உங்களுடைய கஷ்டநிலை என்று கருதுவீர்கள். செய்யும் தொழிலே தெய்வம்தான். செய்கின்ற தொழில் எதுவாக இருந்தாலும் அந்தத் தொழிலை மதித்து அக்கறையுடன் உழைத்தால்தான் அந்தத் தொழில் மூலம் முன்னேற்றம் அடையலாம். நீங்கள் இதற்கு விதிவிலக்கானவரல்லர். எந்தத் தொழிலாக இருந்தாலும் தொழில் மீது மிகுந்த விருப்பங்கொண்டு ஆர்வத்துடன் உழைப்பீர்கள். இதனால் வாழ்க்கையில் படிப்படியாக உயர்ந்து செல்வீர்கள். இதன் காரணமாக ஒரு பெரிய நிறுவனத்தைப் பொறுப்பேற்று நடத்தக்கூடிய உயர் அதிகாரியாகக் கடமை புரிவீர்கள்.

ஒரு மனிதன் கலைஞனாக வாழ வேண்டும். அல்லது அந்தக் கலையினை இரசிப்பவனாக இருக்க வேண்டும். இந்த இரண்டு நிலைக்குள்ளும் இல்லாதவன் சுவாசிக்கும் மிருகம்! ஆனால் நீங்கள் கலைகள் மீது அதிக விருப்பம் கொண்டவர். கலைதான் மனிதனுக்கு ஆனந்தத்தையும் நிம்மதியையும் கொடுக்கக்கூடியது என்பதில் எவ்வித மாறுபாடான கருத்தும் இல்லாதவர் நீங்கள். இதன் காரணமாக இயல், இசை, நாடகம், சினிமா, பாடல்கள், நாட்டியம் போன்ற கலைகளில் ஆர்வம் உடையவராகத் திகழ்வீர்கள். இந்தக் கலைகளுக்காக எவ்வளவு பணமாக இருந்தாலும் செலவு செய்வீர்கள்.

உங்களுடைய தொழிலைப் பொறுத்தவரையில் ஒரு நிலையில் இருக்காது. மாற்றம் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். 26 வயதிற்குப் பின்னர்தான் உங்களின் தொழிலில் சிறிது முன்னேற்றம் நிகழும். 26 வயது வரை நீங்கள் சிரமப்பட வேண்டிய நிலையிருக்கும்.

18 வயது தொடக்கம் நீங்கள் தொழிலில் ஈடுபட்டாலும் 21, 24, 27, 30 வயது வரை சிரமப்பட்டுத்தான் முன்னேற வேண்டியிருக்கும். 31 வயது தொடக்கம் 33, 36, 39, 42 வயது வரை வருமானம் அதிகளவில் உங்களைச் சேரும். இந்தக் காலங்களில் தாராளமாக உங்களுக்கு வருமானம் கிடைத்தபோதிலும் கண்ட கண்ட மாதிரி வீண் செலவுகளில் ஈடுபடுவீர்கள். 43ஆவது வயது தொடக்கம் 46, 49, 52, 53 வயதுகளில் உங்களுக்கு வருமானம் இன்னும் உயர்வாகக் கிடைக்கும். இந்தக் காலங்களில் உங்கள் செலவுகள் அளவோடு இருக்கும். வீண் செலவுகள் செய்யமாட்டீர்கள். இதனால் பணம் மிச்சப்படும். 54ஆவது வயதில் பலசரக்கு வியாபாரம் செய்வீர்கள். 68 வயது வரை உங்களுடைய வருமானத்திற்கு எவ்வித குறைபாடும் இருக்காது. ஆயுள் வரை சந்தோசமாக வாழ்வீர்கள்.

9 வயதிலும் 31 வயதிலும் உங்களுக்குக் கண்டம் ஏற்பட்டு நீங்கும். உயிருக்கு எந்தத் தீங்கும் நேராது. உங்களுடைய 27 வயதிற்குப் பின்னர் தலைச்சுற்று, வாந்தி, நெஞ்செரிவு, உடல் எரிச்சல், கண் மந்தம் போன்ற கோளாறுகள் ஏற்படும். இதற்குக் காரணம் நீங்கள் பித்தம் கூடிய உடல் நிலையைக் கொண்டவர். 40 வயது வரை இந்தத் தொந்தரவுகள் அடிக்கடி ஏற்படும்.

பித்தத்தை நீக்கும் உணவுகளை நீங்கள் அதிகம் சாப்பிட வேண்டும். உங்கள் ஆதிக்க எண் 6ஆக இருந்தாலும் உங்கள் வாழ்க்கையில் அதிக நல்ல மாற்றங்களை ஏற்படுத்தி அதிர்ஷ்டத்தை உங்களுக்குத் தருகின்ற எண் 5. இதனால் மாதத்தில் வருகின்ற 5, 14, 23 ஆகிய திகதிகளில் நல்ல காரியங்கள் செய்யத் தொடங்குங்கள். இந்தத் திகதிகள் ஞாயிற்றுக்கிழமையில் வருமாக இருந்தால் உங்களின் வெற்றியும் சிறப்பும் பல மடங்காகும் என்பதைக் கவனத்தில் வைத்திருங்கள்.

'ஆடை பாதி ஆள் பாதி' என்பதற்கேற்ப உங்களுக்கு அதிர்ஷ்டத்தைத் தரும் நிறம் வெள்ளை. ஆதலால் வெண்ணிற ஆடைகளையே எப்பொழுதும் அணியுங்கள். முத்துப் பதித்த வெள்ளி மோதிரம் அணியுங்கள். அது உங்களுக்கு அதிர்ஷ்டத்தை உண்டுபண்ணும்.


நீங்கள் குடியிருக்கும் இல்லத்தின் எண்ணையும் 5 வரக்கூடியதாக வைத்துக்கொள்ளுங்கள். அதாவது 5, 14, 23, 32, 41, 50, 59, 68, 77 போன்ற 5 வரக்கூடிய எண். ஆகவே ஆதிக்க எண் 6ஐயும் ஞாயிற்றுக்கிழமையினையும் உடைய நீங்கள் வாழ்வில் மேன்மையுற்றுத் திகழ என் ஆசீர்வாதங்கள்.

ஆறு எண் ஒழுக்கம் உடையது. அது நேர்மைக்கும் மேன்மைக்கும் ஞாயிறோடு சேர்ந்து உதவும். நூறு ஆண்டுகள் வாழ்வும் செல்வமும் தரும்.

**அடுத்து ஆதிக்கம் 7 திங்கட்கிழமை**
**பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்!**

## நியூசிலாந்து கிரிக்கெட் சபை இந்தியாவுக்கும் அழைப்பு

கறுப்புத் தொப்பிகளை அணிந்த நியூசிலாந்து அணி இலங்கையுடன் போட்டித் தொடர் ஒன்றை நடதத் தீர்மானித்திருந்தது. ஆயினும் சுனாமி



அனர்த்தம் காரணமாக இலங்கை அணி மீண்டும் இலங்கைக்கு திரும்பிச் சென்றது தெரிந்ததே!

இப்போது தமது கோடை கால ஆட்டத்தை இடை நிறுத்த முடியாது என்று தீர்மானித்த நியூசிலாந்து கிரிக்கெட் அணி பல நாடுகளின் கிரிக்கெட் சபைகளுக்கு அழைப்பு விடுத்து வருகின்றது. அவ்வகையில் இந்தியாவும் அடங்கும் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இது குறித்து கிரிக்கெட் சபையின் முகாமையாளர் கருத்து தெரிவிக்கையில், "இவ்வாட்டத்தைத் தொடரப் பல நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளேன் ஆனால், அதற்காக சிறந்த பதில் எதுவும் கிடைக்கவில்லை. ஆயினும் ஏதாவது ஒரு நாடு எமது அழைப்பை ஏற்கும் பட்சத்தில் இப் போட்டித் தொடரானது ஜனவரி மாத இறுதியில் நடை பெறும். இப் போட்டியானது சுனாமி அனர்த்தம் காரணமாக அகதிகளாக்கப்பட்ட மக்களின் நிவாரணத்துக்காகவே விளையாடப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

## ஜெயசூரியவின் தாயார் கவலைக்கிடம்

இலங்கை அணியின் முன்னாள் தலைவரான சனத் ஜெயசூரியாவின் தயார் சுனாமி அனர்த்தம் காரணமாகக் காயமடைந்துள்ளார்.

இவரின் வீடு மாத்தறையில் உள்ளது அதாவது கடலிலிருந்து 130 கி.மீ தூரத்தில் உள்ளது. சம்பவதினத்தன்று அவரின் தாயார் சந்தைக்குச் சென்றுள்ளார் அவ்வேளை



ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் அவரின் தாயார் கடுமையாக காயமுற்று மாத்தறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

இது பற்றி அவர் கருத்து தெரிவிக்கையில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் எனது தாயார் மரக்கறி வாங்குவதற்காக கடலுக்கு அருகாமையில் உள்ள சந்தைக்குச் செல்வார். இம்முறையும் அவ்வாறு செல்கையிலேயே சுனாமியினால் காயமுற்றிருக்கிறார் என்று கவலை தோய்ந்த முகத்துடன் தெரிவித்தார்.

இவ்வேளை சுனாமி அவலத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 3 மாதத்திற்குத் தேவையான உணவினை வழங்குவதற்காக இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான முரளிதரனும் மற்றும் ஏனையவர்களும் மட்டக்களப்புக்கு விரைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

## ஜெமி ரெக்னப்பின் அதிர்ச்சி முடிவு

இங்கிலாந்து தேசிய கால் பந்து அணியில் அங்கம் வகித்த ஜெமி ரெக்னப் 6 மாத ஒப்பந்தம் ஒன்றை சௌத்அம்டன் என்ற உள்ளூர் அணியுடன் செய்துகொண்டுள்ளார். இவர் அண்மைக்காலமா கடும் உடல் உபாதைக்கு உட்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.




இந்த உள்ளூர் அணியில் அவர் 2003ஆம் ஆண்டு தலைவராகக் கடமையாற்றியவர் என்பது மற்றொரு தகவலாகும்.

அவர் தேசிய அணியில் இடம்பெறாமல் விளையாடப்பட்ட பெருவாரியான போட்டிகளில் இங்கிலாந்து தோல்வியைத் தழுவியது என்பது குறிப்பிடத் தக்கது.

# உலகை வியக்க வைத்தவர்கள்

## ஜேம்ஸ் வாட் (1736 - 1819)

தொழிற்புரட்சி முற்றிலும் வேறானதாக அமைந்திருக்கும். அதற்கு முன்பு விசை உற்பத்திக்கு காற்றாலைகளும் நீர்ச் சக்கரங்களும் ஓரளவுக்குப் பயன்பட்டபோதிலும், மனித உழைப்பு மூலமாகவே பெரும்பாலான விசை உற்பத்தி செயற்பட்டு வந்தது. இதனால், தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. நீராவி எஞ்சின் கண்டுபிடிக்கப்பட்டதும் இந்தக் கட்டுப்பாடு நீங்கிவிட்டது.



நீராவி எஞ்சினின் துணையால், இப்போது ஏராளமான அளவில் விசை உற்பத்தி செய்ய முடிந்தது. அதைத் தொடர்ந்து விசை உற்பத்தியும் பெருமளவில் பெருகிறது. 1973ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட எண்ணெய்த் தடை, விசைப் பற்றாக்கு றையினால் தொழில் துறை எந்த அள வுக்குப் பாதிக்கப் படும் என்பதை நமக்கு உணர்த்தியது.

இந்த அனுபவம் தொழிற்புரட்சியில் ஜேம்ஸ் வாட்டின் கண்டு பிடிப்புகள் எத்து ணை முக்கியத துவம் பெற்ற தாக விளங்கி யிருக்கும் என்பதை ஊகித்தறிய உதவுகிறது.

தொழிற்சாலைகளுக்கான எரியாற்றல் ஆதாரமாகப் பயன்பட்டது மட்டுமின்றி, நீராவி எஞ்சின் வேறு பல முக்கியமான பயன்பாடுகளையும் கொண்டிருந்தது. மார்குஸ் டி - ஜூ.ஃப்ராய் டி - அப்பான்ஸ் என்பவர் 1783இல் ஒரு படகினை இயக்குவதற்கு நீராவி எஞ்சினைப் பயன்படுத்துவதில் வெற்றி கண்டார். ரிச்சர்டு டிரிவிதிக் என்பவர் 1804ஆம் ஆண்டில் முதலாவது நீராவி ரயில் எஞ்சினை உருவாக்கினார். இந்தக் கண்டுபிடிப்புகள் தொடக்கத்தில் வாணிக முறையில் வெற்றி பெறவில்லை. எனினும், 20 அல்லது 36 ஆண்டுகளுக்குள்ளேயே, நீராவிப் படகும் இருப்பூர்தியும் நிலவழி மற்றும் நீர்வழிப் போக்குவரத்துக்களில் பெரும் புரட்சியை ஏற்படுத்தின.

வரலாற்றில் அமெரிக்கப் புரட்சியும் ஃபிரெஞ்சுப் புரட்சியும் அதே சமயத்தில் தொழிற்புரட்சியும் தோன்றியது. அந்தக் காலத்தில் தொழிற்புரட்சி முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தோன்றவில்லையெனினும், அந்த முக்கியமான அரசியல் புரட்சிகளைவிட மனிதரின் அன்றாட வாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது இந்தத் தொழிற்புரட்சிதான் என்று இன்று நாம் உணர்கிறோம். எனவேதான், வரலாற்றின் மிகுந்த செல்வாக்கு வாய்ந்த பெரியார்களில் ஒருவராக ஜேம்ஸ் வாட் இடம்பெறுகிறார்.

அடுத்த வாரம் அன்டனி வால்யூவன்ஹூக் உடன் சந்திப்போம்.

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

"நானும் பொம்மை நீயும் பொம்மை, நினைச்சுப் பார்த்தால் எல்லாம் பொம்மை" இப்படி ஒரு பாட்டுக் கேட்டிருப்பியள். ஆனால் அதின்ர அர்த்தம் என்னெண்டு யாரெண்டாலும் யோசிச்சிருக்க மாட்டம். ஆனாப் பாருங்கோ, "நீங்கள் என்ன யோசிக்கிறது; நானே காட்டிறன்" எண்டுதானாக்கும் கடல் வந்து விளையாடிவிட்டுப் போயிருக்கு.

அதுக்கும் ஒரு பேர் வச்சிருக்கிறங்கள் சுனாமியெண்டு பேரைக் கேக்கேக்க ஏதோ செல்லப் பேர் மாதிரித்தான் கிடக்கு. அதின்ர கோரமான முகம் இத்தினை அசிங்கமான தெண்டு நினைச்சுக்கூடப் பார்க்க ஏலாமக் கிடக்கு. உலகம் அழியப் போகுதெண்டு அடிக்கடி கதைச்சுக்கொள்ளுவினம். அப்பவெல்லாம் நான் நம்பயில்ல! இப்ப நம்புறேனுங்கோ.

பாட்டன் பூட்டன் எண்டு பல வருஷ காலமாக வாழ்ந்த வீடுவாசல்களும் உருண்டு பிரண்ட இடமும் சில நிமிசத்துக்குள்ள கண் முன்னாலயே காணாமல் போற தெண்டால்.... பாவம் குழந்தைப் பிள்ளையள் தாய் தகப்பனக் கடலுக்குப் பலி கொடுத்துக் போட்டு அநாதரவாக நிக்குதுகள். அதுகளின்ர எதிர்காலத்தை ஆண்டவன் எப்பிடி எழுதியிருக்கிறனோ. இயற்கையால அழிவு வாறதுதான். அதின்ர முகம் இத்தனை அகோரமானதெண்டு நினைக்கயில்லை யுங்கோ. பாதிக்கப்பட்ட பகுதியெல்லாம் அழுகை! அழுகை! அழுகை! அழுகையைத் தவிர வேறொண்டுமில்லை. ஆரிட்டப்போய் சொல்றது. ஆறுக்கு ஆறுதல் சொல்லிறது? பலியாகிப் போனவையளை புதைக்கக் கூட சுடுகாடு தாங்குதில்லை. ஒரே குழிக்குள் ஒண்டடியாய்ப் போட்டுப் புதைக்கிறதெண்டால் அந்தக் கொடுமையை விவரமாகச் சொல்ல ஏலாதுங்கோ.

இப்படி ஒரு மோசமான அனுபவத்துக் குள்ளயும் சில நல்ல விஷயங்களும் நடந்தது எண்டதுதான் லேசான ஆறுதல் தாற விஷயம். அதென்னெண்டு தெரியுமோ. பாம்பும் கீரியுமா நிண்ட அரசாங்கமும் புலிகளும் மக்களுக்கு உதவிற வேலைத்திட்டத்தில ஒண்டு சேர்ந்திருக்கினம். உடனடியாக மக்களுக்கு உதவுறதுக்காக ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கினமெண்டதுதான்.

எங்கட நாட்டு யுத்தமும் ஒரு வகையில சின்ன சுனாமிதானுங்கோ. அதுவும் கொஞ்சம் கொஞ்சமா ஆக்களையும், சொத்துக்களையும் அழிச்சுக்கொண்டுதான் இருக்குது.

பெரிய சுனாமியில பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுறதுக்காக இணங்கிப் போற இவையள், நீண்ட நாளாச் இருந்துகொண்டி ருக்கிற சின்னச்சுனாமியில இருந்தும் மக்களைக் காப்பாத்த வேணுமுங்கோ. ஜனாதிபதி திருகோணமலையில பெண் புலிகளைச் சந்திச்சுப் பாராட்டிப்போட்டு கை குலுக்கினவவாம். பாத்தியளோ! மக்களுக்கு உதவுற வேலையில நிக்கேக்க அவையள உற்சாகப்படுத்த வேணுமெண்டதை நிரூபிச்சுப்போட்டா, ஏற்கெனவே ஒரு கண்ணை இழந்திட்டாவெண்டதுக்காக அவ புலியளைக் கண்டு பயப்படயில்லையே. நெருங்கிப் போற தெண்ட தன்ர விருப்பத்தை அவா காட்டிப்போட்டா. விருப்பத்தோடை கையை நீட்டேக்க அதில பகையைப் பாராட்டாம இறுக்கிப் பிடிச்சுக்கொள்ள வேணுமுங்கோ.

- தவறெண்டு பாக்க போனா யார்தான் தவறு செய்யேல்லை. நூறு வீதம் சுத்தமானவை யளெண்டு ஒருத்தருமில் லையுங்கோ. நடந்ததுகளக் கிளறக் கிளற நாத்த மெடுக்கும். ஆக நடந்துகளை ஒரு ஓரமா வச்சுப்போட்டு நல்ல முடிவுகளைப் பற்றி யோசிக்கிறதுதான் புத்திசாலித்தன மெண்டு நினைக்கிறன். வெளிநாடுகளில இருந்து உதவுறதுக்காக வந்தவயளெல்லாம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய நல்ல தருணம் இதெண்டு நம்பிக்கை தெரிவிச்சிருக்கினம். அது மட்டும் உண்மையெண்டால் அவையளின்ர வாயில சீனியை அள்ளிப் போட வேணுமுங்கோ. அரசாங்கத்தோடை சேர்ந்து மக்களுக்கு உதவ முடியுமெண்டால் மற்ற அரசியல் சக்திகளோடையும் இணக்கத்தை ஏற்படுத்தி னால் எவ்வளவு நல்லது. சரி அவைய ளோடை கொஞ்சிக் குலாவ வேண்டாம். அவயள் சொல்லிற கருத்தைத் தன்னும் கேட்டால் எவ்வளவு நல்லது. சனத்துக்கு உதவுறதிலையும் நான் கீழ, நீ மேல யெண்டு கொடுக்குக் கட்டிறதும் அவ்வள வுக்குச் சரியெண்டு படயில்லை. யார் செய்தாலும் மக்களுக்குத்தானேயெண்டு மட்டுந்தான் நினைக்க வேணும், அதை விட்டுப் போட்டு இந்த நேரத்திலையும், நீ துரோகி, நான் தியாகியெண்டு கொடி பிடிக்கிறது. சரியில்லையுங்கோ. உந்த மாதிரி நெருக்கடியான நேரத்தில புலியளும் சரியா கஷ்டப்படுகினம். சனத்துக்கும் உதவினம். அது பாராட்டப்பட வேண்டியதுதான். அப்பிடியே மற்றவையளும் உதவி செய்ய வரயுக்க நெருக்கடி தராம இருந்திட்டால் இன்னும் சந்தோசந்தானே.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(06.01.2005 தொடங்கி 12.01.2005 வரை)

**சோதிட மாமணி தில்லை**

### இந்த வாரக் கிரக நிலை

தனு - சூரியன், புதன், வெள்ளி, மேடம் - இராகு, மிதுனம் - சனி, கன்னி - வியாழன், துலாம் - கேது, விருச்சிகம் - செவ்வாய், மகரம்.
சந்திரன் துலாம், விருச்சிகம், தனுசு, மகர இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.




**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நிலை கஷ்டம், பிரயாண மிகுதி, இனசன நன்மை, வீண் குறை கேட்டல், அன்னியர் சகவாசம், உத்தியோக சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.



**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)
தொழில் அலைச்சல், மனக் குழப்பம், அன்னியரால் உதவி, குடும்ப நன்மை, உத்தியோக சிக்கல், வீண் குறை கேட்டல், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.



**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)
தொழில் நிலை மேன்மை, உயர்ந்த நிலை, வெளியிட வாசம், அன்னியர் நட்பு, மனக் கலக்கம், உத்தியோக சிரமம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02



**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)
தொழில் நிலை மாற்றம், பாரிய முதலீடு, பெரியோர் நட்பு, கௌரவம், மனக் குறை நீங்கும், உத்தியோக நன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.



**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)
தொழில் நன்மை, புதிய தொழில் முயற்சி, செலவதிகம், வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.



**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)
தொழில் மகிழ்ச்சி, காரியானுகூலம், புதிய முயற்சி, குடும்ப சுகம், பலவிதப் பேறு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.



**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)
தொழில் நிலை உயர்வு, பண வரவு, மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை, உறவினர் உதவி, உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.



**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் நிலை உயர்ச்சி, காரியானுகூலம், மனக் குறை நீங்கும், இனசன நன்மை, கௌரவம், உத்தியோகச் சிறப்பு, மன மகிழ்ச்சி, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.



**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)
தொழில் அலைச்சல், பணச் செலவு, மனக் குழப்பம், பெரியோர் சகாயம், குடும்ப நன்மை, உத்தியோகக் கஷ்டம், வீண் மனஸ்தாபம், மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03



**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)
தொழில் நிலை நன்மை, முதலீட்டுக் கஷ்டம், மறைமுக எதிர்ப்பு, தேகசுகம் பாதிப்பு, குடும்ப சுகம், உத்தியோக நன்மை, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 05.




**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழில் நிலை மாற்றம், கடின உழைப்பு, அன்னியர் சகவாசம், காரியத் தடை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் சீற்றம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.



**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)
தொழில் நிலை நன்மை, பிரயாண மிகுதி, வீண் கஷ்டம், தேக சுகம் பாதிப்பு, அன்னியர் நட்பு, உத்தியோக சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.


# ஆராய்ச்சி முரசு




# சுனாமி 8.9

26.12.2004 உலக வரலாற்றில் ஒரு கறுப்பு தினம். உள்ளத்தை உலுக்கிய சுனாமி கடற் கோளானது பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தியது. இந்தோனேஷியா, சுமாத்ரா, பிலிபைன்ஸ், நிக்கோபார், அந்தமான்தீவு, மாலைதீவு, இந்தியா, இலங்கை, ஆகிய தென்கிழக்காசிய நாடுகளையே அதிகமாகத் தாக்கியது. இவ்வியற்கை அனர்த்தத்திற்கு இலக்கான நாடுகளில் உல்லாசப் பயணங்களை மேற்கொண்டிருந்த ஏனைய ஐரோப்பிய நாட்டவர்களும் பலியாகினர். இப்படியாக உலக நாடுகளைச் சேர்ந்த சுமார் 1,30,000 பேர் சுனாமிக்குப் பலியாகினர். தறபோது உதயமாகியிருக்கும் 2005ஆம் ஆண்டை முன்னைய ஆண்டுகளைப்போல் ஆடம்பரமாக வரவேற்க முடியாத அளவிற்கு துக்கம் ஒவ்வொருவரையும் ஆட்கொண்டிருந்ததைக் காணமுடிந்தது.

மேலே உலக வரைபடத்தில் சுனாமி தாக்கிய நாடுகளையும், கீழே சுனாமி எனப்படும் இராட்சத அலைகள் பூமி அதிர்வு ஏற்பட்ட இடத்திலிருந்து எப்படி உருவாகின்றது என்பதைக் காட்டும் படத்தையும், அதன்கீழே இந்தியாவின் மெரினா கடற்கரையை சுனாமி தாக்கும்போது பிடிக்கப்பட்ட படத்தையும், பக்கவாட்டில் இலங்கையில் சுனாமி தாக்கிய கரையோரப் பகுதியையும், பக்கத்தில் காலி மாவட்டத்தில் சுனாமியினால் தாக்கப்பட்டு அகதியாகிப்போன குடும்பமொன்றையும் காண்கிறீர்கள்.








பட உதவி – N.P. ரவீந்திரன்







மொறிடானிய சஹாரா பாலைவனத்தின் மேலாக எடுக்கப்பட்ட புகைப்படமே இதுவாகும். 50 கிலோ மீற்றர் (30மைல்கள்) விட்டம் கொண்ட பல வகையான வளையங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. எரிமலை வெடித்ததால் ஏற்பட்ட பள்ளம் என்றே முதலில் கருதப்பட்டது. ஆனால் இப்போது சிதைந்து போன மண்டபம் ஒன்றின் உயர்ந்த பகுதியென நம்பப்படுகிறது. இந்த வட்டமான கல்லின் மையம் அமெரிக்க விண்வெளி வீரர்களான ஜிம் மெக்டிவிக், எட்வைட் ஆகியோரால் 1965ஆம் ஆண்டு ஜெலிஸி - ஐஏ விண்களத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.




... அச்சகத்தில் ஜனவரி 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.